ராதனை
ாகிறாள் 80
பூக்கவில்லை 35
கை 55
175
று ஒரு இடம் 180
தன்றல் 90
கள் 85
கள் 75
தனிலவு 65
ப என்னைக் கொல்லாதே 55
ந்த உண்மை 55
ம் 105
ல்லை 85
90
40
80
65
75
55
85
ல (சாகித்ய அகடமி பரிசு பெற்றது) 150
ாகிறது 110
55
115
115
ல 70
ாம் 85
75
60
சைக்கிளி 50
90

வடக்கே ஒரு சந்திப்பு

1

சீரடி யாத்திரைக்குச் சென்னையிலிருந்து கிளம்பிய அவர்கள் கோஷ்டியில் பெண்கள் எட்டுப் பேர்—ஆண் துணைக்கு ஒன்பதாவது நபர் ரங்கையா. டாக்டர் ரேவதி தான் கோஷ்டியின் தலைவி.

ரங்கையா தமது குடும்பத்துடன் கிளம்பியிருக்கிறார். மனைவி, தாயார், இரண்டு பெண்கள் என அவர்கள் ஐவர். டாக்டர் ரேவதி தனது தோழிகளான சரோஜா, மரகதம் இருவருடன் வந்திருந்தாள். தனிமையையே வாழ்நாள் முழு வதும் துணையாக்கிக் கொண்டிருந்த சீதா, தனியாகத்தான் புறப்பட்டிருந்தாள்.

டாக்டர் ரேவதி ஓய்வு ஒழிவின்றி ஒரு வார காலமாக இந்த யாத்திரைக்கு வேண்டிய எல்லா விதமான ஏற்பாடு களையும் செய்து விட்டிருந்தாள். பகவான் ஸாயிநாதனை தரிசித்த பிறகு, திரும்பி வர டிக்கெட் ரிஸர்வேஷனுக்கு ரயில்வே மூலம் ஆமதாபாத்திற்கு தந்தியடித்து விட்டிருந் தாள். நோயாளிகளைக் கவனித்த நேரம் போக மீதி நேரத் தில் ஒவ்வொருவருக்கும் டெலிபோனில் பேசி, யார், யார் என்ன கொண்டு வர வேண்டும், எல்லாரும் காலை எத்தனை மணிக்கு எந்த இடத்தில் சந்திக்க வேண்டும் என்று முன்னதாகவே எச்சரித்து விட்டிருந்தாள். யாத்திரை கோஷ்டி யின் காலை டிபன் விநியோகத்தையும் அவளே ஏற்றுக் கொண்டிருந்தாள்.

பகல் சாப்பாடு, பங்களூர்க்காரி—மரகதம், 'பிவி பேளா அன்னா'வையும், தயிர் சாதத்தையும் பொட்டலமாகக் கொண்டு வருவதாக ஒப்புக் கொண்டிருந்தாள்.

பிற்பகல் காப்பிக்கு சரோஜா உபயம், மைசூர் பாகு, ஓமப் பொடி.

சீதா தான் இரவுச் சாப்பாட்டுக்காக, சுக்கா ரொட்டியும் கத்தரிக்காய் துவையலும், பழங்கள், பிஸ்கட்டுகளும் கொண்டு வர ஏற்றுக் கொண்டாள்.

ஆளுக்கு ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் (கான்) கொதித்து ஆறிய குடிநீரும், கூடவே பிளாஸ்டிக் டம்ளர்களும் கொண்டு வர உத்தரவாகியிருந்தது.

அவரவர்கள் படுக்க ஒரு ஜமக்காளம், தலையணை, போர்வை (பிப்ரவரி மாதம் என்றாலும் வடக்கே குளிரும்! சில சமயங்களில் பல்லைக் கிட்டும் குளிரும் உண்டு என்பது ரேவதியின் எச்சரிக்கை!) ஒரு கம்பளிச் சட்டையும் எடுத்துக் கொள்ளுமாறு கூறப்பட்டது. ரேவதி பல முறை சீரடிப் பயணம் செய்து பழக்கப்பட்டவள். அவளது உத்தரவிற்கு யாவரும் கட்டுப்பட்டனர்.

அவரவர்கள் பொருள்களை அவரவர்கள் தூக்கிக் கொண்டு நடக்கத் தயாராக இருக்க வேண்டும்! கூடிய வரை, மூன்று புடவைகளுக்கு மேல் தேவையில்லை. துவைத்துக் காய வைத்து உடுத்த சௌகர்யமான மெல்லிய துணிகளாகவே கொண்டு வரவும். ரேவதியின் புத்திமதிகளின்படியே கோஷ்டி நடந்து கொண்டது.

ரங்கையா குடும்பத்தார் முறுக்கு, அதிரசம், ரொட்டி, பிஸ்கட், பழ வகைகள் எனப் பெரிய மூட்டையையே கட்டிக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

ரேவதி பெட்டி, படுக்கை, சாப்பாடு மூட்டை இத்யாதி

களுடன் தன் மருந்துப் பெட்டியையும் மறக்காமல் மருந்துகளை நிரப்பி எடுத்துக் கொண்டு வந்திருந்தாள்.

அவளுக்கு எப்போதும் பிறரைப் பற்றிய நினைவு அதிகம்.

ஓடும் ரயிலில் இரு முறைகள் அவள் வேதனையில் துடித்த பெண்களுக்குப் பிரசவத்தில் உதவி இருக்கிறாள். பறந்த விமானத்திலே பணிப் பெண் திரை பிடிக்க, முதல் வகுப்புப் பகுதிக்குள்ளே ஒரு ஆண் குழந்தை பெறுவதற்கு ஒரு பெண்ணுக்கு டாக்டராகப் பணி புரிந்திருக்கிறாள். இந்த அனுபவங்களின் பயனாக அவள் எங்கே சென்றாலும் சோதனைக் குழாய் மருந்துப் பை சகிதம்தான் பிரயாணம் செய்வது வழக்கம்.

எழுபத்தைந்து பேர்கள் பகலில் உட்காரவும் இரவில் தூங்கவும் வசதியுள்ள பெட்டிகள் கொண்ட நீண்ட ரயில் அது. ரேவதி கோஷ்டியினருக்கு ஒரு பெட்டியின் நடுப் பகுதியில் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. ஜன்னல் அருகே ஆறு பேர் உட்காரவும்—இரவில் மடிக்கப்பட்டு பின்னால் கிடந்த நடுப் பலகையை நிமிர்த்தி, ஊஞ்சல் போல் மாட்டி விட்டால், ஆறு பேர் படுக்கவும் வசதியாக இருந்தது. மற்ற இரு பெண்களுக்கு, நடை பாதை அருகே ஜன்னல் ஓரமாக இரண்டு ஆசனங்கள் கிடைத்தன. மடித்தால் உட்கார நாற்காலியாகவும்—நீட்டினால் படுக்கையாகவும் மாறும் ஆசனம், மேலேயும் ஒருவர் படுக்க பலகை இருந்தது. பாவம் ரங்கையா! அவருக்குப் பக்கத்துப் பகுதியில் இடம் கிடைத்தது. பாஷையே புரியாத குஜராத்திக் கும்பல் ஒன்றில் வசமாக மாட்டிக் கொண்டிருந்தார் மனுஷன். இவரது பேச்சு அவர்களுக்குப் புரியாது; அவர்கள் பேசுவது இவருக்கு ''கஸ பிசா'' போலக் காதுகளில் விழுந்து கொண்டிருந்தது.

'பீச்' ஸ்டேஷனை விட்டு வண்டி புறப்பட்டது. பெட்டியே இரண்டு படும் அளவு உற்சாகத்தில் பெண்கள் பகுதியில் கூச்சலும் கும்மாளமுமாக இருந்தது. கொஞ்ச நேரத்தில் நா வறண்டு, அடிவயிற்றைப் பசி புரட்டவே, எல்லாரும் வர்யடைத்துப் போய்ச் சாப்பாட்டு மூட்டை களைப் பரிதாபமாகப் பார்த்தனர்.

அடுத்த பகுதியில் இருப்புக் கொள்ளாமல், ரங்கையா பலமுறை எழுந்து வந்து அவர்களை எட்டிப் பார்த்தார். முடிவில் ரேவதி கொணர்ந்திருந்த இட்டலி மூட்டையை அவிழ்த்தாள். பஞ்சத்திலே அடிபட்டவர்கள்போல் சீதாவைத் தவிர எல்லோரும் இட்லியிலும் எண்ணெய் குழைத்த மிளகாய்ப் பொடியிலும் எகிறி விழுந்தனர்.

சீதா ஒரே ஒரு இட்டலியை விழுங்கி விட்டு பிளாஸ் டிக் டம்ளரிலிருந்த தண்ணீரைக் குடித்தாள். தண்ணீர் கூட நெஞ்சுக்குள்ளே இருந்து கீழே இறங்க மாட்டாது போன்ற இறுக்கமான உணர்வு.

''உம்! சாப்பிடு. என்ன முழிக்கிறே?'' அன்புடன் டாக்டர் ரேவதி அதட்டினாள்.

ஒரு வருஷ காலமாகவே இறுக்க உணர்வுதான். மண்டையே வெடித்து விடும் போன்ற ஒரு அழுத்தம். யாரிடமும் சொல்லாமலே பல நாட்களாகத் தன்னுள் ளேயே புழுங்கிக் கொண்டிருந்தாள்.

ரங்கையாவின் இரு பெண்களும் காலேஜ் குமரிகள். ''சீக்கிரம் நல்ல இடத்தில் கல்யாணம் நடக்க வேணும்'' என்ற பிரார்த்தனை. அதன் பெருட்டு, தாயார், தன் இரு பெண்களையுமே கூடக் கூட்டி வந்திருந்தாள்.

ரங்கையாவுக்குப் புதிதாக ஆரம்பித்த வியாபாரம் நன்கு தழைத்தோங்க வேண்டுமென்ற கவலை. சீரடி நாதனைத் தரிசித்து அருள் பெற்றுப் போகக் கிளம்பி இருந்தார்.

அவரது தாயார் எழுபது வயதைத் தாண்டியவர். சமீபத்தில் ஒரு பெரிய அறுவை சிகிச்சையினின்றும் பிழைத்து எழுந்திருந்தார். சிகிச்சையின்போது மேற்கொண்ட வேண்டு தலையை நிறைவேற்றப் புறப்பட்டு விட்டார்.

மரகதம், சரோஜா இருவரும் இதுவரை சீரடி ஸ்தலத்தைப் பார்த்தவர்கள் இல்லை. அதன் மகிமையை மட்டும் கேள்விப்பட்டிருந்தனர்.

''போய் விட்டு வாருங்களேன்'' என அவர்களது கணவன்மார்கள், பெரிய மனதுடன் வீட்டிலிருந்து விடுதலை கொடுத்திருந்தனர். சமையல், வீடு என்ற பொறுப்பு களிலிருந்து சில நாட்கள் ஓய்வு. அத்துடன் கோவிலைத் தரிசித்த புண்ணியம். விடுவானேன். அவர்களும் கோஷ்டி யில் சேர்ந்து விட்டனர்.

டாக்டர் ரேவதி பல ஆண்டுகளாக ஸாயிநாதனை ஆராதிக்கிறவள். அவரது அற்புத சக்தியில் தீவிரமான நம்பிக்கையுடையவள். எத்தனையோ தட்வைகளில் கண வருடன் அவள் சீரடிக்கு யாத்திரை சென்றிருக்கிறாள். சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் அவளது கணவர் மாரடைப்பில் மறைந்து போனார். அதற்குப் பின்னர் அவள் வேலையும் வீடுமாகவே இருந்து விட்டாள்.

சில தினங்களுக்கு முன்னர் ஒரு நாள் விடியற்காலை கணவனுடன், சீரடிக்குக் கிளம்பியது போன்ற ஒரு கனவு. மேனி பதறி, கண்ணில் நீர் வழிய மறைந்து போன தன் இன்னுயிர் கணவனை நினைத்தபடி எழுந்து உட்கார்ந் தாள். அருகில் மேஜை மீது சட்டத்திற்குள் அடங்கியபடி, புன்னகைத்துக் கொண்டிருந்த அவரது படத்தை உற்றுப் பார்த்தாள்.

முப்பது வருடம் அவருடன் நடத்திய தாம்பத்திய வாழ்க்கையில், நெஞ்சத்தை விட்டு அகலாத இனிய

நினைவுகள் நீர்ச் சுனை போல குபுகுபுவென்று பொங்கி வர அவள் உணர்ச்சியிலே ஆடிப் போனாள்.

அவர் இறந்து விட்டால் என்ன? அவர் விட்டுப் போன நினைவுகள் நெஞ்சோடு ஒட்டிக் கொண்டிருக் கின்றனவே. அவைகளே துணையாக-அவள் மீண்டும் ஒரு முறை சாயிநாதனைத் தரிசிக்கப் புறப்பட்டால் என்ன? கேள்விக்குப் பதிலாக அவளும் புறப்பட்டு விட்டிருந்தாள்.

அந்தப் பெரிய பங்களாவின் அலங்காரமான பூஜை அறையில் வேலைக்காரி ஏற்றி வைக்கும் விளக்கெதிரே நின்று சற்று நேரம் வணங்குவதுடன் சரி. சீதாவிற்குக் கோவில் என்றோ, திருவிழா என்றோ வீட்டையும் வியாபாரத்தையும் விட்டு அகல முடியாத அளவு பொறுப்புகள். இத்தனை ஆண்டு காலம் அவள் தல யாத்திரை என்று எங்குமே போனதில்லை! இதுதான் முதல் முறை தெய்வ தரிசனத் திற்கு அவள் தொலைதூரம் கிளம்பி வந்தது.

கடந்த ஒரு வருட காலமாகவே அவளுக்கு உடலிலே தாங்கொணாத அசதி. நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்ததே ஒழிய குறையவில்லை. நாளுக்கு நாள் வயதும் அதிகரிக்கிறது. அசதியும் அதன் காரணமாக இருக்கலாம் என ஆரம்பத்திலே அசட்டையாக உதறி விடத்தான் செய் தாள்...ஆனாலும் உள்ளுக்குள்ளேயே உறுத்திக் கொண் டிருந்த அந்த நினைவை—வேதனையை அவளால் உதறவே முடியவில்லை. சாப்பாட்டில் நாட்டம் குறைந்தது. ஒப் புக்காக மற்றவர்களுடன் சாப்பாட்டு மேஜையில் உட்கார்ந் தாள். ஒரு பிடி எடுத்து வாயில் வைத்தாலும், தொண்டையை அடைக்கும் ஒரு பயங்கர உணர்வு. இரவிலே நாளடை வில் பால், மோர் என்ற அளவில் உணவு திரவ பதார்த்த மாகி விட்டது.

நுரை ரப்பர் மெத்தை, ஏ.சி. அறை, புரண்டு படுக்க வசதியான அகலமான படுக்கை. தலைமாட்டில் டெலி போன். அருகே வட்ட சிறு மேஜை மீது தூக்க மாத்திரை, தண்ணீர் கூஜா...எல்லாம் இருந்தும் உறக்கமின்றி படுக்கை மீது பல முறை புரண்டாள்.

கீழே ஹாலில் இருந்த வெளிநாட்டுக் கடிகாரம்... ஒன்று இரண்டு என்று இன்னிசை பரப்பி...மணியடிக் கும்போது...எண்ணிக் கொண்டே இரவின் முற்பகுதி முழுவதையும் கழிப்பாள். தன்னையுமறியாது விடியற் காலையளவில் சிறு கோழித் தூக்கம் கண்களை அழுத்த உறங்கி விடுவாள்.

''அம்மா! குளிக்க எல்லாம் தயாரா வச்சிருக்கு'' நினைவுபடுத்திக் கொண்டு, வேலைக்காரி காவேரி, கதவைத் தட்டி எழுப்பித் தொலைத்து விடுவாள்.

அதற்குப் பின் அவசரமாகக் குளித்து, உடுத்திக் கொண்டு பூஜை அறைக்குள் படங்களைப் பார்த்தும் பாரா மலும் கையெடுத்துக் கும்பிட்டு விட்டு...ஒரு இட்டலி அதற்குப் பின் அரைத் தம்ளர் காப்பி என அவசரமாக முடித்துக் கொண்டு, திருவொற்றியூரிலிருந்த தொழிலகத்தை மேற்பார்வையிட ஓட வேண்டும். அங்கிருந்து வேகமாகத் திரும்பி, டவுனில் உள்ள ஆபீஸ் அறைக்குப் போக வேண்டும்.

ஆபீஸ் அறைக்குள் அவள் சென்று அமர்ந்ததும் தலைமைக் கணக்கர் பின்னாலேயே தொடர்வார். நாள் முழுவதும் அவர் நீட்டும் பைல்களைப் புரட்டி, மூளையைக் கசக்கிக் கொண்டு, கண்காணித்து விட்டுக் கையெழுத்து இட வேண்டும். அவற்றை இரும்புக் கம்பிக் கூடைக்குள் அடுக்கி விட்டு, பகல் நேரம் பையன் கொணர்ந்து வைத்த

டிபன் ஸெட்டைத் திறந்து இரண்டு கரண்டியளவு சாதத்துடன் மோரை விட்டு பிசைந்து மென்று விழுங்கி விட்டு ரேவதி கொடுத்த அரை டஜன் மாத்திரைகளையும் அத்துடன் விழுங்கி...நாலு மணியளவில் ஆபீசை விட்டு வீட்டிற்கு விரைந்து மாடியில் காலை மாலை பத்திரிகை சூழ, 'ஸிட் அவுட்'டிலேயே நீல வானத்தையும் பத்திரிகை யையும் புரட்டிக் கொண்டு உட்காருவாள். இருட்டியதும் மறுபடியும் தேவைப்பட்டால் ஒரு சுக்கா ரொட்டி, இல்லையேல் பால் அல்லது மோர்...அரை டஜன் மாத்திரை கள், ஒரே வாயாக விழுங்கி விட்டு படுக்கையில் புரளும் போது ''சே! சே!'' இதென்ன வாழ்க்கை என்ற பயங்கர அலுப்பு நெஞ்சை அடைக்கும்.

''ஐயோ கடமை தவறி விட்டோம்'' என்ற மனச் சாட்சியின் கூக்குரல்...''எங்கே போவேன், யாரைக் கேட்பேன்?'' என்று ஆற்ற மாட்டாது எழும் துன்பத்தின் கனம் எல்லாம் அவளைக் குதறிப் பிடுங்கின.

பாறாங்கல் போல் குற்ற உணர்வுகள் நெஞ்சை அடைக்கப் பொங்கி வரும் அழுகையைக் கட்டுப்படுத்த சிரமப்பட்டபோது சின்ன விஷயத்திற்கெல்லாம் பெரிதாகக் கோபம் வந்தது. வார்த்தைகளைக் கொட்ட முடியாமல், மனத்திற்குள்ளேயே அடைத்துக் கொண்டு பொறுமை யாக இருக்க முயற்சித்தபோதுதான் தலை சுற்றி மயக்கம், நெஞ்சுப் படபடப்பு என்று அடிக்கடி வரத் துவங்கியது.

ஒரு நாள் ஏ.சி. அறையிலேயே அவளுக்கு மயக்கம் வந்து விட்டது.

''என்னம்மா?'' பதறிப் போனான் ஆபீஸ் வேலையாள் கதிர்வேலு. பல ஆண்டுகளாக அவளது ஆபீஸிலேயே வேலை பாக்கிறவன். அரை நிஜாரும் அழுக்குச் சட்டையு

மாக வந்தவன், இப்போது பேரன் எடுத்து விட்டிருந் தான். வெள்ளை வெளேர் என்ற ஆபீஸ் சீருடையில் வரி வரியாகப் போட்டியிட்ட நரையும் தலையுமாகக் கம்பீர மாகத்தான் இருந்தான். நெஞ்சு நிறைய நன்றியுணர்வு. ஓடிப் போய் குளிர்ந்த நீரை டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து மேஜை மீது வைத்தான்.

ஒரே வாயாக நீரைக் குடித்தபோதுதான் அவளுக்குச் சற்று நிதானம் வந்தது. ''ஒண்ணுமில்லே கதிர்வேலு வண்டியைக் கொண்டு வரச் சொல்லு?'' மெல்ல எழுந்து அறைக்குள் இருந்த கண்ணாடி ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள்.

மூன்றாவது மாடி ஜன்னலிலிருந்து பார்த்தபோது தெருவில் மனிதர்கள் சாண் சாணாகக் குட்டையாகி விட்ட வர்கள் போல்—ஜோடி ஜோடியாக நடந்து செல்லும் காட்சி. அலுப்புடன் திரும்பினாள்.

ஜோடி—என்பதன் அர்த்தமே புரியாது—அறுபத் திரண்டு வயதை ஓட்டி விட்டோமே என்ற திகைப்பிலே ஏற்பட்ட அதிர்ச்சியை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

''உனக்குத் தனிமைதான் துணை'' என்று உள்ளத்து உணர்வுகளுக்கு ஒரு கொடும் சிறைத் தண்டனை விதிக்க அவள் செய்த குற்றம்?

2

சில தினங்களுக்கு முன்தான் சீதாவின் பிறந்த நாள் வந்தது. பிப்ரவரி ஏழாம் தேதியை அவள் உயிர் பிரியும் வரை மறக்க முடியுமா?

அப்போது அவளுக்கு வயது பத்து...வாய்க்கால் கரை ஓரம் கொடுக்காய்ப் புளி காய்களை, நீலகண்டன் பறித்துக்

கொடுக்க, அவளையொத்த வயதுப் பெண்கள் வாரி எடுத்துப் பாவாடை மடிப்பிலே குவித்துக் கொண்டிருந்தனர்.

தறுதலை, தடிப் பயல், ஊர் சுற்றி, உதவாக்கரை, துஷ்டன் எனப் பல பெயர்களை வாங்கிக் கட்டிக் கொண்டிருந்த அடுத்த வீட்டு அலமேலு அம்மாளின் மகன் நீலகண்டனை அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும். ஐந்து வயதிலிருந்து அவளுக்கு அவன் உற்ற தோழன்.

''நீலு! எனக்குப் பன்னீர் பூ பறிக்கக் குடுடா...நீலு! இந்தக் குடம் கனமா இருக்கு, சித்த தூக்கிண்டு வாடா'' அவள் கேட்டதையெல்லாம் தடை சொல்லாமல் செய்து விடுவான் அவன். அவள் ஒருத்திக்குத்தான் அப்படி உதவியும் செய்வான்.

மற்ற சிறுமியர்கள் அவனை 'அடா' என்று கூப்பிட்டால் தொலைந்தது! கோபம் பொத்துக் கொண்டு வந்து விடும்.

''நேத்து முளைச்சு மூணு இளை விடலே, என்னைப் போடா வாடான்னு கூப்பிடறே? பல்லைத் தட்டிப் பரணியிலே போடுவேன். ஜாக்கிரதை'' உறுமி விட்டு ஓங்கித் தலையில் ஒரு குட்டுக் குட்டி விட்டுப் போய் விடுவான்.

''யாரு அந்தக் கடங்காரன் நீலுவா உன் தலையில் குட்டினான்?' வரிந்து கட்டிக் கொண்டு குட்டுப்பட்டவளின் தாய் சண்டைக்கு வந்து விட்டாலோ, அனல் தெறிக்கும் அவன் கண்களில்...

என்னென்னவோ கேட்க நினைத்து ஓடோடி வந்தவள் ''ஏண்டாப்பா நீலு? குழந்தையை எதுக்கப்பா அடிச்சே?'' மென்று விழுங்குவாள் பயத்துடன்.

''மட்டு மரியாதையோடு பேச உங்க பொண்ணுக்குக்

கத்துக் குடுங்கோ, இல்லாட்டா நாளைக்கு அவதான் கஷ்டப்படுவா'' துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு, காலில் தென்பட்ட கல்லை எட்டி உதைத்தபடி மிடுக்காகச் சென்று வடுவான்.

பதினைந்து வயதிலேயே பயல் அந்த வட்டாரத்து மனிதர்களின் கண்களில் ஒரு பயங்கரவாதியாகத்தான் தென்பட்டான்.

ஊருக்கே...தெருவிற்கே நியாயம் வழங்கும் மிராசுதார்...பணப் பசையுள்ள நடேசன்கூட அவனைப் பற்றி உள்ளூர நடுங்கினார்.

அந்த நீலு...அவளுக்காக, நல்ல முற்றின வெடித்துச் சிவந்திருந்த கொடுக்காய்ப் புளிக் காய்களைப் பறித்துப் போட்டுக் கொண்டிருந்தான்.

''சீதா! அடி சீதா...வீட்டுக்கு வா...இங்கே என்ன பண்ணிண்டு இருக்கே?'' அண்ணாவின் குரல் சீறியது. திகைத்துப் போன சீதா பாவாடையை முழங்கால் வரை இழுத்து விட்டுக் கொண்டு அவன் பின்னால் வீட்டிற்கு ஓடினாள்.

''பாவிப் பொண்ணே எங்க தலையில் கல்லைப் போட்டு விட்டியேடி?'' அம்மா தலையில் அடித்துக் கொண்டு அவளைப் பார்த்து ஓங்கி அழுதபோது அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

பாவாடை மடிப்பிலே மூட்டையாகச் சுமந்திருந்த காய்கள் நாலா புறமும் சிதற, அவள் கூடத்து நடுவிலே வந்து நின்றாள். அக்கிரஹாரத்துப் பெண்கள் அத்தனை பேரும்—அந்தச் சின்னஞ்சிறு வீட்டில் கூடியிருந்தனர்.

''உன் தலையெழுத்து இப்படியாச்சே'' என்று கூவி யழுது ஒப்பாரி வைத்தபடி, கோடி வீட்டுப் பாட்டி அவளை அணைத்துக் கொண்டபோது நடுநடுங்கி விட்டாள்.

''உன் புருஷன் செத்துப் போயிட்டாண்டி'' அங்கலாய்த்தாள் ஒருத்தி. ''இப்படி ஒரு துக்கிரிப் பொண்ணு பிறந்தாளே சபாரஞ்சிதக் குருக்களுக்கு. இழுத்துண்டு போய் தலையிலே ரெண்டு குடம் ஜலத்தைக் கொட்டுங்கோ'' யாரோ அதட்டினார்கள். அவளைப் பரபரவென ஒருத்தி இழுத்து கிணற்றடியில் உட்கார வைத்தாள். பச்சைத் தண்ணீர் சில்லென மேலே விழுந்த போது உடல் வெடவெடக்க, ''ஐயோ என்னை விடுங்கோ'' என்று அவள் அலறிய அலறல் எட்டு வீடுகளுக்கு அப்பால் எதிரொலித்தது.

எத்தனையோ இரவுகள்—அத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தத் திகில் நிறைந்த காட்சி கனவில் வந்து ''ஐயோ அப்பா'' என்று அவள் அலறித் துடித்து எழுந்து உட்கார்ந்திருக்கிறாள்.

உடல் முழுவதும் வியர்வை கொப்பளிக்க—நெஞ்சு தடதடவெனத் துடிக்க, நடுங்கியபடி விளக்கைப் போட்டு விட்டு, ''ஓ! கனவுதானா'' என்று உணர்வதற்குள் ஒரு சித்திர வதையையே அனுபவித்து விடுவாள். அப்படி மனதில் ஆழமானதொரு புண்ணின் தழும்பு, காலத்தினால் மறையாத அடையாளமாக, அவளை அவ்வப்போது பின்னோக்கிச் சென்று, பழைய நினைவுகளை எண்ணிப் பார்க்கச் செய்தது உண்மைதான்.

நினைவில் நிழல்போல் நடந்த கல்யாணம் அது. அப்பாவுடனும், அம்மாவுடனும் உறவினர் வீட்டுக் கல்யாணத்திற்காக அடுத்த ஊருக்கு அவளும் போய் இருந்தாள். அங்கேயே திருமணப் பேச்சு நடந்தது. பந்தக் காலைப் பிடித்துக் கொண்டு நாலு மூலைத்தாச்சி விளையாடிக் கொண்டிருந்த பச்சைக் குழந்தையை மணையில் உட்காரச் சொன்னார்கள். உட்கார்ந்தாள். செலவோடு

செலவு போகட்டும் என்று சிக்கனத்தை உத்தேசித்து, தன் சகோதரி வீட்டுக் கல்யாணத்திலே அதே பந்தலில் அதே முகூர்த்தத்தில் உறவு விட்டுப் போகக் கூடாது என்று... மனைவியின் ஒன்று விட்ட அண்ணன் பிள்ளை பத்து வயதுச் சிறுவனுக்கு அவளைக் கன்னிகாதானம் செய்து விட்டிருந்தார் சபாரஞ்சிதக் குருக்கள்.

ரோஜா மாலை மணக்க, சந்தனம் தோய்ந்த கரங்களை முகர்ந்தபடி, மகிழ்ச்சியுடன் அப்பா மடியில் சீதா உட்கார்ந்திருந்தபோது, அந்தச் சின்னப் பையன் அவளது கழுத்திலே தாலிச் சரட்டைக் கட்டினான். அது அவளுக்கு ஒரு விளையாட்டாக இருந்தது. அப்போதைக்கு ஒரு வேடிக்கை என எண்ணினாள்.

எதிர்வீட்டு ராமன் எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தார். தோண்டியில் நீரை முகர்ந்து கொண்டு வாய்க்காலிலிருந்து அவள் தெருவில் நுழைந்ததும்...ராமன் தேள் கொட்டி விட்டது போல் குதித்தார்.

''இந்தப் பீடை எதிர்ப்பட்டு விட்டதோ இல்லையோ? போன காரியம் உருப்பட்டால் போலத்தான்'' இரைந்து பேசினார். ஆத்திரம் அவர் முகத்தில்.

சீதா திகைத்துப் போய் விட்டாள். எல்லாப் பெண்களைப் போல் வீட்டுக்குக் குடிக்க வாய்க்கால் தண்ணீர் எடுத்து வந்தவள் என்ன குற்றம் செய்தாள்—அந்த மனிதர் ஏன் இப்படி ஆவேசக் கூத்தாடுகிறார்? வியப்பும், கோபமும், அழுகையும் போட்டி போட்டுக் கொண்டு வந்தன.

அம்மாவிடம் சொன்னபோது அம்மா படீரென்று தலையில் தானே-ஓங்கி அடித்துக் கொண்டாள்.

''இனி வாழ்க்கை முழுக்க இந்த ஏச்சுத் தாண்டியம்மா—காலங்கார்த்தால வேளையில் உன்னை யாரு

ஜலம் கொண்டு வர வாய்க்கால் கரைக்குப் போகச் சொன்னது?'' கோபித்துக் கொண்டாள்.

அவள் செய்த பிசகென்ன? ஏன் இப்படிப் பார்த்தவர்கள் எல்லாம் கண்டு மிரண்டு பேசுகிறார்கள்? எவரும் விளக்கம் கொடுக்க முன் வரவில்லை.

அந்தி வேளையில் அவள் மற்ற பெண்களுடன் கோவிலுக்குப் போவதுண்டு. இப்பொழுதெல்லாம் மற்றப் பெண்கள் யாரும் அவளிடம் அதிகம் நெருங்கிப் பழகுவதில்லை. கண்டும் காணாதவர் போல தலை மறைவாகினர். ஏன்? ஏன்? தனக்குள்ளேயே கேட்டுக் குழம்பிக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் காலை வாய்க்கால் கரையில் வேலங் குச்சியைப் பற்களிடுக்கில் கடித்துக் கொண்டு வரப்பு மீது எதிர் பக்கமாக வந்து கொண்டிருந்தான் நீலகண்டன்.

கிணற்றடியில் குளித்து விட்டு, விடியுமுன்பே தண்ணீர் எடுக்க வந்திருந்தாள் சீதா.

''டேய் நீலு'' வேலங்குச்சியைச் சட்டென கையில் எடுத்துக் கொண்டு வியப்புடன் திரும்பினான்.

''பாண்டி ஆடக் கூட இப்போல்லாம் வாசலுக்கே வரதில்லையே, ஏன்?'' கேட்டான் அவன்.

''அம்மாதான் இனிமே நான் வாசல்லே வந்து விளையாடப் படாதுன்னுட்டா. எதிர் வீட்டு ராமு மாமா நேத்து என்னைத் திட்டினார். நான் எதிரே வந்தது தப்பாம். ஏண்டா நீலு! நீ சொல்லு. இப்ப திடீர்னு எல்லாரும் என்னை ஏண்டா கரிச்சுக் கொட்றா? நான் என்ன செஞ்சேன்?''

பற்குச்சியைக் கோபத்துடன் வீசி அப்பால் போட்டு விட்டு வாய்க்காலில் இறங்கி வாயைக் கொப்பளித்துக் கழுவிக் கொண்டான் அவன்.

''நீ ஒண்ணும் செய்யலை. உங்கப்பாதான் பிசகு செய்தார்.''

''எனக்குப் புரியலியே!''

''அந்தப் பிள்ளைக்குக் காச நோய். ஊரே தெரிஞ்ச சங்கதி. உறவும், பணமும் போய்விடக் கூடாதேன்னு உங்கப்பா உன்னை அவசர அவசரமா அவனுக்குக் கல்யாணம் செஞ்சு வச்சிட்டார். அவன் செத்துப் போனான். இப்போ நீ விதவையாயிட்டே.''

''அப்படின்னா!''

நீலகண்டன் உதடுகள் துடித்தன. ''நீ யார் முன்னாலேயும் இனிமே வரக் கூடாது. யாரோடயும் பேசக் கூடாது. இன்னும் கொஞ்ச நாளிலே...'' அவனுக்கு மேலே பேசவே பிடிக்கவில்லை. கண் கலங்க தன்னைப் பரிதாபமாகப் பார்த்தபடி நின்ற அந்தப் பெண்ணைப் பார்க்கவே அஞ்சியவன் போல மடமடவென மேலே ஏறி வரப்பின் மீது நடந்து மறைந்து விட்டான்.

இன்னும் கொஞ்ச நாளில் என்ன நடக்கும்? நீலுகூட சொல்ல மாட்டேங்கறானே? தவித்தாள் அவள்.

அன்று மாலை வீடு திரும்பிய அப்பா மிகவும் கோபமாக இருந்தார். முற்றத்திலே காலைக் கழுவிக் கொண்டு குறட்டின் மீது உட்கார்ந்தவர், ''மீனா! இங்கே வா!'' உரக்க அம்மாவைக் கூப்பிட்டார். கை வேலையைப் போட்டு விட்டு ஓடி வந்தாள் அம்மா.

''இந்த உதவாக்கரைப் பயல்...நமக்கு வீணான விரோதத்தைக் கொண்டு வந்து சேத்துடுவான் போல இருக்கே. அலமேலு அம்மாளை நீ கொஞ்சம் எச்சரிக்கை கொடு. ஆமாம் சொல்லிட்டேன்'' உறுமினார்.

''நீலகண்டனையா சொல்றேள்! என்ன பண்ணினான்?''

''பானையும் சட்டியும் பண்ணினான்! நாள் முழுக்க ஆதாரம், விவகாரம் ஏதுமில்லாம கண்டவங்க வீட்டுக் குள்ளே எல்லாம் போய் பேசிண்டு வெட்டிப் பொழுதைப் போக்கறது போறாதுன்னு—நம்ம வீட்டு விஷயத்திலே யும் தலையிட ஆரம்பிச்சுட்டான்.''

அம்மா விழித்தாள்.

''எதிர் வீட்டு ராமுவைப் போய் இவன் இல்லாத கேள்விகள் எல்லாம் கேட்டிருக்கான். நான்தான் ஏவி விட்டிருக்கேன்னு நினைச்சு அந்த மனுஷன் கச்சை கட்டிண்டு என்கிட்ட சண்டைக்கு வந்துட்டார்...ஊர்ல நாலு பேர் தயவில் வாழறவன் நான். என் பொழைப்பில் மண்ணை வாரிப் போடக் கிளம்பிட்டான்-கிராதகன் நீலு...''

''அப்படி என்னதான் சொன்னானாம்?''

''வயசு ஆச்சே ஒழிய உமக்கு விவேகமே இல்லை. பச்சைக் குழந்தை சீதா. அவள் எதிர்ப்பட்டது அபசகுனம்னு சொன்னீராமே. எத்தனை திமிர் உமக்கு. உம்ம மகளுக்கு இந்தக் கஷ்டம் நேர்ந்திருந்தா அப்படிப் பேச மனசு வருமா?''ன்னு கேட்டு விட்டான்.

''இவன் ஏன் தலையில் அட்சதையை போட்டுண்டு நமக்கு வக்காலத்து வாங்கப் போறான் மடையன்.''

''அவனைச் சொல்லிக் குத்தமில்லை. உன் பொண்ணை அடக்கி வைக்க உனக்குத் துப்பு இல்லே, சதா அவனோட என்ன பேச்சு?'' கத்தினார்.

உள்ளே திரும்பிய அம்மா, மூலையில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்த சீதாவின் கூந்தலைப் பிடித்து ஆத்திரத் துடன் இழுத்தாள். கணவரிடம் எதிர்த்துப் பேச முடியாத எரிச்சலை அவள் எப்பொழுதும் குழந்தைகளிடம் காட்டு வது வழக்கம்.

''அந்தத் தடிப் பயலோட இனிமே பேசினே மென்னியை முறிச்சுடுவேன். கழுத்திலேதான் பாம்பைச் சுத்திண்டு பிறந்தே...சின்ன வயசிலே வீணாய்ப் போயிட்டே. அது போறாதுன்னு எங்களுக்கு அவமானத்தை வேற தேடிக் குடுக்கப் புறப்பட்டுட்டியே? வீட்டு வாசப்படி தாண் டினே...காலை ஒடிச்சுடுவேன் ஒடிச்சு...''

அதற்குப் பின்னர் அவள் வீட்டுக்குள்ளே சிறை யானாள்.

கன்னத்திலே உருண்ட கண்ணீரை சீதா துடைத்துக் கொண்டாள்.

''என்ன ஆன்டி? கரி விழுந்திடுச்சா?'' கேட்ட படியே, படித்துக் கொண்டிருந்த பார்பரா கார்ட்லண்டை மூடி விட்டு அருகில் நெருங்கி வந்தாள், ரங்கையாவின் மூத்த பெண் பி.எஸ்.ஸி. இறுதி ஆண்டு மாணவி ரேகா.

''ஆமாம்! ரயில் கரி'' சட்டென எழுந்து மெல்ல நடந்து கோடியிலிருந்த 'வாஷ் பேஸின்' அருகே சென்றாள் சீதா. முகத்தைக் கழுவி, இடுப்பில் தொங்கிய கைக்குட்டை யால் துடைத்தபடி மேலே தெரிந்த கண்ணாடியில் பார்த் தாள்.

அங்குமிங்குமாக ஒன்றிரண்டு இழைகள் நரை யோடிய கூந்தல் லேசாகச் சுருக்கம் விழுந்த முகமும் மென்மையான பார்வையுமாக கண்ணாடிக்குள் தெரிந்த சீதா...சட்டெனப் புகைப் படலத்துக்குள் மறைந்தாள்.

பளிச்சென நெற்றியிலே குங்குமப் பொட்டை வைத்துக் கொண்டு திருட்டுத் தனமாக அழகு பார்த்து விட்டு அம்மாவின் காலடி ஓசை கேட்டு பரபரப்புடன் அதை அழித்து விட்டு, வெறுமையான நெற்றியை ஏக்கத்துடன் பார்த்த சிறுமி சீதா...கண்ணாடிக்குள் தெரிந்தாள்...தூக்கி

வாரிப் போட்டது அவளுக்கு; இதென்ன பலவீனம்? கொஞ்ச காலமாகவே கடந்து போன கசப்பான நினைவுகளிலே நீந்திக் கொண்டு தனக்காகவே பரிதாபப்படும் கோழை மனம்...சே! சே! தன்னையே கடிந்து கொண்டு அவள் வேகமாகத தன் இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

'தடக்! தடக்!' என்று தண்டவாளம் நாதமிசைக்க வண்டி வேகமாகப் பறந்து கொண்டிருந்தது. அதே வேகத்தில் மலைத் தொடர் எதிர்ப்புறமாக நகர்வதைக் கவனித்த ரங்கையாவின் இளைய மகள் நிஷா பி.ஏ. மாணவி, மடியில் பிரித்து வைத்துக் கொண்டிருந்த சினிமா பத்திரிகையை மூடி விட்டு ''ஆன்டி! அது என்ன மேற்குத் தொடர்ச்சி மலையா?'' என்று கேட்டாள்.

''அப்படித்தான் நினைக்கிறேன். ரொம்ப அழுத்திக் கேட்காதே. பூகோளத்தில் நான் ரொம்பவும் வீக்...'' சிரித்தாள் சீதா.

''டாக்டர் ரேவதி ஆன்டி சொல்லி இருக்காங்க. நீங்க லிட்ரேச்சரில் ரொம்பக் கெட்டிக்காரங்களாம். ஏன் ஆன்டி? 'ஈஸ் திஸ் பேஸ்...தட் பாண்ட் தி டாப்லஸ் டவர்ஸ் ஆப் இலியம்' இது எங்கே வருது?''

''நான் படிச்சு எத்தனை காலமாயிட்டுது. இப்ப போய் 'குவிஸ்' புரோகிராம் வைக்கிறியே, இது நியாயமா?''

தூங்கி வழிந்து கொண்டிருந்த பாட்டி பெருந்தேவி உள்பட எல்லோரும் சிரித்தனர். அப்பொழுதுதான் மரகதம் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். ''மணி பன்னிரெண்டரை. எல்லோரையும் கூப்பிடுங்க. என் 'பிஸிபேளா' மூட்டையை அவிழ்க்கப் போகிறேன்'' வேடிக்கையாகக் கூவினாள்.

பகல் பொழுதும் சீதாவால் மற்றவர்களைப் போல சாப்பிட முடியவில்லை. ஒரு வாய் தயிர் சாதத்துடன்

மீதியைப் பொட்டலத்துடனே ஜன்னல் வழியே வீசி எறிந்து விட்டாள்.

பிற்பகல் டிபன் வேளையின்போது சரோஜாவின் ஓமப் பொடியையும் மைசூர் பாகையும் எல்லோரும் ரசித்தனர். ஆனால், சீதாவால் ஒரு சிறு விள்ளலைக்கூட வாயில் போட முடியவில்லை.

இரவு சுக்கா ரொட்டியுடன் சாப்பாட்டு மூட்டையின் அளவு குறைந்தது. எல்லோர் வயிறும் நிறைந்து விட்டது. அத்துடன் உறக்கமும் தொடரவே நடுப் பலகையைத் தூக்கி மாட்டி விட்டு அவரவர்கள் படுக்கையை விரிக்க ஆரம்பித்தனர். ரங்கையா அடுத்த பகுதி மேல் பலகையில் ஏறிக் கொண்டவர், சில நிமிடங்களில் நித்திரா தேவி வசப்பட்டு விட்டார்.

ஆளுக்கொரு கதைப் புத்தகத்துடன் மேல் பலகை மீது படுத்திருந்த ரேகாவும், நிஷாவும் எதிரும் புதிருமாகப் படுத்து விட்டனர். கொஞ்ச நேரத்தில் படிக்க முயற்சித்து முடியாமல் விளக்கை அணைத்து விட்டுப் போர்வையை இழுத்து மூடிக் கொண்டு தூங்க ஆரம்பித்தனர்.

டாக்டர் ரேவதிக்கு அளவுக்கு மீறிய களைப்பு. கீழ்ப் பலகையில் சீதாவிற்கு எதிரே படுக்கையை விரித்தவள் ''விடியற்காலை நாலு பதினைஞ்சுக்கு மன்மாட் ஸ்டேஷனில் வண்டி நிற்கும். தூங்கிக் கோட்டை விட்டுடாதீங்க. யாரு முழிச்சிண்டாலும் மத்தவங்களை எழுப்ப மறக்காதீங்க. ஏன்னா, இருபது நிமிஷம்தான் வண்டி அங்கே நிற்குமாம். நம்ம பொருள்களைத் தூக்கிண்டு சட்டுனு இறங்கணும்'' என்று எச்சரித்து விட்டுக் கண்களை மூடிப் படுத்தாள். சில வினாடிகளில் ஆழ்ந்த உறக்கம் அவளுக்கு.

நடைபாதைக்கு மேல் கூரையில் நீல விளக்கின் லேசான ஒளி. ஜன்னல் வழியே வீசிய குளிர் காற்று

உடலை நடுக்கியது. போர்வையை தலை வரையில் இழுத்து விட்டுக் கொண்டாள் சீதா. உறக்கம் வர மறுத்தது. அது சமயம் வேறு பகுதியிலிருந்து கழிவு அறைக்குப் போய் விட்டுத் திரும்பிய ஒரு பெண்ணின் மீது அவள் பார்வை பட்டது. திக்கென்ற பயங்கர உணர்வில் சட்டெனக் கண்களை மூடிக் கொண்டு விட்டாள்.

தலையை மழித்துக் கொண்டு முக்காடு இட்டு, உடல் முழுவதும் வெள்ளைப் புடவை போர்த்திக் கொண்டு சென்ற அந்தப் பெண்மணியைப் போலத்தான்...உடலெல்லாம் நடுங்க கண்களில் லேசாகத் துளிர்த்த கண்ணீரை அவள் சமாளித்தாள்.

3

எதிரே படுத்திருந்த டாக்டர் ரேவதியை உற்றுப் பார்த்தாள் சீதா. இரு குழந்தைகளின் தாயாக நிறைவுடன் வாழ்ந்தவள் ரேவதி. கொஞ்ச காலத்திற்கு முன்னர் தான் விதவையாகி விட்டவள். நெற்றிப் பொட்டையும் கூந்தலில் சூடிய மலரையும் அவள் ஒதுக்கி விடவில்லை.

''என் கணவர் பெண்கள் மேற்கொள்ளும் விதவைக் கோலத்தை வெறுப்பவர். அவருக்குப் பிடிக்காததை அவர் இறந்த பின்னர் நான் ஏன் ஏற்க வேணும்? எப்போதும் போலவே இருக்கிறேன்'' என்று விளக்கம் கொடுத்தாள். அவள் இந்தக் காலத்துப் புரட்சி மனப்பான்மை கொண்ட பெண்.

முக்காடிட்டுக் கொண்டு, சற்று முன் சென்ற பெண் மணி, பழங்காலத்து கொள்கைகளில் ஊறிப் போனவள். அந்தப் பெண்ணைப் போலவேதான் சீதாவும் இருந்திருக்க வேண்டியவள். அந்த அலங்கோலத்தினின்று அவள் தப்பினாளே, அதை நினைத்தாலே பதைபதைத்தது அவளுக்கு.

ரங்கையாவின் தாயும் விதவைதான். ஆனால், தலை முடியைச் சீவி—கோடாலி முடிச்சிட்டுக் கொண்டிருந்தாள். வெளிர் நீலப் புடவையும் வெள்ளை ரவிக்கையும் உடுத்தியிருந்தாள். இவளது வெறும் கழுத்தும் விபூதி பூசிய நெற்றியும்தான் விதவை என்பதன் அடையாளங்கள்.

சீதா...வேண்டாம் என்ற வைராக்கியத்தில்தான் பூவைத் துறந்து விட்டிருந்தாள். மற்றபடி நெற்றியில் மிகச் சிறிய அளவில் கறுப்புச் சாந்துப் பொட்டு...கழுத்தில் மெல்லிய சங்கிலி—காதுகளில் வைரக் கம்மல், இடது கையில் கடிகாரம், வலது கையில் வளையல்கள் இடையே கனமான காஞ்சிபுரம் பட்டுச் சேலை—அதே நிறத்தில் ரவிக்கை என்று அந்தஸ்திற்கேற்ற அலங்காரத்தில் இருந்தாள்.

ஆபீஸ் அறையின் வாசலில் மிஸ் சீதா என்ற பெயர்ப் பலகையைப் படித்தவர்களுக்கு, கல்யாணமே ஆகாமல் காலத்தை ஓட்டி விட்டவள் என்ற எண்ணத்தைத்தான் அது கொடுத்தது. தன் வாழ்வில் ஏற்பட்ட துன்பம் அதனால் ஏற்பட்ட திடீர் திருப்பம்—எல்லாவற்றையும் அவள் ஒளிவு மறைவின்றி, தன் சினேகிதி டாக்டர் ரேவதியிடம் சொல்லியிருந்தாள்.

அதனாலேயே அன்று அவளுக்கு மயக்கம் வந்த போது வண்டியில் ஏறி நேரே ரேவதியின் மருத்துவ மனைக்கே போய் விட்டாள்.

''டாக்டர், என்னை நல்லா பரிசோதிச்சுப் பாருங்க. எனக்கு ஏன் அடிக்கடி இப்படி ஒரு மயக்கம்...?''

ரேவதி உடனடியாகப் பரிசோதித்தாள். திருப்தி அடைய வில்லை. ஈஸிஜி, ரத்தப் பரிசோதனை முதலிய சகல பரிசோதனைகளுக்கும் அவளை உட்படுத்தினாள். இருதய வியாதி நிபுணரிடம் அவளை அழைத்துச் சென்று அவரது ஆலோசனையையும் கேட்டு வந்தாள்.

''தன்னைப் பற்றியே சிந்தித்து உணர்ச்சி வசப்படு
வதால் தற்காலிகமாக இரத்த அழுத்தம் மேலோங்கிப்
போகிறது. அதனால்தான் மயக்கம், மற்றபடி உடலில் வேறு
ஒரு கோளாறும் இல்லை'' என்று முடிவு தெரிவித்தாள்.

''ஆமாம், உன் மனசில அப்படி என்ன வருத்தம் சீதா?''
ரேவதி பலமுறை வற்புறுத்தும் போதெல்லாம் அவள்
கண்களிலிருந்து பொல பொலவென நீர் கொட்டியது.

''அட! இதென்ன! இந்த வயதில் குழந்தையைப்
போல'' கடிந்து கொண்டாள் ரேவதி.

''வயது காலத்தில் இரண்டாவது குழந்தைப் பருவம்
வந்து விடுகிறதல்லவா? முந்தாநாள் என் பிறந்த நாள்.
அதை நான் நினைக்காம இருக்க முடிவதில்லை. நினைத்
தாலும் நெஞ்சு வெடிக்கிறது. ஏன்னா என் பிறந்த நாளன்
னிக்குத்தான் நான் விதவையானேனாம். துன்ப சிந்த
னையை—வேதனையைத் தரும் நாளை நான் மறக்க
முயற்சிக்கிறேன். ஆனால், அதே நாளில் கனிவுடன்
நேசித்த என் நண்பனது நினைவு வந்து நெஞ்சை நெகிழச்
செய்கிறது. மறக்க முடியாமல்-மறக்க விரும்பாமல் தவிக்
கிறேன்!''

ரேவதி ஆதரவு ததும்பும் கண்களுடன் சீதாவைப்
பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீலுவைப் பற்றி சொல்லி இருக்கிறேன் இல்லையா
டாக்டர், அவனுக்கு அப்போ...வயசு இருபதிருக்கும்.
எனக்கு வயசு பதினாலாகி விட்டது. அவனோட பேசக்
கூடாதுன்னு தடை உத்திரவு இருந்ததற்குப் பின்னால் நான்
வெளியில் எங்கேயுமே போறதில்லே. ஒரு பிப்ரவரி ஏழாம்
தேதி...என் பிறந்த நாள். இங்கிலீஷ் தேதிப்படிதான்.
ஜன்ம நட்சத்திரக் கணக்கெல்லாம் அம்மாதான் பார்ப்பாள்.

எனக்கு எப்போதுமே அதைப் பத்தி அக்கறை இல்லே.
அப்பாகிட்ட கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ கோவிலுக்குப்
போக அனுமதி வாங்கி விட்டேன். சாயங்கால வேளை,
கோவிலுக்குப் போன சமயம் கூட்டமும் அதிகமாக
இருக்கவில்லை. பாவாடையும், தாவணியுமா, வெறும்
நெற்றியோட கோவிலுக்குள்ளே நுழைஞ்ச என்னைச் சிலர்
வெறிச்சுப் பார்த்தார்கள். மனசில வேதனையும் பயமும்
போட்டி போட்டுது'' சீதா சற்று நேரம் துயர நினைவில்
ஆழ்ந்து போனாள்.

டாக்டர் ரேவதி பச்சாதாபத்துடன் தோழியைப்
பார்த்தாள். ''நீலுவை அங்கே பார்த்தியா?''

சீதா நிமிர்ந்தாள். ''நீலு சற்று தொலைவில் மதில்
சுவர் பக்கமா நின்னுண்டு இருந்தான். அவனைப் பார்க்
காத மாதிரி உள்ளே போய் சுவாமியைத் தரிசித்து விட்டு
வந்தேன். வெளியே வந்தப்போ அவன் அங்கே இருக்
கல்லே—சீதான்னு குரல் மட்டும் கேட்டுது. திகைச்சுப்
போய்த் திரும்பினேன். கோவில் மதில் பக்கத்து ஷண்பக
மரத்தில் இருந்து அவன் இறங்கி வந்தான். மேல் துண்டு
நிறைய ஷண்பகப்பூ...எனக்கு அந்தப் பூ ரொம்பப் பிடிக்கும்.

''இன்னிக்கு உன் பிறந்த நாள் இல்லியா? இதைத்
தொடுத்து தலையில் வச்சிக்கோ''ன்னு அள்ளி இரு கைக
ளிலும் நிறைச்சான். எனக்கு 'ஓ'ன்னு அழணும் போல
இருந்தது. துக்கம் நெஞ்சை அமுக்கித்து'' சீதா லேசா
விம்மினாள்.

ரேவதி, தோழியின் தோள் மீது ஆதரவாகக் கையை
வைத்தபடி, ''ம்...திடப்படுத்திக்கோ, பழசை நினைச்சு
கலங்கவே கூடாது'' என்றாள் கண்டிப்புடன்.

சீதா கண்களைத் துடைத்துக் கொண்டாள். மீண்டும்
தொடர்ந்தாள்.

''நான் இனிமே தலையில் பூ வச்சிக்கப்படாதாம்'' நீலுவின் கண்களில் கனல் பறந்தது. ''எவன் சொன்னவன்? அவன் பல்லை உடைச்சுக் கையில் குடுக்கறேன். உன் மனசை ஊனமாக்கிட்ட நாள் இதுன்னு எனக்குத் தெரியும். அதுக்குத்தான் சொல்றேன். நீ அதை எதிர்த்து தலை நிறைய பூ வச்சிண்டு ஜம்முணு இருக்கணும்.''

''நீலு! கோவில் மரத்துப் பூவாச்சே! சிவன் சொத்து குல நாசமாகிடுமோ!''

அவன் உரக்கச் சிரித்தான் ''ஆண்டவன் தன் அன்பர்களுக்கு அருளை வாரி வாரிக் கொடுக்கக் காத்திண்டிருக்கும்போது—கேவலம் பூவைப் பறிச்சா கோவிச்சுக்கு வான்னா நினைக்கறே! அசடு...இதெல்லாம் முட்டாள் தனமான பேச்சு.''

''நீலு எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கிறதுடா'' அழுகையுடன் தடுமாறினாள் சீதா.

''எனக்குக் கூடத்தான் உன்னைப் பிடிக்கிறது. அதனால்தான் உன்னை யாராவது இம்சை பண்ணினா கோபம் பத்திண்டு வரது.''

சீதா முடிக்கவில்லை.

''போதும் எனக்குப் புரியறது. நீலுவை பார்க்கணும்! அவனுக்கு உதவனும்ணு ஒரு ஆசை உன் மனசில் வேரூன்றி இருக்கு. எங்கே போனானோ, என்ன அவஸ்தைப் படறானோன்னு பயத்திலே நீ பதட்டமடையறே! பயப்படறே! உணர்ச்சி வசப்பட்டுப் போறே!'' உன்னோட கூட உன் உறவினர்கள் எல்லாரும் இருந்தாலும் நீ தனியா இருக்கிற உணர்வில் தவிக்கிறே. உன்னை என்னால் புரிஞ்சிக்க முடிகிறது! உனக்கு வியாதியில்லே. மனதில் உணர்ச்சியின் கொந்தளிப்பு. இதுக்கு மருந்து நல்ல ஓய்வு.

வேலை, வியாபாரம் இதிலிருந்தெல்லாம் விடுதலை தேவை. ஒரு காரியம் செய்யேன். நான் சீரடிக்குக் கிளம்ப உத்தேசித்திருக்கேன். என்னோட புறப்படேன்'' டாக்டர் ரேவதி கூறினாள். சீதா தலையை ஆட்டினாள்.

அவள் வெளியூர் பயணம் செய்யப் போவதைக் கேட்டதும் அண்ணன் மகன் மித்திரன், அவர்களது 'இண்டர் நேஷனல் டியூப்ஸ் அண்ட் பைப்ஸ்' நிறுவனத்தின் மானேஜர்—அவன் முகம் கடுமையாகியது.

''ஆன்டி நானும், லலியும் கொடைக்கானலுக்குப் போக இருக்கோம். நீங்களும் கிளம்பிட்டா...''

அவளுக்குத் தாங்க மாட்டாத கோபம் வந்து விட்டது.

''இத்தனை வருஷம் மாடாக இந்த நிறுவனத்துக்கு உழைச்சேன். எதுக்காக—யாருக்காக...? இரண்டு நாள் நான் இல்லாட்டா குடியா முழுகிடும்?'' கத்தி விட்டாள்...

மித்திரன் சுதாரித்துக் கொண்டான். அவளுக்குப் பிற்காலம் அத்தனை சொத்திற்கும் அவனல்லவா வாரிசு. வீண் வாதம் விபரீதமாகி விட்டால், அவனுக்கும் அவன் பிள்ளைச் செல்வங்களுக்கும் நஷ்டம் சம்பவித்து விடுமே!

''அதுக்குச் சொல்லலே. ஆபீஸைக் கவனிக்க உதவி மானேஜர், தொழிற்சாலைக்கு சூபர்வைஸர் இருக்கார்! பத்து நாள் வெளியூருக்கு நீங்களும் நானும் போனால் கூட அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் வீடு... அதைப் பத்தித்தான் கவலைப்பட்டேன்'' இழுத்தான்.

''வீடு வரை தாண்டா உறவு'' சிரித்தாள் சீதா. ''போகறச்சே தலையிலா கட்டிண்டு போகப் போறேன்? அதை வேலையாட்கள் பார்த்துக்கட்டும்'' என்று முடித்தாள்.

தன்னைச் சுற்றி தன் தயவிலேயே வாழ்ந்து கொண்டு, தாங்கள் அவளுக்கு இன்றியமையாதவர்கள், தாங்கள்

இல்லையேல் அவளால் தனியாக வாழ முடியாது என்ற ஒரு நிலையையும் உருவாக்கிக் கொண்டு அவளை ஒட்டிக் கொண்டிருந்த புல்லுருவிகள் போன்ற உறவினர்கள் பட்டாளத்தை அவள் வெறுத்தாள்.

அடி நாளில் அவள் சிரமப்பட்டு முன்னுக்கு வர முயன்ற சமயம் அவளைப் பார்க்கவே வெட்கப்பட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போன அண்ணா சுந்தர மூர்த்தி, பின்னர் தன் குடும்பத்தோடு உள்ளே, வலிய வந்து புகுந்து கொண்டு விட்டார்.

ஆசாரத்தின் சிகரமான அவளது பெற்றோர்கள் கிழிந்த வேட்டியும், அழுக்குப் புடவையுமாக வயது காலத்தில் தள்ளாடிக் கொண்டு அவள் தயவைத் தேடிக் கொண்டு வரவில்லையா?

அவள் தானே மகனுக்கு மகனாக, ஆண் பிள்ளை போல் அவர்களைக் காப்பாற்றி முடிவில் அவர்களைக் கரை சேர்த்து விட்டவள்! அண்ணாவும் போய் விட்டான். அவன் பிள்ளையாச்சுதே என்று அவனைப் படிக்க வைத்து என்ஜினியராக்கி தான் ஆரம்பித்த நிறுவனத்திலே வேலை கொடுத்து பதவி தந்து தன் பங்களாவிலேயே தங்க வைத்து கல்யாணம் செய்து வைத்து கூடவே காப் பாற்றியதற்கு அவளுக்குக் கிடைத்த பலன்?

பெரிய இடத்துப் படித்த பெண் என்று லலிதா அவளை என்றுமே மதித்ததில்லை. அவர்களது குழந்தை களான ரதி, திலீப் இருவரும் இளைய தலைமுறையினர். டீன் ஏஜ் குழந்தைகள், வயதானவர்கள, கிழவர்கள், நரைத்த முடிக்காரர்கள், நோயாளிகள் ஆகியவர்களைக் கண்டாலே வெறுத்து ஓடி விடும் சுயநலவாதிகள். தங்களுக்கு அந்த வீட்டில் இருக்கும் உரிமை, பட்டயத்தில் எழுதி வைத் திருப்பது போன்ற எண்ணம்.

சீதாவிடம் சிறிதளவு கூட மதிப்பு கிடையாது. ''குழந்தைகளா அவர்கள்? பிசாசுகள்!'' அப்படித்தான் எண்ணினாள் சீதா.

சில மாதங்களுக்கு முன்னர் நடந்த அந்தச் சம்பவம் அவளுக்கு மெத்த அதிர்ச்சியைத் தந்திருந்தது.

அவள் அப்போதுதான் ஆபீஸிலிருந்து வீடு திரும்பி யிருந்தாள். களைப்புடன் ப்ரீப் கேஸைத் தூக்கிக் கொண்டு பின்னால் வந்த டிரைவர் அதை முன்னறை மேஜை மீது வைத்துவிட்டு நகர்த்தான்.

சமையற்கார சங்கரன் விரைந்து வந்தார். ''கொஞ்சம் சூடா காபி கொணரட்டுமா? மத்யானம் டிபனுக்குச் சேவை பண்ணினது இருக்கு.''

''ஒண்ணும் வேண்டாம் கொஞ்சம் 'ஜில்'லுனு ஜலம் கொண்டு வாங்கோ'' உத்திரவிட்டு விட்டு உள்ளே பார்த்தாள்.

லலிதாவைக் காணவில்லை. அநேகமாக அந்தி வேளைகளில் அவள் வீட்டில் இருப்பதில்லை. காரை தானே ஓட்டிக் கொண்டு கடைகளுக்கோ சபா, கச்சேரி, தோழிகள் வீடு என்றோ போயிருப்பாள்.

ஆபீஸ் முடிந்ததும் மித்திரனும் நேரே வீடு திரும்பு வதில்லை. கண்கள் சிவக்க தள்ளாடியபடி இரவு வெகு நேரம் கழித்துத்தான் வருவான். கேட்டால் ''வியாபாரத்தை விருத்தி செய்ய, வாடிக்கையாளர்களுடன் 'பார்ட்டி'களில் கலந்து கொள்ளாமலிருக்க முடியுமா?'' என்று விவாதிப்பான்.

''பிஸினஸ் எக்ஸிகியூட்டிவ்'' என்றால் கண்ட பழக்கங் களைக் கைக்கொள்ள வேண்டுமென்பது விதியா?'' கேட்க நாதுடிக்கும். ''ஒழியட்டும் நமக்கென்ன?'' என்ற விரக்தி யிலே வாயை மூடிக் கொள்வாள்.

ரதியும், திலீப்பும்தான் வீட்டில் இருப்பார்கள். ஊரில் உள்ள அத்தனை அசிங்கம் பிடித்த கதைப் புத்தகங்களும் அவனது அறை மேஜை மேல் இருக்கும். ரதிக்கு நிறைய தோழிகள். டெலிபோனை மாடிக்குத் திருப்பி விட்டு நகத்தைக் கடித்துக் கொண்டே, தோழிகளுடன் மணிக் கணக்கில் டெலிபோனில் பேசிக் கொண்டிருப்பாள்.

இப்படிப்பட்டதொரு குடும்பத்திற்கு உழைத்து ஓடாகத் தேய்வானேன்? இடை இடையே அவளுக்குக் கோபம் வரத்தான் செய்தது. ஆனால், ஆழ மணலுக்குள் புதைந்து விட்ட கால்களை இழுக்க முடியாதது போன்ற ஒரு பதட்டம்.

அவள் கார் ஓசை கேட்டு அபூர்வமாக ரதியும், திலீப்பும் அன்று கீழே இறங்கி வந்தனர். ஒருவரை ஒருவர் பார்த்தவண்ணம் இருவரும் சற்றுத் தயங்கினர்.

திலீப் அருகில் வந்தபோது, சிகரெட் நாற்றம் குப்பென முகத்தில் வந்து மோதியது. வீட்டிலும் திருட்டுத் தனமாக அவன் சிகரெட் பிடிக்க ஆரம்பித்து விட்டான். கண்டிக்க வேண்டிய பெற்றோர்கள் இருவருமே ஆளுக்கு ஒரு மூலையாக வெளியில் அலைந்து கொண்டிருந்தார்கள். அவனைச் சீர்திருத்துவது யார்? வெறுப்புடன் அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''உங்களைத் தேடிக் கொண்டு ஒரு கிழவர் வந்தாரு'' திலீப் வார்த்தைகளுக்காக எங்கேயோ பார்த்தாள்.

''ரொம்ப 'டர்ட்டியா' இருந்தார். குளிச்சு ஒரு மாசம் இருக்கும் போல ஒரே அழுக்கு...சோபாவில் கூட உட்காரச் சொல்லலே'' ரதி தொடர்ந்தாள்.

''கால்லேகூட ஏதோ ஒரு கட்டு...எனக்குப் பார்க்கவே ரொம்ப அருவருப்பா இருந்திட்டுது.''

தோவின் நெஞ்சு காரணமின்றி படபடத்தது. மேலெல்லாம் வியர்வை வெள்ளம். மயக்கம் வந்து விடும்போல் ஆடிப் போனாள். அருகிலிருந்த சுவரை ஆதாரமாகப் பிடித்துச் சாய்ந்தபடி, ''என்ன வேணும்னு கேட்டியா?'' என்றாள்.

''வெறுமனே பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்னு அந்தக் கிழம் முணுமுணுத்தது. எனக்கு ரொம்பச் சந்தேகமாயிட்டுது. ''காசிக்குப் போறேன். தர்மம் குடுங்க''ன்னு உங்ககிட்டே ஏதாவது கேட்டா என்ன செய்யறது? இல்லாட்டி ''பேரன் படிக்க உதவி செய்யுங்கோ''ன்னெல்லாம் கேக்கும்னு தோணித்து! அதனால் நீங்க இல்லே! வெளியூருக்குப் போயிட்டீங்கன்னு சொல்லி விட்டோம்'' முடித்தான் திலீப்.

''அட பாவமே பொய்யா சொன்னீங்க?''

''அந்தக் கிழவர்கூட அப்படிததான் சொன்னார். ஏன் பொய் சொல்றீங்க. ஊரிலேதானே அந்தம்மா இருக்காங்கன்னு ஆபீஸிற்கே போன் பண்ணி விசாரிச்சிட்டு தான் வரேன். எப்ப வீட்டுக்கு வருவார்ன்னு, நிஜத்தைச் சொல்லக் கூடாதான்னு அலுத்துக் கொண்டார்.''

''நீங்க யார்னே சொல்லாம எங்களையே கேள்வி மேல் கேள்வி கேக்கறீங்களேன்னேன்.''

''நீலுன்னு சொன்னா சீதம்மாளுக்குத் தெரியும். வெறுமனே பாத்திட்டுப் போகலாம்னுதான் வந்தேன். இந்த வயசில எனக்கு என்ன வேணும்னு தானே பேசிண்டு கழியை ஊன்றிக் கொண்டு கிழவர் போயிட்டார்'' என்றாள் ரதி.

''அப்புறமா ரதி அக்கா வேலைக்காரனைக் கூப்பிட்டு அவர் நின்ன இடத்துல, வராந்தாவில் எல்லாம்

பினாயில் விட்டுக் கழுவித் துடைக்கச் சொன்னாள். ரொம்ப அழுக்குப் பிடித்த மனுஷன். அவர் கிழிசலும், தலையும் பார்க்கவே; வாந்தி வந்துட்டுது'' திலீப் கூறி விட்டு மாடிப் பக்கம் ஓடி விட்டான். ரதி உள்ளே வேக மாகச் சென்று மறைந்தாள்.

வாயில் வராந்தாவிற்கு வந்த சீதா, சற்று முன் கழுவி ஈரம் காயாத தரையைப் பார்த்தாள். இன்னமும் பினாயி லின் மணம் லேசாக முகத்தில் மோதியது.

''அட பாவிகளா! என்ன காரியம் செய்திட்டீங்க?'' அலறி அழ வேண்டும் போல் துயரம் பொங்கியது. தலை சுற்றி மயக்கமே வந்து விடுவது போல் கண்கள் இருண் டன. மெல்ல வராந்தா தூணைப் பிடித்தபடி அப்படியே உட்கார்ந்தாள்.

''நீலு! நீலு? நீ நின்ன இடத்திலே மலர் தூவி வாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டவள் நான். அதுகள் அறியாத அசட்டுக் குழந்தைகள்...மன்னிச்சுக்கோ...நீலு மன்னிச்சுக்கோ.''

மனம் புலம்பியது.

அவன் நின்றதாகச் சொன்ன இடத்தை மெல்லத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். எத்தனையோ காலமாகத் தேடிக் கொண்டிருந்தவன், வாசல் வரை வந்த வன், அவனை விட்டு விட்டோமே, எங்கே போயிருப் பான்? அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? அவளைப் பற்றி என்னவெல்லாம் எண்ணி மனம் புழுங்கிக் கொண்டு வெளியேறியிருப்பான்?

''ஐயோ நீலு! உன்னைப் பார்க்கணும்னு இத்தனை காலமா நான் தேடாத இடம் இல்லை. நீ நம்புவியா? நீலு! நீலு!'' அவள் உள்ளம் மௌனமாக ஓலமிட்டு அழுதது.

4

'நவ ஜீவன்' எக்ஸ்பிரஸ்ஸின் வேகம் தணிவதைப் போன்ற உணர்வு. சீதாவிற்கு விழிப்பு வந்து விட்டது. கடிகாரத்தைப் பார்த்தாள். மணி நான்காகிக் கொண்டிருந் தது. வீட்டில் தன் படுக்கையிலிருக்கும் நினைப்பு— தலைக்கு மேல் தொங்கிய இரண்டாவது பலகையைப் பற்றி மறந்து உட்கார நிமிர்ந்தபோது டக்கென்று இடித்துக் கொண்டு விட்டாள். சுரீர் என்ற வேதனை...

''இடிச்சுக் கொண்டு விட்டியா? ரொம்ப வலிக்க லியே?'' பரிவுடன் கேட்டபடி ரேவதி மெல்ல குனிந்த படி தன் இடத்திலிருந்து வெளியே வந்தாள். அவளுக்கு ரயில் பயணம் தண்ணீர் பட்ட பாடு. வைத்தியர் என்ற நிலையில் இரவில் எந்தப் பொழுதிலும் எழுந்திருந்து சிகிச்சை செய்ய ஓட வேண்டிய தன்னை நேரத்தோடு இணைத்துக் கட்டுப்பாடாக வாழ்ந்து விட்ட பழக்கம். மனதிற்குள்ளேயே அலாரம் வைத்துக் கொண்டு விட்ட வள்போல் குறித்த நேரத்திலே அவள் விழித்துக் கொண்டு விட்டாள்.

விளக்குகளை ஏற்றி மற்றவர்களைத் தட்டி எழுப் பினாள். படுக்கையைச் சுருட்டி விட்டு, தொங்கு பலகை களைக் கழற்றி மடக்கி வைத்து வேகமாக எல்லாவற் றையும் ஒழுங்கு செய்தாள். அவரவர் பெட்டி படுக்கை சகிதம் துரிதமாக இறங்கும் கதவருகே சென்று நின்று கொண்டனர்.

புது மணப் பெண் புக்ககத்திற்குள் நுழைவதைப் போல் நவஜீவன் எக்ஸ்பிரஸ் வேகத்தைக் குறைத்து மெல்ல நெளிந்தபடி 'மன்மார்ட்' ரயில் நிலையத்தில் பெருமூச்சு விட்டபடி நின்றது. இவர்கள் வந்த பெட்டி நிலையத்தை

விட்டுச் சற்றுத் தொலைவில்...கட்டாந்தரை ஓரமாக நிற்கவே ரேவதி முதலில் கீழே குதித்து...பெண்கள் யாவரையும் பத்திரமாக கை கொடுத்து உதவி கீழே இறக்கி விட்டாள். ரங்கையா மூட்டைகளை எடுத்து வெளியே போட்டார்.

தண்டவாளங்களைத் தாண்டி நிலையத்தினின்றும் வீசிய மங்கிய விளக்கொளியில் தட்டுத் தடுமாறிக் கொண்டு எல்லோரும் தங்கள் சாமான்கள் சகிதம் ரயில்வே நிலைய பிளாட்பாரத்திற்கு வந்தனர்.

பிரயாணிகள் தங்கும் அறைக்குள்ளே சென்று தூசி படிந்த நாற்காலிகளையும் மேஜையையும் துடைத்து விட்டு எல்லோரும் அமர்ந்தனர். திரும்பிப் போக டிக்கட் ரிசர் வேஷன் என்னவாயிற்று என்று விசாரித்து விட்டு தான் மேற்கொண்டு நகர வேண்டும் என்று ரேவதி கண்டிப் பாகக் கூறி விடவே காலை எட்டு மணி வரை அங்கேயே தங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

குழாயைத் திருப்பினால் சொட்டுச் சொட்டாகத் தான் நீர் வந்தது. வடக்கே கடும் தண்ணீர் பஞ்சம் என்று தெரிந்திருந்தால் என் பிளாஸ்டிக் டப்பா (கான்) தண்ணீரைச் சிக்கனமாகச் செலவழித்திருப்பேனே என சரோஜா ஆதங்கப்பட்டாள்.

சீதா எல்லோருக்கும் தான் கொணர்ந்திருந்த தண்ணீரை டம்ளரில் நிரப்பி வழங்க, ஒரு வழியாகச் சிக்கன முறை யில் பல் துலக்கி, முகம் கழுவி, தங்களைச் சீர்செய்து கொண்டனர்.

''திரும்பி வரும்வரை தண்ணீரைச் சிக்கனம் செய்ய வேணும், ஜாக்கிரதை. கண்ட இடத்திலே தண்ணீரைப் பிடித்துக் குடிக்கக் கூடாது'' வைத்தியர் என்ற ஹோதா

வில் அடிக்கொரு தடவை ரேவதி அவர்களைப் பயமுறுத்திக் கொண்டிருந்தாள்.

ரங்கையாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. காலைப் பத்திரிகையை வாங்கிக் கொண்டு, படித்தபடியே பிளாட் பாரத்திலே உலாவினார். அருகே இருந்த ஒரு டீக்கடையை எட்டிப் பார்த்தார். கவுண்டர் அருகே ஒரு பெரிய க்யூ வரிசை 'கரம் சாயா'வுக்குக் காத்துக் கொண்டிருந்தது.

காலை வேளையில் காப்பி சாப்பிடாமல் தலை வெடித்துப் போகும் சீதாவிற்கு, குளிருக்கு அடக்கமாகத் தலை மீது மப்ளரைக் கட்டிக் கொண்டு 'ஷாலை' இழுத்துப் போர்த்தியபடி தங்கும் அறையினின்றும் வெளியே வந்தாள்.

இருளைத் தள்ளிக் கொண்டு விடியற்காலை வெளிச்சம் வேகமாகப் பரவத் துவங்கியது. காப்பி விற்கும் இடம் என்று பெயர்ப் பலகை தொங்கிய இடத்திலே, தலை யும், குல்லாயும் கம்பளிச் சட்டையுமாக ஒல்லியான ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான். குட்டையும் கட்டையு மான ஒரு கம்பளிச் சட்டைக் குல்லாய் ஆசாமி, திகு திகு வென்று எரிந்த ஒரு குமட்டி அடுப்பை மேஜை மீது வைத்து கூடையிலிருந்த பெரிய தோசைக் கல்லை அதன் மீது போடுவதைக் கவனித்தாள். அலுமினிய சட்டி நிறையக் கொண்டு வந்திருந்த மஞ்சள் நிறமான மாவை ஒரு கிண்ணத்திலே அள்ளி அவன் தோசை வார்ப்பதை அவள் வியப்போடு பார்த்தாள். 'சுர்' என்ற சப்தம் கேட்டதுமே மூக்கில் வியர்த்து விட்டவர்கள் போல் ரேகாவும் நிஷா வும் ஓடி வந்தனர்.

''ஆன்டி! மசாலா தோசையா?'' நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு கத்தினார்கள்.

தோசை என்ற வார்த்தையைக் கேட்டதுமே மற்ற எல்லோரும் பரபரப்பாக ஓடி வந்து விட்டனர்.

''மசாலா தோசை? பரவாயில்லையே. இந்த ஊரில் கூடக் கிடைக்கிறதே'' ரங்கையா அவசரமாகப் பத்திரிகை யை மடித்து இடுக்கிக் கொண்டு, தேநீர் க்யூவிலிருந்து ஓடி வந்து காப்பி கடையை முற்றுகையிட்டார்.

''இதென்ன தோசை? எப்போ எங்களுக்குக் கிடைக் கும்?'' ஆங்கிலத்தில் கேட்டாள் சீதா.

கட்டை ஆசாமி அவளைப் பார்த்து விழித்தான்.

''பேஸன் கி பூடா! ஆதா கண்டா டேரோ தும்கோ படா அவுர் ஆலுகா சப்ஜி தேங்கே.''

சீதா நாக்கைக் கடித்துக் கொண்டாள். படித்த காலத் திலேயே அவள் இந்தியைப் பற்றி அக்கறை கொண்ட தில்லை. அதன் பலனாக இந்திச் சினிமாவுக்குக் கூடப் போனதில்லை. 'இனி இந்த வயதில் வேற்று மொழியைக் கற்பதா!' என்ற விரக்தியுடன் விட்டு விட்டிருந்தாள். வட நாட்டில் பிரயாணம் செய்ய வேண்டும் என்றால் இந்தி தெரிந்திருக்க வேண்டும்.

ரேவதி அவள் தோளை லேசாகப் பிடித்து அழுத் தினாள். ''ஹிந்தியைக் கண்டு அப்படி ஏன் மிரள்கிறே? அவன் சொன்னதை மொழிபெயர்க்கறேன் கேள். அரை மணி நேரத்திலே உனக்குத் தோசையும், உருளைக் கிழங்குக் கறியும் தரேன் என்கிறான். போதுமா?'' அனைவரும் சிரித்தனர். கட்டையும் ஒல்லியும், புரிந்தது போல் கூடவே சிரித்தனர். சீதாவிற்கு அது சமயம் நீலுவின் நினைப்புத்தான் நெஞ்சை உறுத்தியது.

நீலு அதிகம் படித்தவன் இல்லை. நாலு வகுப்போடு பள்ளிக்கு முழுக்குப் போட்டு விட்டவன். ஆனால், அவ

னுக்குப் பல மொழிகளைச் சரளமாகப் பேசத் தெரியும். தமிழ், தெலுங்கு, மலையாளம், உருது என்று பேசுவான். அந்த உண்மையை அவள் அவனுடன் பிரயாணம் செய்த போதுதான் உணர்ந்தாள். அதிசயப்பட்டாள். ''நீலு, உனக் கெப்படி இத்தனை பாஷை பேசத் தெரிகிறது. எங்கேடா கத்துண்டே.''

''பள்ளிக்கூடத்துல போய்ப் படிச்சால்தான் தெரிஞ் சிக்க வேண்டிய அவசியமில்லை. வாழ்க்கையே ஒரு பள்ளிக் கூடம்னு நினைச்சு எல்லாமே கத்துண்டுடலாம். அது போல இன்னொண்ணையும் நீ தெரிஞ்சுக்கணும். ஸ்நானம் பண்ணிட்டுத் தும்பைப் பூப்போல வேட்டி உடுத்தி—பட்டை பட்டையா விபூதி தரித்துக் கோவில் சந்நிதியிலே வந்து நிற்குற ராமு மாமா போல பலர் வெளித் தோற்றத்திலேதான் பரிசுத்தமானவர்...மனசு ரொம்ப அழுக்கு. என்னைப் போல குளிக்காம தாடியும் மீசையும் அழுக்கு வேட்டியும், பரட்டைத் தலையுமாக வெளிப் பார்வைக்கு அசிங்கமா இருக்கிறவன் மனசு பளிச்சுனு சுத்தமானதாகவும் இருக்கலாம். ஒட்டு மொத்தமாக வெளித் தோற்றத்தை மட்டும் பார்த்துட்டுக் குணத்தை எடை போட முடியாது.''

''நீலு! நீ ரொம்பக் குழப்பறே.''

''காலம் செல்லச் செல்ல நீயே புரிஞ்சிப்பே.''

திலீப்பும், ரதியும் அவனது அழுக்குச் சட்டையை யும் வேட்டியையும் பார்த்து விட்டு அவனைத் தவறாக எடை போட்டுத் துரத்தி விட்டார்களே!

சென்னைக்குப் பல மைல்களுக்கு அப்பால் ரயில்வே நிலையத்து நடை பாதை மேல் நின்று கொண்டு அவள் ...துன்ப நினைவில் மூழ்கிப் போனாள்.

''பேசன் கி பூடா வேணுமா?'' ரேவதி கேட்ட போது விழித்துக் கொண்டாள். ''வேண்டாம், காப்பி மட்டும் போதும்!''

எட்டு மணிக்கு மேல் திறந்த ரயில்வே புக்கிங் ஆபீஸிற்கு விஜயம் செய்து ரிட்டன் டிக்கட்டைப் பற்றி பலத்த குரலில் இந்தியில் தர்க்கித்துக் கொண்டிருந்தாள் ரேவதி. மற்றவர்கள் தங்களது மூட்டையுடன் அவள் வருகைக்காகக் காத்திருந்தனர். ''ரிஸர்வேஷன் விஷயம் என்ன ஆச்சு?'' ஏக காலத்தில் அலறினார்கள்.

''ஆமதாபாத்திலிருந்து இதுவரை ஒரு தகவலும் வரவில்லையாம். நாம் திரும்பும்போது இரவு வண்டிக்கு சில மணி முன்னதாகவே வந்தால் ரிஸர்வேஷன் பற்றிச் சொல்வார்களாம்.''

''என்ன அநியாயம்? சென்னையிலிருந்து ஒரு வாரத்துக்கு முந்தி நாம் தந்தி அடிச்சோமே, இன்னுமா சங்கதி தெரியலை'' ரங்கையா குதித்தார்.

தந்திகள் சில சமயம் தபாலுக்குப் பின்னால் வருவது வழக்கம். எங்கேயோ தாமதம் ஏற்பட்டிருக்கு! கவலைப் படாதீங்க. எப்படியாவது திரும்பும்போது வண்டியில் இடம் பிடிச்சு ஆளுக்கு ஒரு மூலையில் உட்கார்ந்து ஊர் போய்டுவோம். சுவாமி காரியமா வந்திருக்கோம்— கவலையோடு ஏன் கோவிலுக்குப் போகணும்'' அதட்டினாள் ரேவதி.

அங்கிருந்து பஸ் நிலையம் ஒரு கிலோ மீட்டர் தூரம். திரும்பிப் போக டிக்கட் ரிசர்வேஷன் நிச்சயமாகவில்லை என்ற கலவரத்தில் எல்லோர் கால்களும் தொய்ந்து போய் பொருள்களைத் தூக்கி நடக்கவே சிரமப்பட்டனர்.

டோங்காவில் போகலாம் என்று ரேவதி யோசனை

தெரிவித்தாள். மைசூரில் எப்போதோ ஒரு சமயம் அந்தத் தார் மெழுகிய அழகான சாலையில் டோங்காவில் போன அனுபவம் சீதாவிற்கு. வெகு சுகமாக வேகமாக சக்கரம் தரையில் உருள்வதே தெரியாதபடி ஓடியதை எண்ணிக் கொண்டு டோங்காவில் ஏறிக் கொண்டாள். தலையில் சாமான்களைத் தூக்கியபடி மெல்ல நிலையத்திற்கு நடந்தே போயிருக்கலாமே என்று பிறகு தோன்றியது.

குண்டும் குழியுமான பாதையில் டோங்கா ஓடிய போது, ஆடிய ஆட்டத்தில் முதுகைப் பிளந்து கட்டியது.

''ஐயோ அப்பா'' என்று கூவிக் கொண்டு கோஷ்டியினர் முடிவில் இறங்கி பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

முப்பத்திரண்டு கிலோ மீட்டர்-பஸ் பயணத்திற்குப் பின்னர் அவர்கள் சீரடி ஸ்தலத்தை அடைந்தனர். அங்கிருந்து மறுபடியும் மந்திர் இருந்த இடத்தை மூட்டை முடிச்சுக்களுடன் நடந்து அடைய வேண்டி வந்தது.

''இன்னும் எவ்வளவு தூரம்?'' அலுப்போடு கேட்டாள் சரோஜா—அவளுக்கு மூச்சு வாங்கியது. ரேவதி சிரித்தாள். ''கோவில்களைச் சுலபமாகத் தரிசித்து விட்டால் புண்ணியமில்லையே. கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை...என்று கூவிக் கொண்டு சபரி மலைப் பயணம் எதற்காகச் செய்கிறார்கள்? புரிகிறதா? எதையும் வாழ்வில் எளிதாக அடைய முயல்வது தவறு'' உபதேசித்தாள். சுறுசுறுப்பாக மூட்டையைச் சுமந்தபடி முன்னால் நடந்தாள்.

பளிங்குக் கற்களால் ஆன சாயி மந்திரும், சுற்றுப் புறத் தோட்டமும், பக்தர்கள் வந்து தங்க வசதியாகக் கட்டப்பட்டிருந்த அறைகளும் மிகவும் சுத்தமாக வைக்கப் பட்டிருந்ததைக் கண்டு சீதாவிற்கு மிக்க வியப்பு.

அவர்கள் தங்கியிருக்க வசதிகள் கூடிய ஒரு நல்
விடுதி வாடகைக்குக் கொடுக்கப்பட்டது. 'அப்பாடா
என்று சிரம பரிகாரம் செய்ய அறைக்குள் கட்டில்கள் மீது
உட்காரப் போட்டியிட்டனர் அவர்கள். சாமான்களைத்
தூக்கி வெய்யிலில் நடந்து களைத்துப் போன சிரமம்
அவர்களுக்கு. ஆனால், ரேவதி அவர்களை அப்படி
விடுவதாக இல்லை.

''மணி பத்தாகி விட்டது. ஒரே ஒரு குளியலறை
தான். ஆகட்டும். வெந்நீருக்கு ஏற்பாடு செய்து விட்
டேன். சீக்கிரம் குளித்து விட்டு வேறு உடுத்திக் கொண்டு
கிளம்புங்க. பகல் பனிரெண்டு மணிக்கு ஆரத்தி தரிசனம்
இருக்கு. அதைப் பார்க்க வேணும்'' ஆணையிட்டாள்.

''ஆன்டி? கோவில்லே சாப்பாடும் கிடைக்குமா?''
கவலையுடன் கேட்டாள் நிஷா.

''முதல்லே கடவுள் தரிசனம். பிறகு ஹோட்டல்
தரிசனம் கிளம்புங்கள்...ம்! இருபத்தி நாலு மணி நேரம்
ஆகலை. அதுக்குள் பல வருஷம் பட்டினி கிடந்த மாதி
சாப்பாடு சாப்பாடுன்னு ஏன் கூப்பாடு போடுறீங்க?''
ரேவதி அதட்டவே எல்லோரும் குளிக்கக் கிளம்பினார்கள்.

பனிரெண்டு மணி அளவிலே சாயிநாதனின் சமாதி
கொண்ட கோவிலுக்குள்ளே நுழைந்து க்யூ வரிசையில்
நின்றனர். அன்று கோவிலில் ஏகப்பட்ட கூட்டம் நிரம்பி
வழிந்து கொண்டிருந்தது. அடுத்த நாள் வியாழக்கிழமை
சாயிநாதன் பூஜைக்கு உகந்த விசேஷ நாள். நாட்டின் பல
பகுதிகளிலிருந்தும் பல மொழியைச் சேர்ந்த மக்கள் முன்ன
தாகவே வந்து அறைகளில் தங்கிக் கொண்டு தரிசனத்
திற்கு வந்திருந்தனர்.

ஆரத்தி பூஜையின் போது கூட்டத்திலிருந்த பலர்...

கூடவே அர்ச்சகருடன் தோத்திரங்களைச் சேர்த்து கோஷித்து
வணங்குவதை சீதா வியப்புடன் கவனித்தாள். ஒரு துளசி
இலை தவறிக் கீழே விழுந்து விட்டால்கூட கோவிலில்
பணியாட்கள் சட்டென அதைப் பொறுக்கி ஒரு கூடை
வில் சேர்த்து அடிக்கொரு தடவை ஆலயத்தின் சுற்றுப்
புறத்தைத் தூசி போகப் பெருக்கிச் சுத்தப்படுத்துவதை
அவள் அதிசயமாகப் பார்த்தாள்.

நம் கோவில்களிலும் ஏன் இந்த முறையை அனு
சரிக்கக் கூடாது? பெரிய கோவில்களின் சுற்றுப்புறத்தை
இப்படி அசிங்கம் செய்து வைக்கிறார்களே! சுத்தம் என்னும்
வார்த்தையே நம்மை விட்டு ஓடி விட்டது போல்
தெருக்கள் வர வர...வேதனையான சிந்தனையோடு
நின்றாள். ஆரத்தி முடிந்து ஜோதியை வணங்கி விட்டு
அவர்கள் வெளியே வந்தனர்.

பாபாவின் திரு உருக் கொண்ட படங்கள், மெடல்
கள், மோதிரங்கள் கொண்ட பல கடைகள் கோவிலைச்
சுற்றிலும் இருந்தன. நடுநடுவே இங்குமங்கும் பஞ்சாபி
யர் நடத்திய சாப்பாட்டுக் கடைகளும் இருந்தன.

''ஆன்டி! பஞ்சாபி சாப்பாடு சாப்பிடலாமா?'' ரேகா
ஆசையுடன் கேட்டாள்.

''மக்கிகா ரொட்டியும், மட்டர் பனீரும் சாப்பிட
ஆசையா இருக்கு'' என்றாள் நிஷா.

சீதாவிற்கு இதுநாள் இல்லாத அதிசயமாகப் பசி
வயிற்றை முறுக்கியது. இடம் மாற்றம் போலும். எண்ணிக்
கொண்டே நடந்தாள்.

''ரெண்டு நாளா நான் ரொம்ப அலைஞ்சிருக்கேன்.
எனக்கு இப்போ கூடா ரசம் சாதம்தான் வேணும். இன்
னைக்கி எல்லோரும் என்னோட இங்கே இருக்கும்

மதராஸ் ஹோட்டலில் நம் ஊர் சாப்பாடு சாப்பிடுவோம். ராத்திரி பஞ்சாபி சாப்பாட்டுக் கடைக்குப் படை எடுப் போம், என்ன சொல்றீங்க?''

ரேவதி பேச்சுக்குக் கோஷ்டியினர் பணிந்து விட்ட னர். சாப்பிட்டதும் களைப்புத் தீர விடுதியில் ஆளுக் கொரு படுக்கையில் அடித்துப் போட்டது போல் தூக்கம்.

அன்று மாலை திடீரெனக் குளிர் காற்று வீசியது. உடனடியாகத் தொடர்ந்து பலத்த மழை கொட்டி விட் டது. அந்தி வேளை தரிசனத்திற்குக் கோவிலுக்கு வந்த போதுதான் சீதா கவனித்தாள்.

ரயிலில் அவர்களுடன் பயணம் செய்த அந்த விதவைப் பெண்மணி தலையை முக்காடு போட்டிருந்தாள். அவ ளும் தரிசனத்திற்கு வந்திருந்தவள். இவளும் தரிசனத் திற்கு வந்திருந்தவள். புடவை நழுவாது, மேல் உடலை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு கூட்டத்தின ரிடையே அவள் கூசிக் குறுகி நின்றதைக் கடைக் கண் ணால் பார்த்த சீதாவிற்குத் திடீரென நீலுவின் நினைவு நெஞ்சை அடைத்தது.

5

தரிசனம் முடிந்த பின்னர்...கோவிலைச் சுற்றியிருந்த கடையில் தேவையான சாமான்களை வாங்கிக் கொண்டு அவர்கள் இரவு சாப்பாட்டிற்கு பஞ்சாபி உணவுக் கடை ஒன்றில் புகுந்தனர்.

''எனக்கு மக்கிகா ரொட்டி—ஸர்ஸுக்காஸாஸ் வேணும். எனக்குத் தண்டூரி ரொட்டி—கூடவே சோலா....ஆன்டி! எனக்கு பாலக் பனீர்...பொதினா சட்னி, விஜிடபிள் புலாவ் வேணும்'' ஆளுக்கு ஒரு பக்கமாக ஒவ்வொன்றைக் கேட்டுக் கத்தினர்.

''உனக்கு என்ன? எங்கேயோ யோசனையா இருக்கேயே'' ரேவதி அவள் முதுகைத் தட்டியபோதுதான் நினைவு வந்தது.

''ஏதாவது ஒண்ணு. நீயே ஆர்டர் பண்ணிடு— கிடைச்சதைச் சாப்பிட நான் தயார்'' புன்முறுவலித்தாள்.

''பாஜ்ரா ரொட்டி பாலக் பனீர்'' என்று கூறிக் கொண்டு சர்வர், தட்டுகளில் ரொட்டியும் கிண்ணத்தில் கீரைக் குழம்பும் கொண்டு வந்து வைத்தான்.

ரொட்டியைப் பிட்டு வாயில் ஒரு துண்டைப் போட்டுக் கொண்டவள் நினைப்பில் நீலு மறுபடியும் வந்து நின்றான். அவள் படித்துக் கொண்டிருந்த நாட்களில் ஹாஸ்டலுக்கு அவன் கடிதம் எழுதுவதுண்டு.

''வேலை, சாப்பாடு, தங்க இடம் எல்லாம் கிடைத்து விட்டன. எங்கே என்று தானே கேட்கிறாய்? பி.ஏ., எம்.ஏ., படித்திருக்கேனே? பெரிய ஆபீஸர் வேலை என்று பெருமை பேச. இங்கே ஒரு பஞ்சாபியர் ஹோட்டலில் அடிமட்ட தொழிலாளியாகத்தான் சேர்ந்திருக்கிறேன். சாப்பாடுதான் பிடிக்கவில்லை. தினமும் ரொட்டியும், சோலே என்கிற கடலைக் குழம்பும் தின்று அலுத்து விட் டது. அம்மா கை மணக்கச் செய்யும் வற்றல் குழம்பும், சீரக ரசமும் அடிக்கடி நினைவுக்கு வருகிறது. மனிதன் சாப்பாட்டு வழக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறான் பார்த்தியா?''

அவ்வரிகளின் ஞாபகம் வந்தது. கண் காணாத ஊரில் வேற்று மொழிக்காரனின் சாப்பாட்டுக் கடையில் எச்சில் தட்டுகளைக் கழுவி, மேஜை துடைத்து, கடையைப் பெருக்கி சுத்தப்படுத்திக் கடுமையாக நாள் முழுவதும் உழைத்துப் பாடுபட்டானே யாருக்காக?

குற்ற உணர்வு நெஞ்சைக் கவ்வியது. கண்கள் பனித்தன

சீதாவிற்கு. மேஜை முன்னிருந்த கடலைக் குழம்பும் ரொட்டியும் தொண்டைக் குழியில் இறங்க மறுத்தன.

மறு நாள் வியாழக்கிழமை. அதிகாலையிலேயே எழுந்து எல்லோரும் ஸ்நானம் செய்து வேறு உடுத்திக் கொண்டு தயாரானார்கள். விடியற்காலை தரிசனம் முடிந்து மறுபடியும் அந்தத் தென் இந்தியரின் காப்பிக் கடையில் இட்டலி சாம்பார் என்று விழுந்தனர்.

''சாம்பாரா இது? கத்தரிக்காயில் ஒரு துண்டத்தைக் கூடக் காணோம்!'' கிண்ணம் முழுவதும் தேடினார் ரங்கையா.

''என்ன இருந்தாலும் நம் இட்லி சாம்பாருக்கு எதுவும் ஈடு இணை இல்லை'' ரசித்தாள் மரகதம்.

சாப்பாட்டிற்குப் பின்னர் மறுபடியும் கடைகளில் புகுந்து காசைப் பொருளாக்கிக் கொண்டிருந்தாள் சரோஜா. அவளுக்கு நிறைய உறவினர்கள். எங்கே போனாலும் ஏதாவது அவள் வாங்கி வர வேணுமென்று எதிர்பார்ப் பார்கள்.

ஸாயிநாதன் தங்கியிருந்த துவாரகாமாயி என்னும் இடத்தைத் தரிசித்து விட்டு அன்று அவர் மூட்டி இன்னமும் கனன்று கொண்டிருந்த 'ஊதி' நெருப்பையும் தரிசித்து விபூதி பெற்றுக் கொண்டு ஸமாதிக்கு நடக்க இருந்த விசேஷ அபிஷேக ஆராதனையைக் காண அவர்கள் மீண்டும் கோவிலுக்குள் வந்து க்யூவில் நின்றனர்.

கோவில் உள் பிரகாரத்தில் இருந்து திணறிய கூட்டம் எதிரே அதையொட்டிப் பிரிந்த திறந்த முற்றத்திலும் வழிந் தது. அப்போது அவள் பார்த்தாள். அந்த வெள்ளைப் புடவை முக்காடிட்ட விதவைப் பெண்மணி கண்களை மூடியபடி ஒரு புறமாகத் தியானத்திலே ஆழ்ந்து நின்று கொண்டிருந்தாள்.

அடைப்பைத் திறந்து கொண்டு குபு குபுவெனப் பெருகிய உணர்வுகள் கன்னங்கள் மீது கண்ணீர்த் துளியாக வழிய கை கூப்பி வணங்கியபடி, சதா, நீலுவின் நினைவில் ஒன்றிப் போனாள்.

பல ஆண்டுகள் ஆகித்தான் விட்டன. அவள் அப்போது பதினைந்து வயதுப் பெண். துடைத்து விட்ட கோவில் வெண்கலச் சிலை போல, ஓங்கி ஓடிய உயரமாக வளர்ந்து நின்றாள்.

பூவும், பொட்டும் இல்லாவிட்டாலும், மகளின் பருவச் செழிப்பைக் கண்டு பதறிப் போனாள் தாயார். பெரியவர்கள் முன்னால் வர அஞ்சி, வீட்டிற்குள்ளேயே அடைபட்டுப் பதுங்கிப் பதுங்கி வாழும், நிர்ப்பந்தத்தை நினைத்து அழுது மனம் புண்ணாகியது போதாது போல் அன்று இரவு அப்பாவும் அம்மாவும் பேசிக் கொண்டதைக் கேட்டு அவள் துடித்துப் போய் விட்டாள்.

கூடத்துத் தரையில் பாயை விரித்து ஒரு ஓரமாக அம்மாவின் அருகே படுத்திருந்தாள் அவள்.

சுவரின் ஆணியில் மாட்டியிருந்த காய் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது.

ரேழியினின்று அப்பா எழுந்து வந்தார். இருமிக் கொண்டே முற்றத்துக் குறட்டில் உட்கார்ந்தார்.

''உன்னைத் தானே! எழுந்திருந்து இப்படி வா'' அப்பாவின் அடிக் குரல் கேட்டு விழித்துக் கொண்டாள் சீதா. அரைக் கண்ணால் மெல்ல முற்றத்தைப் பார்த்தாள்.

அம்மா எழுந்து சென்று, அப்பாவின் எதிர்ப்புறக் குறட்டில் உட்கார்ந்தாள்.

என்னவோ சொல்ல பீடிகையுடன் அப்பா இருமினார்.

''சீதா நன்னா தூங்கறாளா?''

அப்பாவின் கேள்வி, சீதாவின் மார்பைப் படபடக்கச் செய்தது. கண்களை மூடிக் கொண்டு காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

''தூங்கறா. அவளுக்கு வயசாச்சே ஒழிய ஒரு விஷயமும் புரியலே. ரொம்ப வெகுளியா இருக்கா'' அம்மா பெருமூச்செறிந்தாள்.

''இன்னிக்கு கோவில்லே...ஊர் பெரியவா அத்தனை பேரும் கூடியிருந்தா, எதிர் வீட்டு ராமுவும், மிராசு நடேசனுந்தான் அதிகமா அதைப் பத்தி காரமா பேசினா...ஒரேயடியா என்னை மடக்கிட்டா. நான் வழியில்லாம ஒப்புக் கொண்டு வந்திருக்கேன்.''

''என்ன சொல்றேள்?'' திகைப்புடன் அம்மா கேட்டாள்.

அவர்கள் பேசியது அவளைப் பற்றித்தான் என்று உள்ளுணர்வின் எச்சரிக்கையில் சீதாவின் நெஞ்சு துடித்தது.

''இத்தனை நாளும் குழந்தைனு பேசாம இருந்துட்டோம். பெண்ணுக்கு இப்போ வயசாயிடுத்து. இனியும் நீ குல ஆசாரப்படி நடக்காம இருந்தா அர்ச்சகர் பதவியிலே—சுவாமிக்குப் பூஜை செய்வதை நாங்க எப்படி அனுமதிக்க முடியும்னு ராமு கோபமாகக் கத்தினான்.''

''சும்மா விட மாட்டானே'' அம்மா முணுமுணுத்தாள்.

''இந்த வாரம் விஷயம் தெரிந்த பொண்டுகளைக் கூட்டி வச்சு அந்தப் பொண்ணுக்குச் செய்ய வேண்டியதைச் செஞ்சிடு. விவரம் தெரியாமே அது பாட்ல கோவிலுக்கு வரதும் போறதும் அந்தத் தடிப் பயல் நீலுவோட பேசிண்டு நிக்குறதும் நம்ம தர்மத்துக்கே அடுக்காத விஷயம் சொல்லிட்டேன்னு சீறினான் நடேசன். நான்

என்ன பண்ணுவேன். ஏழை! அன்னாடம் காய்ச்சி, ஊர் பெரிய மனுஷா தயவில் வாழறவன்'' அப்பா குலுங்க குலுங்க அழுதார்.

''எச்சுப் பாட்டியைக் கூப்பிட்டுட்டு கேக்கறேன். கூடைத் தலை மயிர்...என் வயிறு எறியறதே. இப்ப இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு கதியா வரணும்... ஈஸ்வரா!'' அம்மா விக்கினாள். அடிவயிற்றில் இருந்து வேதனையும் விம்மலும் வார்த்தைகளாக வெடித்தன.

அரைகுறையாக ஏற்கனவே வீட்டுக்கு வந்தவர்கள் அம்மாவுடன் பேசியதைக் கேட்டுத் திகிலடைந்து போயிருந்தாள். இப்போது அந்தக் கொடுமை தனக்கு விரைவில் நடக்க ஊர்ஜிதமாகி விட்டது என்ற உண்மையை அப்பா சொல்லக் கேட்டதும் அவள் உடல் பயத்திலே சில்லிட்டுப் போயிற்று. உணர்வுகள் ஊமையாயின. எச்சுப் பாட்டியைப் போல அவளும் தலையை மழித்துக் கொண்டு வெள்ளைப் புடவையில் முக்காடிட்டுக் கொண்டு ...ஐயையோ...அலங்கோலம்...செய்ய...போகிறார்களா?

கண்ணீர் வெள்ளம் போல் பெருகியது. பெற்றவர்களே அலங்கோலம் செய்யத் துணிந்து விட்ட போது யாரிடம் முறையிடுவாள்? யார் உதவியை நாடுவாள்? அதற்குப் பின் அவளுக்கு உறக்கம் ஏது? ரகசியமாகக் கண்ணீரைத் தலையணை முழுவதும் வழிய விட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த வெள்ளிக்கிழமை காலை அம்மா அவளை அழைத்துக் கடையில் தான் வாங்கி வந்த கண்ணாடி வளைகளைக் கை நிறைய அடுக்கினாள். கூடத்துத் தரையில் உட்கார வைத்துத் தலையை இழை இழைய வாரிப் பின்னி, தோட்டத்து மல்லிகைப் பூ அத்தனையையும்

தொடுத்துச் சுமையாகத் தலையில் சூட்டினாள். முகத்தைத் துடைத்துப் பொட்டிட்டுக் கண்களுக்கு மை தீட்டினாள். தன்னுடைய ஒரே பட்டுப் புடவையை எடுத்துக் கொடுத்து உடுத்திக் கொள்ளச் சொன்னாள்.

கண் கொள்ளா அழகோடு நின்ற பெண்ணை இறுகத் தழுவிக் கொண்டு 'ஓ'வென அழுதாள் தாயார். எமதூதன் நிழல் போல் எச்சுப் பாட்டியின் நிழல் வாயிற்படி அருகில் தெரிவதைக் கண்டு அம்மா அவசரமாக அழுகையை அடக்கிக் கொண்டாள்.

''இன்னி முழுக்க இவ இப்படியே இந்த அலங்காரத்திலேயே இருந்துட்டுப் போகட்டும். பாவம் பின்னால் இப்படிப் பாக்கவா போறோம்'' எச்சுப் பாட்டி அம்மாவிடம் சொன்னபோது சீதா நெருப்பிலே விழுந்து விட்டவள் போல் துடிதுடித்துப் போனாள்.

கதவை மூடி விட்டு அம்மா பாட்டியுடன் மேற்கொண்டு ஏற்பாடுகளைச் செய்ய வெளியே சென்று விட்டாள். அவர்கள் பேச்சினின்றும் சனி பின்னிரவு, அதாவது ஞாயிறு அதிகாலை அவளுக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப்படும் என்று விளங்கி விட்டது. வீட்டிற்குள் இருப்புக் கொள்ளாது அவள் தோட்டத்துக் கிணற்றுக்கு வந்தாள்.

மழைக்குப் பின் கிணற்றிலே கையெட்டும் அளவில் நீர் நிறைய வழிந்து கொண்டிருந்தது. தொப்பென்று அதற்குள் குதித்துவிட வேண்டும் போல ஒரு ஆத்திரமும் ஆவேசமுமாக எட்டிப் பார்த்தாள்.

தலை நிறைய பூவும், கண்களில் மையும், நெற்றியில குங்குமப் பொட்டுமாக தண்ணீருக்குள் பிரதிபலித்த பெண்ணின் உருவம் கொள்ளை அழகு! இந்த அழகை அலங்

கோலம் செய்யப் போகிறார்கள்! அவளால் தாங்க முடிய வில்லை. விக்கி விக்க அழத் தொடங்கினாள்.

இரு வீடுகளுக்கிடையே இருந்த இடைச் சுவர் மழையினால் கரைந்து விழுந்து விட்டிருந்தது..

''சீதா!'' குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சுவருக்கு அப்பால் நீலு. சீதாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ''நீலு!'' என்று கதறியபடியே அவன் அருகே ஓடினாள். மேலும் கீழும் அவளை ஏற இறங்கப் பார்த்தான் அவன். அவனது கண்கள் குளமாயின.

''உங்கப்பா அங்கே கோவில்ல அம்மனை அலங்காரம் செஞ்சிண்டிருக்கார். இங்கே உங்கம்மா...'' அவன் பேச்சுத் தடைப்பட்டது துயரத்தினால்.

''நீலு!'' அவள் விக்கினாள்.

''எனக்குத் தெரியும். கேள்விப்பட்டேன். எங்கம்மா கூட ஊரில் இல்லே. நானே உங்காத்துக்கு வந்து பேசறதின்னு முடிவு செய்துண்டிருந்தேன்.''

''ஊர் பெரியவாளை எதுத்துக்க முடியாதுன்னு அப்பா சொல்றாரே...என்னைப் பலி குடுக்கப் போறாடா நீலு. என்னைக் காப்பாத்த யாருமே இல்லியாடா?''

''உனக்குத் துணிவு இருந்தா இதைத் தவிர்த்து எதிர்க்க முடியும்'' நீலு திடமாகக் கூறினான்.

''என்ன சொல்றே நீலு?''

''உன்னை இந்த விபத்திலேருந்து நான் காப்பாத்தறேன். ஆனா...நீ என்னை நம்பணும். சத்தியமா நான் காப்பாத்த முடியும்.''

''புரியும்படி பேசேண்டா, குழப்பறியே'' அவள் அழுதாள்.

''இன்னி ராத்திரிக்கி ரெயில் பயணத்துக்கு ரெண்டு டிக்கெட் வாங்கி விடறேன். ராத்திரி பத்து மணிக்கு இங்கேருந்து கிளம்பி மேலநத்தம் ஸ்டேஷனில் பனி ரெண்டு மணி வண்டியைப் பிடிக்கலாம். என்னை நம்பி கிளம்பியாகணும். வருவியா'' கடுமையாகவும் உரிமை யாகவும் கேட்டான் நீலு.

''நீலு! நம்பறேண்டா. ஞாயிற்றுக் கிழமை நடக்கப் போறதை நினைச்சா நடுக்கமாயிருக்கு. என்னை எப்பிடி யாவது காப்பாத்துடா நீலு! உனக்கு ரொம்பப் புண்ணி யம்டா.''

''ஸ்! சத்தம் போடாதே. உள்ளே போ. மத்ததை எங்கிட்ட வுட்டுடு'' உறுதி அளித்தான்.

அன்று முழுவதும் அலைந்து பல ஏற்பாடுகள் செய்த களைப்பு; மறுநாள் சடங்கில் ஏற்படும் மனச் சோர்வு இரண்டுமாக அம்மாவை உறக்கத்தில் அழுத்தி விட்டது. எட்டு மணிக்கே அவள் தூங்கப் போய் விட்டாள். அப்பா வாயில் திண்ணையில் படுக்கப் போய் விட்டார். பத்து மணி அளவில் தலையணை மீது துப்பட்டியைப் போர்த்திக் குறுக் காகப் படுக்கையில் வைத்தாள். பூனை போல் நழுவி தோட்டத்திற்குள் வந்தாள்.

நீலு கையைப் பிடித்து அவளை அலாக்காகத் தூக்கித் தங்கள் வீட்டுப் பக்கம் அழைத்துக் கொண்டான்.

பேசவோ நிற்கவோ இல்லை. அவன் இழுத்த இழுப் பிற்கு இணங்கி, அவன் கையை விடாமல் பற்றியபடி அவள் ஓடினாள். ஓடினாள். நெஞ்சிறைக்க மூச்சடைக்க, உயிரே போய் விடும் போன்ற திகிலுடன் உடலெல்லாம் பதற, திரும்பிப் பார்க்கவும் பயந்தவளாய் ஊரை விட்டே ஓடினாள்!

6

கையிலே எதுவும் எடுத்து வரவில்லை. அவனும் எதுவும் கொண்டு வரவில்லை. உடுத்தி இருந்த வேஷ்டி யும் சட்டையும், பையில் கொஞ்சம் பணமுமாகப் புறப் பட்டிருந்தான்.

அவள் மேனியில் நகைகள் ஏதும் கிடையாது. காது களில் சிகப்புக் கம்மல், கழுத்திலே பவள மாலை, கைக ளில் கண்ணாடி வளையல்கள். அவளும் உடுத்தியிருந்த துணியுடன்தான் கிளம்பி விட்டிருந்தாள்.

நகரத்திலே ஒரு சந்திற்குள்ளே அவளை அழைத்துச் சென்றான். அழுக்குப் பிடித்ததொரு கட்டடம். அதற்குள் வாடகைக்கு ஒரு அறை எடுத்தான். முகத்தைக் கழுவி வாயைக் கொப்பளித்து விட்டு இருவரும் அறைக்குள்ளே வந்து தரை மீது உட்கார்ந்து கொண்டனர்.

''சீதா! பசிக்கிறதா?'' அன்போடு கேட்டான். சட்டைப் பையிலிருந்த ஒரு பர்சை எடுத்துத் திறந்தான். கத்தையாக ரூபாய் நோட்டுக்கள். அவள் கண்கள் வியப்பால் விரிந்தன.

''உனக்கு ஏதுடா இவ்வளவு பணம்?'' கேட்டாள்.

''ஊருக்குப் போகும் அம்மா, திருட்டுப் பயத்தில் தன் இரட்டை வடம் சங்கிலியைக் கழற்றிப் பெட்டியில் வச்சுட்டுப் போயிருந்தாள். அதைப் பக்கத்து டவுன் ஷராப்புக் கடையில் வித்தேன். டிக்கட் வாங்கினேன். மிச்சம் வச்சிண்டு இருக்கேன்!''

''எனக்காகவா இதெல்லாம் செஞ்சே? நீலு! நீ ரொம்ப நல்லவண்டா. உன்னை எனக்கு எப்பவுமே பிடிக்கும். இப்ப ரொம்பப் பிடிக்கிறது.''

''எனக்கும் உன்னை ரொம்பப் பிடிக்கும். இல்லாட்டி இப்பிடித் துணிஞ்சு ஒரு காரியத்தில் இறங்குவேனா?''

திடீரென சீதாவைக் கவலை சூழ்ந்து கொண்டது.

''நீலு! நம்மைப் பத்தி இப்ப ஊரில் என்ன பேசிப்பா?''

''என்ன வேணுமானாலும் பேசட்டும். அக்கறை இல்லே.''

''நீலு எனக்கு ஒரு யோசனை தோண்றது. செய்வியா?''

''சொல்லு.''

''உன்னோட ஓடி வந்துட்டேன்னு கன்னா பின்னான்னு ஊர்ல எல்லோரும் பேசுவா இல்லியா? அதனாலே நீயே என்னைக் கல்யாணம் பண்ணிண்டு விடு.''

''சீ அசடு! என்ன பேச்சு இது? உன் மேலே எனக்கு ரொம்பப் பிரியம் உண்டு. வாஸ்தவம்தான். ஆனா இந்த மாதிரி தப்பான எண்ணத்தோட உன்னை நான் அழைச்சுண்டு வரலே. உன்னைப் பாக்கற போதெல்லாம் எனக்கு என் அக்கா பர்வதம் ஞாபகந்தான் வரும்.''

''உனக்கு ஒரு அக்கா இருந்தாளாடா? எனக்குத் தெரியாது.''

''அவ செத்துப் போய் எத்தனையோ காலமாச்சு. அப்போ நீ சின்னக் குழந்தை. அவ எப்படிச் செத்துப் போனா தெரியுமா?''

''ம்.''

''உன்னைப் போல சின்ன வயசில அவளுக்கும் கல்யாணம் நடந்தது. அப்ப அவளுக்கு வயது ஒன்பது. அவ புருஷனும் செத்துப் போயிட்டான். பதினாலாவது வயசுல அவள் அழ, அழ அவளை ஊரார் பேச்சுக்குக் கட்டுப் பட்டு அம்மா அலங்கோலம் பண்ணிட்டா. அந்தக் காட்சி என் மனசிலே அப்படியே நிக்கறது. உள்ளத்திலே ஆறாத ரணமாயிட்டுது. அன்னியிலேருந்து நான் நம்ம ஆசார பழக்க வழக்கங்களை வெறுக்க ஆரம்பிச்சேன். என் மனச்சாட்சி சொன்னபடி நடக்க ஆரம்பிச்சுட்டேன்'' நீலுவின் குரல் உணர்ச்சி வசத்தால் தழுதழுத்தது.

''துஷ்டன், முரடன், அசத்துன்னு பேர் கிடைச்சுது; கவலைப்படலே. என் அக்காவுக்கு வைதவ்ய வாழ்க்கை ரொம்ப சிரமமாக இருந்தது. கதவு மூலையிலே காலமுட் டும் ஒளிஞ்சு வாழறது அவளுக்குப் பிடிக்கலை. ஒரு நாள் வெறுப்புத் தாங்க முடியாமல் அவ தன் மேலே மண் எண்ணையை ஊத்திப் பத்த வச்சிண்டுட்டாள். அந்தக் கோரத்தை என்னால் எப்படி மறக்க முடியும்? அது மாதிரி ஒரு கதி உனக்கும் நேரக் கூடாதுன்னு என் மனச் சாட்சி சொல்லிச் சொல்லி ஆத்திரப்பட்டுது. அதுதான் உன்னைத் தைரியமாக அழைச்சிண்டு ஓடி வந்துட்டேன். மத்தப்படி நீ என் வரைக்கும் என் கூடப் பிறக்காத ஒரு சகோதரி. புரிஞ்சுக்கோ'' என்றான் துயரம் நிரம்பிய குரலில்.

உண்மையில் நீலு அத்தனை நல்லவனா? நம்பவே முடியவில்லையே! அயோக்கியன், துஷ்டன் என்றெல் லாம் அப்பா சொல்வார். நிமிர்ந்து பார்த்துப் பேச அஞ்சி அவர்கள் தெருப் பெண்கள்—நடுநடுங்கி அவனைக் கண்டு ஓடி ஒளிவார்கள். அந்த உருவில் இத்தனை நல்ல மனதா? அவள் கண்கள் நீரைப் பெருக்கின.

''நீலு! நீலு!'' என்றவள் மேலே பேச முடியாமல் விம்மினாள்.

''ஸ்'' என்றான் அவன்.

கண்களைத் துடைத்தபடி கேட்டாள் சீதா. ''நீலு இப்ப நான் என்ன செய்வேன், பயமா இருக்கே. மறுபடி யும் எப்படி நம்ப ஊருக்குப் போறது?''

''ஊருக்கு எதுக்காகப் போகணும்? நான் சொல்றபடி கேட்டா நீ இந்த அவமானத்திலிருந்து மீண்டு தலை நிமிர்ந்து வாழ்வே, என் பேச்சைக் கேப்பியா?''

அவள் தலையசைத்தாள்.

கிராமத்து வாழ்க்கையில் அடிபட்ட முரட்டு வாலிபன் தான் நீலு. ஆனாலும் அவனுக்குப் பட்டணத்தில் உள்ள பல விஷயங்கள் தெரிந்திருந்தன. சீதாவிற்கு வியப்புத் தாங்க முடியவில்லை. அன்றைய தினமே அவளை சாரதா தேவி நடத்தி வந்த அனாதைப் பெண்கள் இல்லத்திற்குக் கூட்டிச் சென்றான்.

வெளியே அவளைப் பெஞ்சி மீது உட்கார வைத்து விட்டுத் தலைவியைப் பார்க்க அவன் மட்டும் தனியே சென்றான். அவளிடம் என்ன பேசினானோ மந்திரமோ மாயமோ தெரியாது. சீதாவைத் தங்கள் இல்லத்திலே சேர்த்துக் கொள்ள தலைவி உடனடியாக ஒத்துக் கொண்டு விட்டாள். அத்துடன் அவளுக்குக் கல்வி பயிலவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இல்லத்திலே தங்குவதற்குத் தேவையான துணிகள், பெட்டி, படுக்கை எல்லாம் வாங்கி எடுத்துக் கொண்டு மாலையே அவளை அந்த இல்லத்தில் அவன் சேர்த்து விட்டான்.

''அப்போ நான் போய்ட்டு வரேன். ஞாபகம் வச்சுக்கோ சீதா! நீ இங்கே இருக்கற விஷயம் ரொம்ப ரகசியமாக இருக்கும். யாருக்கும் தெரியாது. நன்னா படி. இந்தா செலவுக்கும் பணம் வச்சுக்கோ சீதா! பத்து ரூபாய் நாணயங்களை அவள் கையில் வைத்தான்.

அவனது பிரிவின் பளுவைத் தாளாமல் அவள் அழுது விட்டாள். ''நீலு! நீ என்னை விட்டுட்டு எங்கேடா போறே...'' விம்மினாள்.

'நீ படிச்சு முன்னுக்கு வரணுமானால், கொஞ்ச காலம் நான் உன் செலவுக்குப் பணம் அனுப்ப ஒப்புக் கொண் டிருக்கேன். நான் வெளியூருக்கு எங்கேயாவது போய் சம்பாதிச்சு பணம் அனுப்பணும். வரட்டுமா!''

வாயில் கேட் வரை அவனை வழியனுப்பி விட்டுக் கொண்டே நின்றாள் சீதா. அவள் மனதை ஒரு உண்மை யான நண்பனைப் பரியும் ஏக்கம் முறுக்கியது.

ஒவ்வொரு மாதமும் அவனிடமிருந்து ஒழுங்காக படிக்கப் பணம் வந்து கொண்டே இருந்தது. இரண்டு வருடங்களுக்குப் பின்னர் ஒரு முறை அவன் அவளைப் பார்க்க வந்திருந்தான். ஆள் மிகவும் மாறி விட்டிருந் தான். இளைத்துப் பாதியாகி விட்டிருந்தான். அவனது பொன்னிறம் மாறி மங்கிக் கறுத்துப் போயிருந்தான்.

''நீலு! ரொம்ப மாறிப் போயிட்டியே'' அனுதாபத் துடன் விசாரித்தாள்.

''மனசு மட்டும் உன் வரை என்றும் மாறாது தெரிஞ் சுக்கோ! கிராமத்துக்கும் போய்ட்டு வரேன்'' லேசாகச் சிரித்தான்.

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''அப்பா அம்மா எல்லாரையும் பாத்தியாடா? என்ன சொன்னா?''

''ஊரே கட்சி கட்டிண்டு என்னை அடிச்சு நொறுக்கப் புறப்பட்டிருந்தது. மிராசு நடேசுதான் பஞ்சாயத்துப் பண்றவரை மேலே கை வைக்கப்படாதுன்னார்'' அவன் நிறுத்தினான்.

''என்ன தீர்ப்பாச்சு'' பதறினாள்.

''ம்! தூணிலே கட்டி வச்சு அடிக்கும்படி முடிவாக் கினார்.''

''ஐயையோ! அடிச்சாளா?'' பதறினாள் அவள்.

''கள்ளங்கபடமில்லாத ஒரு சின்னப் பெண்ணைத் திருட்டுத் தனமாகக் கடத்திக் கொண்டு போன குற்றம்... அடி வாங்கினேன். அந்தப் பொண்ணு எங்கேடான்னு கேட்டா...எனக்குத் தெரியாதுன்னுட்டேன் அவ...அவ... என்னை விட்டு எங்கியோ ஓடிட்டாள்னு பொய் சொல்

லிட்டேன்'' அவன் உதடுகள் துடித்தன. வார்த்தைகள் தடு மாறின.

''நீலு! நீலு!'' என்று அரற்றினாள் சீதா.

''பாவி சண்டாளான்னு ஊரே என்னை மொத்து மொத்துன்னு மொத்தினார்கள். என் அம்மா கதறி அழுதா. நான் வாயையே திறக்கலை. உடம்பெல்லாம் கணுக் கணுவாய் வலிச்சுது. ஆத்துக்குப் போய் மடமடன்னு வெந்நீரை வச்சு ஸ்நானம் பண்ணினேன். அத்தோடு அந்த ஊருக்கு முழுக்குப் போட்டுட்டுக் கிளம்பிட்டேன் சீதா!'' விரக்தியுடன் சிரித்தான்.

சீதாவின் இதயத்தில் ரத்தம் கசிவதுபோல் இருந்தது. ''நீலு! எனக்காக நீ அடி, அவமானம் எல்லாத்தையும் ஏத்துண்டிருக்கியே. இதுக்குப் பிரதியா...நான்...எப்படி ...'' அவள் துக்கத்தில் திணறினாள்.

''நன்னாப் படி, முன்னுக்கு வா, இந்தச் சமூகத்தின் முன்னாலே தலை நிமிர்ந்து நில். அதுவே போதும்... பொட்டும், பூவும் பொண்ணோட கூடப் பிறந்த சௌபாக் கியங்கள். அவைகளை நீ உதறக் கூடாது. அந்தப் பாக் கியங்களை அனுபவிச்சுண்டு நிறைவோடு இரு'' ஆசீர் வதித்தான். தன் கையிலிருந்த இரண்டு ரூபாய்களை அவள் கையில் செலவிற்குக் கொடுத்து விட்டு அவன் விடை பெற்றுக் கொண்டான்.

அதன் பின் ஒரு வருடம் முழுவதும் செலவிற்குப் பணமும் வந்தது. திடீரென ஒரு நாள் அவை யாவும் நின்று போயின. ஏன்? வேலையில்லாமல் அவன் திண்டாடு கிறானோ? ஆனால் நல்ல வேளையாக, சாரதா தேவியின் முயற்சியால் அவளுக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. படித்தாள்; சில ஆண்டுகளில் அவள் பட்டதாரியானாள்.

சாரதா தேவியின் சிபாரிசினால் இண்டர் ட்யூப்ஸ் அண்ட் பைப்ஸ் நிறுவனத்தில் கணக்கராக அமர்ந்தாள். ஆரம்ப காலத்தில் அவள் வேலை செய்த நிறுவனம் மிகச் சிறிய அளவில்தான் நடந்து வந்தது. அதன் தலைவர் மல்ஹோத்ரா நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். அதைத் தானே சாமர்த்தியமாக நடத்தி வந்த அவர் மனைவி சில ஆண்டுகளுக்குப் பின்னர், தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப விரும்பினாள். குறைந்த விலைக்கு, அந்த நிறு வனம் சீதாவிடமே வந்து சேர்ந்தது.

இவ்வாறெல்லாம் தன் வாழ்க்கையிலே ஒரு திருப்பம் ஏற்படும் என்று கனவில் கூட சீதா நினைத்தவ ளில்லை. அதிர்ஷ்டம் அவள் பக்கம் இருந்தது. நெஞ் சிலே துணிவு இருந்தது. நம்பிக்கைக்கும் ஆட்கள் சூழ்ந் திருந்தனர். விரைவில் அவளது நிறுவனம், வேகமாக முன்னேறி ஒரு பெரும் தொழிற்சாலை, மொத்த வியா பாரக் கடை ஆபீஸ்கள், கிளைகள் எனப் பரவி விட்டன.

பங்களா, கார், ஆட் படைகள் என்ற அமோகமான வாழ்வு. இதுவரை தலைமறைவாக இருந்த உறவினர்கள், ஓடோடி வந்து அட்டை போல் ஒட்டிக் கொண்டனர். ஊரை விட்டு ஒருவனுடன் ஓடி விட்டவள் என்ற அவச் சொல் அடியோடு மறைந்து விட்டது. பணம் எல்லா மேடு, பள்ளங்களையும் இட்டு நிரப்பி விட்டது! ஆனால், அவள் மனதிலே நிறைவைக் கொடுக்க அதற்குத் திறமை இருக்க வில்லை. இத்தனைக்கும் காரணமான நீலு — அவன் எங்கே, எங்கே என்று சதா உள்ளம் உளைந்தது.

'இங்கே பார்த்தோம், அங்கே பார்த்தோம்' என்று உறவினர்கள் அவள் காதுபடப் பேசிய போது, 'அவன் இறந்து விடவில்லை. எப்படியோ எங்கேயோ வறுமை

யுடன் வாடிக் கொண்டிருக்கிறான்' என்பதைப் புரிந்து கொண்டாள்.

நீலுவைச் சந்தித்து அவளது வயது காலத்தில் அவனைச் சுகமாக வாழ வசதி செய்து தர வேண்டியது அவள் கடமை இல்லையா? அதை நிறைவேற்றத் தானே தவிக்கிறாள். ஆனால், வழி? அவன் எங்கே இருக்கிறான்? வலியத் தேடிக் கொண்டு வந்தவனை மனம் நோகப் பேசி அனுப்பி விட்டார்களே அவர்கள்!

சமாதிக்கு அபிஷேகம் செய்த பின்னர், பக்தர்கள் அருகே வந்து தொட்டு நமஸ்கரிக்க கோவிலார் அனுமதித்தனர். நீண்டதொரு க்யூவில் அவள் நகர்ந்து கொண்டே வந்தாள். முதல் நாள் மாலை கடையில் வாங்கிய சாயி பகவான் என்ற புத்தகத்தில் ஏடுகளைப் புரட்டியபோது காணப்பட்ட சில வரிகள் இப்போது கவனத்திற்கு வந்தது.

''துவாரகா மாயி மீது காலை வைத்தவுடன் என் பக்தர்களின் எல்லாத் துன்பமும் மறைந்து விடும். என்னையே பூரணமாக நம்பி சரண் அடைகின்ற என் பக்தர்களுக்கு நான் அருளை வழங்குவேன். ரக்ஷிப்பேன். குறைகளைத் தீர்த்து வைப்பேன்.''

பளிங்குக் கல்லால் ஆன சமாதி மீது குடம் குடமாக நீரைக் கொட்டி விட்டு ஆட்கள் துடைத்த வண்ணமிருந்ததால் ஒவ்வொருவராக அருகில் சென்று கையை அதன் மேல் வைத்துத் தொழுது வணங்கி அருளை வேண்டிக் கொண்டு நகர்ந்தார்கள்.

''என்ன நினைக்கறியோ, அதை ஆண்டவன் கொடுப்பார், மனப் பூர்வமாக உள்ளம் உருகி வேண்டிக்கணும்'' ரேவதி மெல்லக் கிசுகிசுத்தாள்.

சமாதி அருகே வந்ததும் ஏனோ உணர்ச்சிவசத்தில் சீதாவின் உடல் ஆடியது. தன் இரு கைகளையும் பளிங்கு

கற்கள் மீது வைத்தாள். ''நீலுவைச் சந்தித்து கடமை செய்ய அருள வேண்டும் பகவானே!'' எண்ணி முடிப்பதற்குள் கன்னங்களில் தாரையாக நீர் வழிந்தது. கால்கள் தள்ளாட மெல்ல நகர்ந்தாள்.

அவர்கள் பகல் உணவிற்குப் பின்னர் மாலையில் பஸ்ஸில் புறப்பட்டனர். நான்கு மணிக்கே 'மான்மாட்' நிலையத்திற்கு வந்ததும், திரும்பும் பிரயாண டிக்கெட்டுகள் பற்றிய நிலை கிணற்றில் போட்ட கல்லாக இருந்தது.

''நாளன்னிக்குக் காலேஜ் போயாகணுமே'' நிஷா ஆர்ப்பரித்தாள்.

''என் தங்கை பெண் நிச்சயதார்த்தம் வருகிற ஞாயிற்றுக் கிழமை. இங்கே வந்து மாட்டிக் கொண்டிருக்கிறோம். ரிஸர்வேஷன் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?'' கவலையடைந்தாள் மரகதம்.

ரேவதி மட்டும் துணிவாக இருந்தாள். ''ஒன்றாக உட்கார முடியாது போகலாம், அவ்வளவுதான். ரிஸர் வேஷன்தானே கிடைக்கலை. டிக்கெட்டுகள் இருக்கே. கவலை வேண்டாம். வண்டி வந்ததும் எல்லோரும் இடம் கிடைச்சா ஒரு பெட்டியில் ஏறிடுவோம். பிறகு நிதானமாக பார்த்து இடத்தைப் பிடிக்கலாம். ரங்கையா ஆண் பிள்ளை. எல்லாச் சாமான்களையும் தூக்கிக் கொண்டு உள்ளே சென்று காவலாக ஒரு பக்கத்தில் நிற்கட்டும். மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன்'' அபயம் அளித்தாள்.

தண்ணீர் இல்லாத தங்கும் அறைக்குள் யாவரும் மீண்டும் படை எடுத்தனர். வெளியிலிருந்த குழாய் நீரைப் பிடித்து வந்து முகம் கழுவி, சீராக்கிக் கொண்டு எஞ்சியிருந்த பிஸ்கட்டுகள், ரொட்டிகள், இத்யாதிகளை வயிற்றுக்குள் போட்டுப் புதைத்தனர்.

இருட்டத் துவங்கியது. குளிர்காற்று சில்லென்று மேனியைத் துளைத்தது. தூரத்தே கடலை மாவுத் தோசைக் கல் மீது வேகும் மணம். மூக்கில் வந்து மோதியது. இவர்கள் இருக்குமிடத்தில் பின்னும் ஒரு கோஷ்டி வந்து புகுந்து கொள்ளவே, நெரிசல் தாங்க முடியாமல் அறையை விட்டு வெளியே வந்தாள் சீதா. ரேவதியும் பின் தொடர்ந்தாள்.

குட்டை ஆசாமி. அந்தக் காப்பிக் கடை அருகே, அவசரமாகத் தோசையைச் சுட்டுக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றி ஒரு கும்பல்.

''மறுபடியும் பேசன் கி பூடாவா?'' ரேவதி சிரித்தாள். அது சமயம் ஒரு கிழவன், இருமியபடி மெல்ல நடந்து அங்கே வந்தான். தலை முழுதும் கம்பளியால் போர்த்தியபடி, நடக்க முடியாதவனாக, காப்பிக் கடைக்கு எதிரே அமர்ந்தான். குட்டை ஆசாமி அவனைக் கண்டதும் பற்களைக் காட்டி, ''கைஸா ஹை?'' என்றான். கிழவன் இருமியபடியே அவனைப் பார்த்தான். சீதா அப்போதுதான் கவனித்தாள். அவன்...அவன்...அவள் முகம் சுருங்கியது. மனது தவித்தது. அப்படி இருக்குமா?

7

சில்லென்று எங்கிருந்தோ பனிக் காற்று வீசியது. சீதாவின் உடல் நடுங்கியது. தலை மீதிருந்த கம்பளியை இன்னும் நன்கு இழுத்து முகத்தின் மீது வழியும்படி விட்டுக் கொண்டு கிழவன் மறுபடியும் இருமினான்.

கடலை மாவு தோசையின் மணம் பிளாட்பாரம் முழுவதும் பரவவே, மேஜையைச் சுற்றிக் கும்பல் அதிகரிக்கத் துவங்கியது.

ஒல்லி ஆசாமி, கண்ணாடி தம்ளரில் காப்பியை நிறைத்து எடுத்துக் கொண்டு சென்று கிழவன் அருகே தரை மீது வைத்தான்.

''கைஸா தர்ஸன் ஹுவா ஈத்க சாந்த் ஜைஸா?'' பற்களைக் காட்டி மகிழ்ச்சியோடு விசாரித்தான்.

கிழவன் உரக்கச் சிரித்தான். கையோடு வைத்திருந்த துணி மூட்டையை அவிழ்த்து ஒரு முடிப்பிலிருந்த காசை எடுத்து எண்ணி அவனிடம் நீட்டினான். கடைக்காரன் தயக்கத்துடன் பின்வாங்குவதைக் கண்டு முன்னால் குனிந்து அவன் கரத்தை இழுத்துப் பிடித்துக் காசை உள்ளங்கையில் வைத்து வற்புறுத்தலாக அழுத்தினான்.

''மே யஹா நஹிதா! தக்ஷன் பாரத்கோ கயதே'' கிழவனது கணீர் குரல். சீதா திடுக்கிட்டாள். ஆனால், அவர்களது உரையாடல் அவளுக்கு விளங்கவும் இல்லை! மனதினுள் மூண்டெழுந்த பரபரப்பை அடக்கிக் கொள்ளவும் முடியவில்லை.

''இவங்க என்ன சொல்லிண்டிருக்காங்க?'' ரேவதியிடம் தாழ்ந்த குரலில் கேட்டாள்.

''இந்தக் கிழவன் இவர்கள் இருவருக்குமே ரொம்ப நாளைய சிநேகிதன் போலிருக்கு. இவன் எங்கேயோ ஊருக்குப் போய் விட்டு இப்போதான் திரும்ப வந்திருக்கணும். குசலம் விசாரிக்கிறான். ஈத் பெரு நாள் சந்திரன் போல எப்படி உன் தரிசனம் கிடைச்சுது என்று ஆச்சரியப்படுவது போல பரிகசிக்கிறான் ஒல்லி ஆசாமி. அதற்கு அந்தக் கிழவன், நான் ஊரிலே இல்லை. தெற்கே போயிருந்தேன்னு பதில் சொல்றான். பாத்தா பிச்சைக்காரன் மாதிரி இருக்கான். ஆனால், எத்தனை தன்மானம் பாரு. குடுத்த காப்பியை ஓசியில் வாங்கிக் குடிக்கலையே? காசு குடுத்து

விட்டுத்தான்னு பிடிவாதம் பிடிக்கிறானே!'' அவள் அதிசயப்படுமுன் குட்டை மனிதன் அடுப்பில் வெந்து கொண்டிருந்த தோசையை ஒரு காகிதத் தட்டில் எடுத்துப் போட்டு அதன் மீது மசாலா உருளைக் கிழங்கை ஒரு கரண்டி வைத்தான்.

கிழவன் அருகில் வந்தான். மீண்டும் மடியில் இருந்த பணத்தை எண்ணி அவனிடம் கொடுத்து விட்டு, ஆவலுடன் தட்டை வாங்கிக் கொண்டான்.

''துமாரா ரிஸ்தேதார்—துமே துக்கி க்யா?'' தோசைக்கார குட்டையன் கேட்டதும் கிழவன், ''ஹா ஹா'' என்று பெரியதாகச் சிரித்தான்.

அதே சிரிப்பு! சீதா உடல் புல்லரிக்க, நெஞ்சை ஏதோ கவ்விப் பிடித்து இழுக்க, சட்டென அருகிலிருந்த ரேவதியின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

''முக்தை—லாக்—யூரா—ச்சாஹே தோ கியா ஹோத்தா வஹி ஹோத்தா மன்ஸுரே க்குதா ஹோத்தா'' ஒல்லி மனிதனும், குட்டையனும் ''அச்சா! அச்சா!'' என்று சிரிக்க கிழவனும் உடன் சேர்ந்து கொண்டான். கூடி இருந்த இரண்டொருவர் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தனர். எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சீதா. அவள் நெஞ்சு ஏனோ திக்திக்கென்று அடித்துக் கொண்டது. கால்கள் பின்னிக் கொண்டன. தடுமாறிக் கொண்டு கீழே விழுந்து விடுபவள் போல் தள்ளாடினாள்.

''எதற்காக இப்படிச் சிரிக்கிறாங்க?'' சீதா மீண்டும் தூண்டினாள்.

''பார்வைக்குப் பிச்சைக்கார நோயாளிக் கிழவனாகத் தென்படறானே. அவன் படித்தவனாட்டம் பேசறான். ஆச்சர்யமாக இருக்கு. உருதுவில் இப்போது அவன் சொன்

னது எனக்கு மிகவும் பிடித்த ஒரு மணிமொழி. கிழவன், ஹிந்தி, உருது எல்லாம் பேசறான். ஆனால், தெற்கேயிருந்து வந்தவன்போல தோணுது. அதுதான் தெற்கே போயிருந்தேன் என்று சொல்லி இருக்கான்.''

''குட்டை ஆசாமி என்னவோ கேட்டானே?'' சீதா கேட்டாள்.

''அதுவா, உன் உறவினர்கள் உன்னைக் கஷ்டப்படுத்தினார்களான்னு கேட்டான்! அதுக்குப் பதில் என்ன சொன்னான் தெரியுமா? 'கோடி ஜனங்கள் எனக்குக் கெடுதல் நினைத்தால்தான் என்ன? கடவுள் நினைப்பதுதானே நடக்கும்?' என்ன சாதுர்யமான அழகான வார்த்தைகள். அவன் இன்றி அணுவும் அசையாது என்பதன் அடக்கம்! தென்னாட்டைச் சேர்ந்தவன் போல இருக்கு. இங்கு வந்து மாட்டிண்டு இருக்கான்'' ஆச்சரியத்துடன் கிசுகிசுத்தாள் ரேவதி.

சீதாவின் உணர்வில் இனம் விளங்கா நெருடல். வேற்று மொழியில் பேசினாலும் அந்தக் குரல்...அந்த உற்சாகமான உரத்த சிரிப்பின் ஒலி...எல்லாமே மிகப் பழக்கமானவை போன்றதொரு திகைப்பு...அத்தனைக் குளிரிலும் உடல் முழுவதும் திடீரென வியர்வை கொப்பளித்துக் கொட்டியது.

''இந்தப் பெரியவர் உங்களுக்குச் சிநேகிதமா? இவருக்கு ஆங்கிலம் தெரியுமா?'' காப்பியைக் கலக்கி டம்ளரில் விநியோகித்துக் கொண்டிருந்த ஒல்லி ஆசாமியை ஆங்கிலத்தில் வினவினாள் சீதா.

முன் போலவே அவன் அசட்டுச் சிரிப்புடன் விழித்தான்.

''ஏம்மா! நீங்க தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்களா?'' கம்பளிப் போர்வையினின்றும் வந்த தமிழ்க் குரல் அவளைத் திகைக்க வைத்தது.

ஒரே எட்டில் அவன் அருகில் ஓடி வந்து நின்றாள். தலையை மூடியிருந்த அந்தக் கம்பளிப் போர்வை நழுவி, அவனது கழுத்தின் மீது விழுந்தது. தும்பைப் பூவாக நரைத்த பரட்டைத் தலை, காடாகி விட்ட தாடி, மீசைக் குள் மறைந்து கொண்டிருந்த முகம், அதில் மின்னிய கண்களில் கூரிய பார்வை, உதட்டின் மீது நெளிந்த கோணல் புன்னகை...சீதா வியந்து போனாள்.

''தமிழ்கூடப் பேசறிங்களே. நீங்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்தானே?'' கேட்டாள்.

''யாதும் ஊரே யாவரும் கேளீர்'' சிரித்தான் கிழவன். சீதா ஊன்றிப் பார்த்தாள். அருகில் வந்து எதிரே காலை மடக்கிக் கொண்டு உட்கார்ந்தாள். நிச்சயமாக...இது...

''நீங்க...நீ...நீ...நீலுதானே?'' அவள் குரல் தழுதழுத் தது. பேச முடியாமல் திணறியது. நெஞ்சில் கண்ணீர் கரை புரண்டது.

கிழவன் தூக்கி வாரிப் போட அவளையே பார்த்தான். ''நீ...நீ...சீதாவா?'' உணர்ச்சியினால் வார்த்தைகள் சிக்கித் தவித்தன.

''நீலு! நீலு! உன்னைத் தேடிண்டே இருந்தேனே! இத்தனை நாள் எங்கே போயிருந்தே? இங்கேயாவது உன்னைச் சந்திச்சேனே. என்னை மறந்தே போயிட்டியா நீலு?'' அவள் மேலும் புலம்பிவிட எண்ணினாள். ஆனால், அவளால் பேச முடியாமல் பெரும் விம்மல்கள் வெளி வந்தன. ஸாயிநாதன் கோவில் திசை நோக்கி, கைகளை உயர்த்தி நன்றியுடன் கரம் குவித்தாள். துக்கம், மகிழ்ச்சி, கண்ணீர் என்ற உணர்ச்சிப் போராட்டத்தில் அவளது நெஞ்சம் முடிவிலே குளிர்ந்து போயிற்று. காண வேணும் என்று தவித்த தன் உயிருக்கினிய நண்பனை, ஆபத் பாந்த

வனாக அவளை ரக்ஷித்து வாழ்வளித்தவனை வடக்கே, அந்த இடத்திலே சந்தித்து விட்டாளே! என்ன ஆச்சரியம்?

நவஜீவன் எக்ஸ்பிரஸ் 'மன்மாட்' நிலையத்தினின் றும் புறப்பட்ட போது அந்தக் கோஷ்டியில் பத்தாவதாக ஒரு அதிகப்படி நபருடன், சென்னையை நோக்கி விரைந்து சென்றது!

ரேவதியின் உத்திரவுப்படியே, அவர்கள் அனைவரும் பிளாட்பாரத்தில் அவரவர்களுக்குக் கிடைத்த பெட்டிக்குள் தடதடவென ஏறி விட்டனர். ரங்கையா மூட்டைகளை வாரித் தூக்கி உள்ளே போட்டு விட்டு ஏறிக் கொண்டார். நீலுவிற்கும் ஒரு டிக்கட்டை முன்கூட்டியே வாங்கி விட் டாள் ரேவதி. அவனது கையைப் பிடித்து மெல்ல உள்ளே இழுத்துக் கொண்ட போதுதான் உணர்ந்தாள். அவனுக்கு நல்ல காய்ச்சல். கை நெருப்பாகச் சுட்டது. அவசரமாகக் கிடைத்த இடத்தில் அவனைப் படுக்க வைத்துக் கம்பளி யால் போர்த்தினாள்.

நிலையத்தை விட்டு நகர்ந்த வண்டி, சிறிது நேரத் தில் வேகத்தை அதிகரித்துக் கொண்டு கூச்சலுடன் குளிர் காற்றை ஊடுருவிக் கொண்டு ஓடத் துவங்கியது. ஆடி அசைந்த வண்டியில் அகலமாகக் கால்களை வைத்து நடந்தபடி வந்த டிக்கட் பரிசோதகரிடம் ரேவதி இதமாக இந்தியில் பேசி...இடங்களுக்கு ஏற்பாடுகள் செய்ய முனைந் தாள். மற்ற பயணிகள் இவர்களை, தங்களது இடத்தைப் பிடுங்க வந்த விரோதிகள் போல் பாவித்தபடி முறைத்துக் கொண்டிருந்தனர். ரேவதி காரியமே கண்ணாயிருந்தாள்.

டிக்கட் பரிசோதகர் தமது கையிலிருந்த பட்டியலை பலமுறை படித்து விட்டுத் தலையைச் சொறிந்து கொண்டு முடிவில் அவர்கள் அனைவரையும் ஒரே பெட்டியில்

இங்குமங்குமாக சமாளித்து வாரித் தெளித்தது போல் ஆளுக்கு ஒரு இடம் பார்த்துக் கொடுத்தார். சீதாவுக்கு மட்டும் நோயாளிக் கிழவன் அருகில் இடம் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டு ஒரு இடத்தைப் பிடித்துக் கொடுத்து விட்டாள். கையோடு கொண்டு வந்திருந்த மருந்துப் பெட்டிக்கும் உபயோகம் வந்து விட்டது.

பெட்டியைத் திறந்து குழாயை எடுத்தாள். முதலில் நீலுவை நன்கு பரிசோதித்தாள். அவன் சுவாசப் பையில் கபம் பாறாங்கல்லாகக் கட்டியிருந்தது. நல்ல காய்ச்சல் வேறு. இந்த நிலையிலே, பிளாட்பாரத்தில் குளிரில் உட்கார்ந்து அந்தத் தோசையை விழுங்கிக் கொண்டிருந்தால் மறுநாள் பொழுது விடிவதைப் பார்ப்பானோ என்ற சந்தேகம் அவளுக்கு.

பெட்டியைத் துழாவி ஆண்டிபயாடிக் மருந்தை எடுத்தாள். சிறு குழலில் நிரப்பி நீலு மறுத்தும் கேளாது அவனது தோள் பட்டையில் ஏற்றினாள். இருமல் குறையும் தூக்கவும் வரவும் இரண்டு மாத்திரைகளை அவனது வாயில் போட்டு தண்ணீர் ஊற்றி விழுங்கச் செய்தாள்.

அது சமயம் ரங்கையாவும் அவரது இளைய மகள் நிஷாவும் கையில் ஆளுக்கொரு தினசரித் தாளைத் தூக்கிக் கொண்டு தங்களது இடத்தில் இருப்புக் கொள்ளாது வந்தனர்.

''என்ன டாக்டர்—பட்ஜெட்டைப் பார்த்தீங்களா? சோப்பு, சீப்பு, கண்ணாடியிலிருந்து விலை அதிகமாயிட்டுது. எப்படித்தான் காலம் கழிக்கப் போறோமோ?'' அலுத்துக் கொண்டார் ரங்கையா.

நீலு மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

''இதுக்கு ஏன் கவலைப்படணும்? பட்ஜெட்டை சமாளிக்க சில வழிகள் சொல்லட்டுமா?''

யாவரும் வியப்புடன் அவனைப் பார்த்தனர்.

''மாசத்துக்கு ரெண்டு நாள் வீதம் கடும் பட்டினி. ஒரு நாள் சோப்புப் போட்டுக் குளிக்காதீங்க. ஒரு நாள் எல்லாருமே பழய சாதத்தில் மோர் விட்டுச் சாப்பிடுங்கோ. ஒரு நாள் கரிப் பொடி போட்டுப் பல் தேய்க்கிறதுன்னு வைங்கோ. ப்ரஷ்ஷைத் தொடாதீங்க. இப்படிச் சில முறைகளைக் கையாண்டா போதுமே, பட்ஜெட்ல துண்டே விழாது.''

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். சற்று முன் விரோதிகளாக வெறுத்த மற்ற பயணிகளும் சிரிப்பில் ஒன்றி விட்டனர்.

''திஸ் அங்கிள் இஸ் ஃபுல் ஆஃப் பீன்ஸ்!'' நிஷா சிரித்தாள்.

''ஆமாம் நீ சொல்றதிலே ஒரு வித உண்மை இருக்கத்தான் இருக்கு. வடக்கே நான் வந்து சேர்ந்தப்புறம் — தினமும் பீன்ஸ் குழம்பும் ரொட்டியும் சாப்பிட்டுச் சாப்பிட்டு உடம்பு முழுவதும பீன்ஸ் மரமே காய்க்கிற அளவு நிறைய சேர்ந்துட்டுது. அதனால் நான் ஃபுல் ஆஃப் பீன்ஸ்தான்.''

மீண்டும் கொல்லென்ற சிரிப்பு. சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறானே கிழவன் என்ற வியப்பு.

நீலுவின் தோள்களைப் பிடித்துக் குலுக்கி ரேவதி அவனை மறுபடியும் பலகை மீது படுக்க வைத்தாள்.

''போதும் மிஸ்டர் நீலு. பேசாம தூங்குங்க. அதிகமா பேசினால்...'' அவள் முடிக்கும் முன், ''தெரியும். வாயில் துணிப் பந்தை அடச்சிடுவேன்னு பயமுறுத்துறீங்க. நான் பேசல்லையம்மா'' பயப்படுகிறவன் போல் அபிநயித்து விட்டுக் கண்களை மூடிக் கொண்டான் நீலு.

சீதாவும் அவர்கள் எல்லோருடன் சேர்ந்து சிரித்தாள். இத்தனைக் காலம் இல்லாத ஒரு நிறைவு அவள் சிரிப்பில் மேலோங்கி நின்றது.

நீலு—சீதாவை அடையாளம் கண்டு கொண்டு விட்ட போதிலும் உடனடியாக அவர்களுடன் புறப்பட அவன் சம்மதிக்கவில்லை. ''இப்படியே இந்தப் பக்கத்திலே எத்தனையோ காலம் சுத்திக்கிண்டு இருந்தேன். என்னமோ உன்னைப் பார்க்கணும்னு ஆசை இருந்தது. கையிலிருந்த பணத்தை எல்லாம் போட்டு டிக்கட் வாங்கி சென்னை வந்தேன். எப்படியோ தேடிப் பிடிச்சிண்டு உன் வீட்டுக்கு வந்தேன். ஆனா பாக்கத்தான் குடுத்து வைக்கலை. இப்போ இங்கேயே சந்திச்சோம். பாத்தாச்சு! மனசுக்கு நிம்மதியா இருக்கு. நான் என்னத்துக்கு வரணும்'' பிடிவாதம் செய்தான்.

''நான் அந்தச் சமயம் வீட்டில் இல்லே. என் அண்ணாவின் பேரக் குழந்தைகள்...பொறுப்புக் கிடையாத 'டீன் ஏஜ்' பசங்கள். அதனால்...'' அவள் முடிக்கவில்லை. நீலு வறட்சியாகச் சிரித்தான். ''யாரோ பிச்சைக்காரன், தொந்திரவு பண்ண வந்துட்டான்னு துரத்திட்டாங்க. அவங்களைச் சொல்லிக் குத்தமில்லே. தோற்றத்தைப் பார்த்து எடை போடும் மனுஷாதானே உலகத்திலே அதிகம்.''

''நீ போட்ட பிச்சையில வாழ்கிறவள் நான்னு அவாளுக்குத் தெரியாது நீலு. வாசல் வரை வந்து விட்டு உன் வீட்டுச் சாப்பாட்டை நீயே சாப்பிடாமல் போனால் அது எனக்கு மட்டும் எப்படி ஜீரணமாகும்? அதனால் கொஞ்ச நாளாவே நான் ஒரு பிடி சாதம் கூட சாப்பிட முடியாம வயித்துப் புரட்டலில் திண்டாடுறேன். என்னை நன்றி கெட்டவளாக்கி வேடிக்கை பார்க்காதே நீலு! எல்லோர் முன்னாலேயும் உன் காலைப் பிடிச்சிண்டு கெஞ்சணும்னு நீ

நினைச்சா நான் வெட்கப்பட மாட்டேன். அந்தச் சின்ன வயசிலேயே உன் கையைப் பிடிச்சிண்டு ஓட்டமா ஓடி அந்த நரக வாழ்க்கையிலிருந்தே விடுதலை வாங்கிக் கொடுத்த வீரன் உன் பாதத்தை என் கண்ணீரால் கழுவணும். அதைத் தொட்டு நமஸ்கரிக்க நான் கடமைப்பட்டவ ...உன்னை இப்படியே இங்க விட்டுட்டு நான் மட்டும் ஊருக்குப் போக மாட்டேன்'' படபடவென பேசிய சீதா குனிந்தபோது வெடுக்கென்று எழுந்தான். அவன் கையிடுக்கில் செருகிக் கொண்டிருந்த தடியை ஊன்றிக் கொண்டு அவளை இரக்கமாகப் பார்த்தான்.

''சீதா உன்னை ஒரு போதும் நான் தப்பாவே எடுத்துக்க மாட்டேன். நீ ஏன் மனதைக் கஷ்டப்படுத்திக் கிறே?''

''நீ உடனே எங்களோட வரணும் நீலு. அப்பத்தான் என்னை மன்னிச்சதா அர்த்தம் நீலு! பிடிவாதம் பண்ணாதே. புறப்படுடா...'' குழறியபடி அவள் கண்ணீர் வடித்தாள்.

''சீதா! வரேன்! முதல்லே நீ கண்ணைத் துடைச்சுக்கோ. நீ அழாது சிரிச்சுண்டே நிறைவோட வாழணும்னு ஆசைப்பட்டவன் நான். அப்படி இருக்கச்சே நீ மனசு உடைஞ்சு அழ நான் காரணமா இருப்பேனா? உன்னோட வரேன்'' முடிவில் ஒப்புக் கொண்டான்.

மருந்து கொடுத்த மயக்கத்திலே நீலு அயர்ந்து உறங்கி விட்டான். இருமலும் தணிந்திருந்தது. அடிக்கொரு தடவை சீதா எழுந்து வந்து அவனது நாடித் துடிப்பைப் பரிசோதித்துக் கொண்டிருந்தாள். காய்ச்சல் தணிந்து, வியர்வை நெற்றி மீது துளிர்த்திருந்தது. துண்டால் அதைத் துடைத்து விட்டு...மிகவும் பரிவுடன், பச்சைக் குழந்தையைப் பார்க்கும் தாய் போல், இரவு முழுவதும் தூங்காமல்

அவனையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். நல்ல
ஜீவன் எக்ஸ்பிரஸ் வெகு விரைவாக தண்டாவளத்தின்
மீது தாளமிட்டபடி ஓடிக் கொண்டிருந்தது.

8

மறுநாள் இரவு ஏழு மணியளவிலே சென்னை
கடற்கரை நிலையத்தை வண்டி அடைந்தது. நீண்ட பிர
யாணத்தினால் அலுத்து விட்ட பயணிகள் அவரவர்
மூட்டைகளுடன் அடித்துப் புரட்டிக் கொண்டு அவச
மாக இறங்கினர்.

ரங்கையா கை குவித்து வணங்கி விட்டு விரைவாகத்
தமது குடும்பத்துடன் கூட்டத்திலே மறைந்து விட்டார்.

சரோஜா தன் கணவரைக் கண்டதும் பல ஆண்டுகள்
பிரிந்து விட்டதைப் போன்றதொரு தாபத்துடன் அவச
மாக விடை பெற்றுக் கொண்டு பறந்து விட்டாள்.

மரகதத்தை வரவேற்க தம்பி வந்ததால் மகிழ்ச்சி
யோடு அவளும் நகர்ந்து விட்டாள்.

டாக்டர் ரேவதியின் மகனும் மருமகளும் காருடன்
வந்திருந்தனர். ஆனால், அவள் கோஷ்டியின் தலைவி
யாயிற்றே! அவசரப்படாமல் பொறுப்பு உணர்வு நிறைந்த
டாக்டராக, நோய்வாய்ப்பட்டிருக்கும் நீலுவையும் அத
னுடைய கடுமையின் அளவு தெரியாத சீதாவையும் விட்டுப்
போக மனம் இன்றி நின்று கொண்டிருந்தாள்.

நீலு மெல்ல இறங்கி வந்தான். அவனது கையை
ஆதரவுடன் பிடித்துக் கொண்டு அவனது மூட்டையை
யும் தூக்கிக் கொண்டு சீதா வெளியே வந்தாள்.

அவளுக்காக வீட்டிலிருந்து டிரைவர் காருடன் வந்
திருந்தான். அவள் எதிர்பார்த்தபடியே அவளை வர

வேற்க யாருமே வந்திருக்கவில்லை. அதை ஊகித்த டிரைவர்
முந்திக் கொண்டான்.

''திலீப் ஐயாவும் ரதி அம்மாவும் சினிமாவுக்குப்
போயிருக்காங்க'' என்றான்.

''ம்!'' என்றாள் அவள்.

''ஐயா பிஸினஸ் மீட்டிங்கிலிருந்து இன்னும் வரலை
...அம்மா...அமெரிக்கா போற தங்கச்சி மகனை வழி
யனுப்ப விமான நிலையத்துக்குப் போயிருக்காங்க.''

சீதா மௌனமாக தலையாட்டினாள். அவள் அமைதி
யில்லாமல் தவித்த அந்தப் பழைய மன நிலையில்
இருந்திருந்தால் யாரும் தன்னை வரவேற்க வரவில்லை
என்று ஆதங்கப்பட்டிருப்பாள்.

தன்னைப் பற்றி அன்போடு சிந்திக்கும் ஒரு நண்பன்
அருகில் இருக்கும்போது அவளுக்கு அவர்களது அசட்டை
மனதை உறுத்தவில்லை.

காரின் கதவைத் திறந்து நீலுவைப் பின் ஆசனத்தில்
உட்கார வைக்க விரும்பியபோது ரேவதி அருகில் விரைந்து
வந்தாள். ''சீதா இந்தக் காரில் நானும் உன்னோடு வரு
கிறேன். நேரே நாம் நீலுவைக் கொண்டு சுயம்பூ தனியார்
மருத்துவமனையில் அனுமதித்து விடுவோம். அவருக்கு
இப்போது நல்ல வைத்தியமும், பாதுகாப்பான பணி
விடையும் தேவை, என்ன சொல்றே?'' கேட்டாள்.

சீதா பிடிவாதமாக இருந்தாள். ''நீலு! இனி என்
வீட்டில்தான் இருக்கப் போகிறான். எத்தனை நோயாக
இருந்தாலும் தகுந்த வைத்தியம் செய்ய டாக்டர் நீங்க
இருக்கீங்க. பணிவிடை செய்ய பொறுப்பா நான் இருக்
கேன். அனாதையாட்டம் அவனை நான் ஆஸ்பத்திரியில்
தங்க அனுமதிக்க மாட்டேன். உங்களுக்கு மீறிய கேஸாக

இருந்தால் ஸ்பெஷலிஸ்டுகளை கூப்பிட்டுப் பார்க்க ஏற்பாடு செய்திடலாம்; பணத்தைப் பத்திக் கவலைப்பட வேண்டாம். அவனுக்கு இல்லாத பணம் இங்கே யாருக் கும் தேவையில்லை'' முடிவாகக் கூறி விட்டாள்.

ரேவதி முடிவில் ஒப்புக் கொண்டாள். அன்று இரவு கீழேயிருந்த பெரியதொரு படுக்கையறையில், கட்டி லின் மீது மிருதுவான படுக்கையில் அவனைப் படுக்க வைத்தாள். ரேவதி ஏற்பாடு செய்திருந்த நர்ஸ், உடலைத் துடைத்துச் சுத்தப்படுத்தி சுத்தமானதொரு மெல்லிய துணியை வேட்டியாகக் கட்டி விட்டுப் போர்த்தி விட் டிருந்தாள்.

ரேவதி தேவையான மருந்துகளை ஊசி மூலம் செலுத் தினாள். ''சுதாவின் பிரயாணக் களைப்புத் தீரும் வரை நர்ஸ் கவனித்துக் கொள்ளட்டும்'' என வற்புறுத்தலாகக் கூறி விட்டுச் சென்றாள்.

இரவு வெகு நேரம் சென்ற பின்னர்தான் மற்ற எல்லோரும் வீடு திரும்பியிருந்தனர். மறு நாள் காலை ஆபீஸிற்குக் கிளம்ப கீழே இறங்கிய பொழுதுதான் மித்திரன் கவனித்தான். பூஜை அறை பக்கத்து அறையில் தாடியும், மீசையுமாக இருந்த கிழவன் யார்? யார் அந்த வேண்டாத விருந்தாளி? அவனுக்கு எரிச்சலாக வந்தது.

காப்பி சாப்பிட சாப்பாட்டறையில் யாவரும் உட் கார்ந்தபோதுதான் சீதா சொன்னாள்.

''நான் ஒரு பத்து நாளைக்கி ஆபீஸ், தொழிற்சாலை எங்கியும் வர மாட்டேன். எனக்கு வீட்டோட இருந்து நீலுவைக் கவனிக்கணும்.''

''நீலுவா?'' ஆத்திரமாக ஓங்கி ஒலித்தது அவன் குரல்.

''கிராமத்தில் எங்க பக்கத்து வீட்டுக்காரன். வெகு நாளைய சிநேகிதம். உறவு விட்டுப் போகலாம். ஆனால்,

சிநேகிதம் அறுந்து போகக் கூடாது. அவனுக்கு உடம்பு சரியில்லை; இங்கேயே வச்சுக் கவனிக்கிறதுன்னு நான் முடிவு பண்ணிட்டேன்.''

மித்திரன் பற்களைக் கடித்தான். மனைவியை அர்த்த பாவத்துடன் பார்த்தான்.

''அதுக்கு வீட்ல எதுக்காக வைத்யம் பார்க்கணும்? ஆஸ்பத்திரி இருக்கே! தாராளமாக கவனிக்கலாமே!'' அத்தையை ஏளனமாக வெறித்தான்.

''இந்த வீடு என் வரைக்கும் வீடாவே இருந்ததில்லை. இப்போ ஆஸ்பத்திரியா மாறினா ஒண்ணும் கெட்டுப் போயிடாது. மேலும் என் பிரச்சினைகளைப் பத்தி மத்த வர்கள் கிட்ட விவரிக்க எனக்குப் பொழுதில்லே. ஆபீஸ்ல நான் கவனிக்க வேண்டிய பைல்களை மானேஜர் இங்கே எடுத்துண்டு வரட்டும். நான் இல்லாமல் ஒன்றும் குடி முழுகிடாது.''

''உங்க இஷ்டம்'' கூறி விட்டு அவன் எழுந்தான். தன் ப்ரீஃப் கேஸுடன் புறப்பட்டான்.

விடுக்கென்று எழுந்த லலிதா சீதாவிடம் எதுவும் பேசாது மாடிக்குப் போய் விட்டாள். திலீப்பும் ரதியும் திருதிருவென விழித்து விட்டு மெல்ல நழுவினர்.

ஒரு வார காலம் ஓடிச் சென்றது. டாக்டர் ரேவதி அன்றாடம் இரு வேளைகள் வந்து நோயாளியைக் கவனித் தாள். இரண்டு ஸ்பெஷலிஸ்டுகளை வரவழைத்து அவனைப் பரிசோதிக்க ஏற்பாடு செய்தாள். சீதா ஓயாமல் அயராமல் அலுப்பையும் பாராமல் பொறுப்பாகப் பணி விடை புரிந்தாள்.

தாடியும் மீசையுமாக அழுக்குப் பிடித்த பிச்சைக் காரனைப் போலிருந்த நீலு, இப்போது முற்றிலும் புதிய

தொரு மனிதனாகி விட்டிருந்தான். தோளில் வழிந்த பரட்டை முடி சீராக வெட்டப்பட்டு, தாடி மீசை மழிக்கப் பட்டு சுத்தமாக இருந்தது. அவனுக்கென்று சீதா தருவித்த புதிய ஜிப்பா வேட்டி, இஸ்திரி மடிப்புடன், மொட மொடத்தது. வெள்ளை வெளேரென்ற படுக்கை விரிப்பின் மீது...உயரமாக அடக்கியிருந்த மிருதுவான தலையணை யில் சாய்ந்து கொண்டு பத்திரிகையைப் புரட்டிய நிலை யில் அவன்—அந்தப் பெரிய பங்களாவின் யஜமான் போல கம்பீரமாகத்தான் அவன் இந்த வயதிலும் காணப்பட்டான்.

அன்று காலை சீதா அவனுக்காகத் தயாரித்த ஓட்ஸ் கஞ்சியை டம்ளரில் ஊற்றி எடுத்துக் கொண்டு வந்தாள். நீலு வழக்கம்போல் அதை வாங்கிக் குடித்து விட்டுத் துண்டால் துடைத்துக் கொண்டான்.

பத்திரிகையை மடித்து வைத்தான். தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.

''சீதா! என் உடம்பு இப்போ நன்னா தேறிடுத்து. இன்னும் ரெண்டு நாளிலே கிளம்பலாமனு இருக்கேன்.''

''எங்கே!'' சீதா அதட்டினாள்.

''என் போல ஆசாமிக்கு இந்தப் பரந்த பாரத கண்டத் திலே இடமா இல்லே!''

''நீ எங்கேயும் போகப் போறதில்லே. இதுதான் உன் வீடு. தெரிஞ்சுக்கோ'' சீதா கண்டிப்புடன் கூறினாள்.

''இதனால் உனக்கு ரொம்பக் கஷ்டம் ஏற்படும் தெரியுமா?''

''நீலு! நீ எனக்காகப் பட்ட கஷ்டங்கள்ளே ஆயிரத் தில் ஒரு பங்கு கூட இருக்காது. சின்ன வயசில் துணி வோட எனக்கு ஒரு நல்ல நண்பனா துணையா இருந்தே. இந்த வயசிலே தன்னந்தனியே தடுமாறிக் கொண்டிருக்

கிற எனக்கு உன் உற்சாகமான பேச்சுத் துணை தேவை. அதனால் நீ எங்கியும் போக அனுமதிக்க மாட்டேன்'' ஆவேசமாக அவள் பேசினாள். ஹா! ஹா! என அவன் உரக்கச் சிரித்தான். வீடு முழுவதும் அந்த உற்சாகமான சிரிப்பில் கலகலத்தது.

''உன் உடம்பு கொஞ்சம் தேறட்டும். பிறகு கேக்க லாம்னு இருந்தேன் நீலு! நான் ஹாஸ்டல்லே படிச் சிண்டு இருந்தப்போ ஒரு தடவை வந்துட்டுப் போனே. அதுக்கப்புறம் திடீர்ன்னு உன்னைப் பத்தியே ஒரு தகவ லும் இல்லாமே போயிட்டுது. இத்தனை வருஷத்துக்கப் புறம் இப்பத்தான் நாம சந்திச்சோம். இடையில் நீ என்ன பண்ணிண்டு இருந்தே? உன்னைப் பத்தி நினைச்சு நான் எத்தனை நாள் வருத்தப்பட்டிருக்கேன் தெரியுமா? நான் இவ்வளவு பெரிய பங்களாவில் பாலும் பழமும் சாப்பிட் டுண்டு சொகுசா வாழ்ந்திண்டிருக்கேனே, நீலு சாண் இடம் கூட இல்லாம பட்டினியோட யார் வீட்டுத் திண்ணை யிலியோ, இல்லே மரத்தடியிலோ படுத்திருக்கானோ. இப்படியெல்லாம் நினைச்சு என் மனசை போட்டுக் குதறிக் கொண்டு வருந்தியிருக்கேன். நம்புவியா நீலு!''

''நம்பறேன் சீதா...உன்னை எனக்குத் தெரியாதா? உன் மேல் மனஸ்தாபம் பட்டுண்டு நா—ஒளிஞ்சு வாழலை. வேலை கிடைச்சப்போ உனக்குப் பணம் அனுப்பினேன். நன்னா படிச்சா உனக்கு உபகாரச் சம்பளம் கிடைக்கும்னு தலைவி என்கிட்டே சொல்லி இருந்தா. எனக்கே சாப் பாட்டுக்குத் திண்டாட்டமாயிடுத்து. உன் படிப்புக்கு அனுப்ப முடியலே.''

''அதைப் பத்தி கேட்கலை நீலு! நீ வடக்கே எதுக் காகத் திரிஞ்சுண்டிருந்தே?''

''அதுவா? அது ஒரு கதை. வேடிக்கையானது. இத்தனை வருஷம் கழிச்சு இப்ப நீயும் நானும் சந்திச்ச மாதிரி, அப்போ வடக்கே எனக்கும் ஒரு சந்திப்பு ஏற்பட்டது.''

''புரியும்படியா சொல்லேன்.''

''என் அக்கா செத்துப் போனதும் எங்கப்பா என்னையும் அம்மாவையும் விட்டுட்டு தலைமறைவாக ஓடிட்டார். அது உனக்கும் தெரியும். அக்காவின் துர்மரணத்தாலே, அவர் மனசு வெறுத்து சந்நியாசியாப் போய்ட்டார்னு ஊர்லே பேசிண்டா. ஆனா அவருக்குக் குடிப் பழக்கம் உண்டு என்கிறதும், எத்தனை காலம் ஒளிவு மறைவில் இந்தக் காரியத்தை அதிலும் ஆசார அனுஷ்டானங்களில் நம்பி வாழும் கிராமத்தினர் நடுவே செய்ய முடியும்? உண்மை அம்பலமாகி விட்டால்? அதுக்குப் பயந்துதான் ஓடி விட்டார். அம்மாவுக்கு இந்த உண்மை தெரியும். பதிபக்தி அவள் வாயைத் திறக்கலே.''

''பாவம் உங்கம்மா!''

''வடக்கே வேலைக்கு அலைஞ்சேன். அப்ப அலகாபாத்தில் ஒரு வங்காளி நண்பன் கிடைச்சான். அவனும் என்னைப் போல அன்னாடம் காய்ச்சி. எனக்கு வேலை இல்லாத சமயம். எனக்கும் சோறு போட்டான். அவன் தம்பி ஜுரத்திலே ஆஸ்பத்திரியில் கிடந்தான். அவனைப் பார்க்கக் கிளம்பிய சிநேகிதனுடன் நானும் ஆஸ்பத்திரிக்குப் போனபோதுதான் அந்தச் சந்திப்பு!''

''யாரோட நீலு!''

''சாக்ஷாத் என்னைப் பெத்த அப்பாவோட ஒரு சந்திப்பு. அதே வார்டில் அவரும் ஒரு நோயாளி, என்னைக் கண்டதும் அப்பா அடையாளம் கண்டு கொண்டு விட்

டார். 'ஓ' என அழுதார். 'நீலு! என்னை ஊருக்கே அழைச்சுண்டு போயிடு. காவேரி தீரத்திலே என்னைக் கரையேத்திடுடா'ன்னு கையைப் பிடுச்சுண்டு கதறினார்.

''ஊருக்கு அழைச்சிண்டு போனியா நீலு?''

''எப்படி முடியும்? அவர் குடிச்சு லிவர் கெட்டு சாகக் கிடந்தார். அந்த நிலையில் ஒரு ஊருக்குத்தான் அவர் போக முடியும். அலகாபாத்துக்கு வந்துட்டு காவேரியைப் பத்தி ஏன் நினைக்கணும்? திரிவேணி சங்கமத்திலே புண்ணிய க்ஷேத்திரத்திலேயிருக்கிற ஊர்லதான் அவர் முடிவுன்னு புரிஞ்சுடுத்து. காவேரியும் கங்கையும் ஒண்ணு. தெற்கும் வடக்கும் ஒண்ணுதான்னு சொல்லிட்டேன். அவர் காரியத்தை மகன் அப்பனுக்குச் செய்கிற கடைசி கைங்கரியத்தையும் முடிச்சேன்'' நீலு குரல் கம்ம சற்று நிறுத்தினான்.

''உடனே ஊருக்குத் திரும்பி இருக்கலாமே?'' சீதா கேட்டாள்.

''எப்படி முடியும்? இந்த வயசில என் அப்பாவை நம்பி ஒருத்தி அவரிடம் மாட்டிண்டிருந்தா. என் சித்தி ஒரு வட நாட்டுப் பெண். வறுமை, வைதவ்யம் என்று அவளுக்கு வாரி வழங்கிட்டு அப்பா போயிட்டார். அவளே ஒரு நோயாளி. எனக்கு புள்ளை குட்டி கிடையாது. இந்த மனுஷனை நம்பி இத்தனை வருஷம் கூட இருந்தேன். இப்ப என்ன செய்வேன்னு அழுதாள். அவளைக் காப்பாத்த கொஞ்ச காலம் அங்கியே கிடைச்ச வேலையைச் செய்துண்டு தங்கி இருந்தேன். அவள் காலம் முடிஞ்சதும் கிளம்பினேன் ஊருக்கு.''

''அம்மாவைப் பாத்தியா? எப்படி இருந்தாள்?'' ஆவலோடு கேட்டாள் சீதா.

''ஹ¯ம்! அவளுக்கும் கொள்ளி போடத்தான் போனேன். அம்மாவும் உடம்பு சரியில்லாம இருப்பதா தகவல் கிடைச்சுது. உடனே பார்க்கணும்னு தோணித்து. படுத்த படுக்கையா நாதியத்துக் கிடந்தவளைப் பார்த்த தும் என் மனசெல்லாம் வலிச்சுது. ஆனா பாவம்! அவ ளுக்கு எம்மேலே துளிக்கூட கோபமில்லை...''

''உன் தாயார் கள்ளங்கபடமற்ற வெகுளியாச்சே. தெரியுமே! கழுத்துச் சங்கிலியை எடுத்துண்டதுக்குக் கூடச் கோவிச்சுக்கலையா?''

''விவரம் தெரிஞ்சு அம்மா என்ன சொன்னா தெரி யுமா? எனக்கு வாழ்வு கொடுக்காத சங்கிலி அந்தப் பெண் ணுக்காவது வாழ்வு கொடுத்ததே. அது போதுண்டா, இப்பவாவது நிசத்தைச் சொல்லுடா. சீதா சௌக்யமா இருக்காளா?''ன்னு கேட்டா. ''அவ சௌக்யமா படிச் சுட்டு நல்ல வேலையில் இருக்காம்மான்னேன். அம்மா என் கையை எடுத்துக் கண்ணில் ஒத்திண்டா. நல்லதே செய்ற இந்தக் கையால, இந்தம்மாவுக்கு கொள்ளி போடுடா கண்ணா! எனக்கு அழுகை பிச்சிண்டுது. எத்தனை வெள்ளை மனசு அவளுக்கு!'' அவன் குரல் தடைப்பட்டது.

''அப்போ அப்பா போய்ட்ட சமாச்சாரத்தைச் சொல்ல லியா?''

''ஊஹ¯ம்! என் தாயை நினைவு தெரிஞ்ச நாள்ளே யிருந்து பூவும் பொட்டுமா பல கஷ்டங்கள் நடுப்பற சிரிச்ச முகத்தோட பார்த்த அந்த அழகான நினைவை உண்மையைச் சொல்லி கலைக்க விரும்பவில்லை. அதனாலே அப்பாவைப் பத்தி சொல்லாம—அவளைச் சுமங்கலியாகவே கரையேத்தி விட்டேன்.''

''மஞ்சளும் குங்குமமுமா போய்ட்டா'' சீதா நெகிழ்ந்தாள். ''ஆனால் ஊராருக்குத் தெரிஞ்சு விட்டிருந்ததா?'' கேட்டாள்.

''ஊரார்?...அம்மாவின் பிணத்தை எரிக்கக் கூட நம்ம மனுஷா யாரும் உதவி செய்யலே. நான்தான் அயோக்ய னாச்சே. கட்டுப்பாடா உங்க அப்பா உள்பட வரலே. அதனால் என்ன? குடியானத் தெருவிலே என் சிநேகிதக் காரப் பசங்களை கூட்டிண்டேன். சிவப்பு சல்லா துணி போட்டு மூடி பூமாலை, மஞ்சள், குங்குமத்தோட அம்மாவை ஜாம்ஜாம்னு எடுத்துண்டு போய் காவேரிக் கரையில் கொள்ளி போட்டேன். அப்படியே காவேரிலே தலை முழுகினேன். அந்த ஊருக்கே முழுக்கு. இரண்டாம் தடவையா...''

சீதா லேசாக விம்மினாள். அலமேலுவின் முடிவு அவளைப் பாதித்திருந்தது.

''நாங்க இருந்த வீடு மாமாவோடது. அவா புடிச்சிண் டுட்டா. அப்புறம் என்ன ஆகாயமே கூரை பூமியே வீடுன்னு ...சந்திச்சவனெல்லாம் சொந்தக்காரன்னு வாழ்ந்துட்டேன்'' முடித்தான் அவன்.

''ஆமா! அந்த கடைக்காரன்—மன்மாட் நிலையத் திலே ரொம்ப சிநேகமா?'' திடீரென நினைவு வந்தவளாய் கேட்டாள்.

''ஒரு விபத்து மூலமாக சிநேகிதம். கேட்டா அதிசயச் சுடுவே! அந்த ஒல்லி மனுஷன் வசிச்ச பகுதியிலே நானும் பக்கத்திலே ஒரு வீட்ல இருந்த சமயம் ஒரு நாள் சாயந்திரம் அவர் வீட்லே நெருப்பு பிடிச்சுண்டுது. உள்ளே அவரது மூணு வயசுக் குழந்தை. நெருப்பை மீறி உள்ளே போக எல்லாருக்கும் பயம். அலறிண்டே வெளியே நின்னா. என்னால சகிக்க முடியலே. தைரியமா பாஞ்சு குழந்தையைத் தூக்கிண்டு ஓடி வந்தேன். அதுக்கு அடையாளம் கூட வச்சிருக்கேன் பாரு'' என்றபடி தீப் புண் காய வடுக்களைக் கொண்ட கையை நீட்டினான்.

சீதா நெஞ்சுருகிப் போனாள். இந்த நீலுவிற்கு இத்தனை சுத்தமான, விசாலமான, அன்பான இதயமா?

''என்ன யோசிக்கிறே? எப்பப் பாரு சதா வம்பு தும்பில மாட்டிக்கிற ஜன்மம்டா இவன்னு நினைக்கிறியா!'' நீலு சிரித்தான்.

''இல்லே, நீலு! நீ அப்படி உதவி செஞ்சுட்டுகூட காப்பிக்கு அவன் கிட்ட காசு குடுத்தியேன்னு நினைச்சேன்!''

''சே! சே! நீ இன்னும் என்னைப் புரிஞ்சுக்கலை. இனாமா அவன் காப்பியைச் சாப்பிட்டா, என் உதவியை காசுக்கு வித்த மாதிரி ஆகி விடும். அத்தனை மட்ட மானவனா நான் சீதா!'' நீலு புன்னகை செய்தான்.

''நீ எப்படிப்பட்டவன்னு தெரியும். இப்போ நீ இதெல்லாம் சொன்னதும் நீ என் கண் முன்னே எப்படி இருக்கே தெரியுமா?''

மீசை தாடியெல்லாம் இல்லாமல் வெள்ளை சொக்காய் போட்டுண்டு...நீலு கள்ளமற்றுச் சிரித்தான்.

''அடியும் முடியும் தெரியாம, அர்ஜுனனை, பிரமிக்க வைத்து விஸ்வரூபத்திலே தரிசனம் குடுத்தாரே கிருஷ்ண பரமாத்மா, அந்தத் திருவுருவிலே, உன் மனசோட தாராளத்தின் அடியும், முடியும் தெரியாம நான் பிரமிக்கிறேன். நீலு? நீ உண்மையிலேயே மனிதனா அல்லது தேவனா?'' உணர்ச்சியுடன் கேட்டாள் சீதா.

நீலு வழக்கம்போல் வேடிக்கையாகச் சிரித்தான். ''பயித்தியக்காரி என்னை நன்னா பார். நான் சாதாரண மானவன். குற்றங்கள் நிறைந்த பலவீன உணர்வுகளுக்கு அடிமையாகும் கேவலமான ஒரு மனிதன். என்னைச் சாமி யாக்காதே'' மீண்டும் சிரித்தான். சீதாவின் கண்களினின் றும் முத்துக்கள்போல் நீர் உருண்டு கீழே சிதறியது.

9

அன்று மாலை, கல்லூரியிலிருந்து திரும்பி வந்த திலீப்பும், ரதியும் காப்பி டிபனை அவசரமாகச் சாப் பிட்டு விட்டு அந்த அறைக்குள் மெல்ல எட்டிப் பார்த் தார்கள்.

நீலு கட்டிலின் மீது ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந் தான். கொஞ்ச நாட்களுக்கு முன்பு—வாயில் வராந்தாவில் கந்தல் மூட்டையும் கையில் கொம்புமாக உட்கார்ந்திருந்த அந்த அழுக்குப் பிடித்த கிழவனுக்கு இத்தனை பெரிய யோகமா! எரிச்சலுடன் தோளைக் குலுக்கிக் கொண்டு சகோதரியைப் பார்த்தான் திலீப்.

மாடிக்குப் போய் பேசுவோமோ...ஜாடை காட்டி னாள் அவள். அன்று அந்த வீட்டில் அவர்களைத் தவிர யாரும் இருக்கவில்லை. ஒரு அவசர விஷயமாக முதல் முதலாக ஒரு வாரத்திற்குப் பின்னர் ஆபீஸ் வரை போயிருந்தாள் சீதா.

காலையில் கணவனுடன் புறப்பட்டு வெளியே சென்ற லலிதா இன்னமும் வீடு திரும்பவில்லை. நீலு வந்ததிலிருந்து அவளுக்கு அந்த வீட்டிலே இருப்பே கொள்ளவில்லை...வெகு நேரம் சென்றபின்தான் மித்திரன் வீடு திரும்புவான் என்பது எல்லோருக்கும் தெரிந்த சங்கதி.

மாடி ஹாலுக்குள் சோபாவின் மீது வந்து உட்கார்ந்த ரதிதான் முதலில் பேச ஆரம்பித்தாள்.

''அம்மாவும் அப்பாவும் நேத்து ராத்திரி பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். அப்பா ரொம்பக் கோப மாக இருக்கிறார்'' என்றாள்.

''கிழவனைப் பத்தித்தானே? எனக்குக் கூட ஆத்திரமா வருது. யார் இவன்! இங்கே வந்து உட்கார்ந்துண்டு இவனுக்கு ராஜோபச்சாரம்...பத்திண்டு வருது'' திலீப் ஆத்திரப்பட்டான்.

''அப்பா அம்மாகிட்ட நேத்து ராத்திரி பேசிண்டு இருந்ததைக் கேட்டேன்...அப்பத்தான் புரிஞ்சுது...'' ரதி மர்மமாகப் பேசினாள்.

''குட்டையை குழப்பறே...விஷயத்தைப் பிட்டு வையேன்'' எரிந்து விழுந்தான் திலீப்...

''இந்தக் கிழத்தைப் பிச்சைக்காரன்னு விரட்டினோமே...அன்னிக்கு சீதா ஆன்டி முகத்தைப் பார்த்தியே—ஞாபகம் இருக்கா?...'' ரதி கேட்டாள்.

''இல்லே!'' பொறுமையற்று தலையை ஆட்டினான் திலீப்.

''அவங்க முகம் திடீர்னு வெளுத்துப் போச்சு. அப்பவே எனக்கு ஒரு மாதிரி சந்தேகம்—இப்ப அம்மா சொன்னதைக் கேட்டதும்...?'' இழுத்தாள் அவள்.

''போரடிக்காதே...சீக்கிரம் விஷயத்துக்கு வா...'' எரிந்து விழுந்தான் அவன்.

''ஆமாம், நிதானமா எந்த விஷயத்தையுமே நீ கேட்க மாட்டே. சீதா ஆன்டி கிராமத்தில் இருக்கிறச்சே இந்தக் கிழவன் நீலு பக்கத்து வீட்டுத் தடிப் பயலாம். அப்பவே அவனுக்கு ஆன்டி மேல் ஒரு கண்...சின்ன வயசிலே ஆன்டிக்குக் கல்யாணம் ஆகி புருஷன் செத்துப் போயிட்டானாம்...''

''மீதி எனக்குத் தெரியும்... பக்கத்து வீட்டுப் பையனுடன் ஆன்டி ஓடிப் போய் விட்டாள். அதுதானே?''

''கரக்ட். அந்தப் பக்கத்து வீட்டுத் தடிப் பயல்தான்

இந்தக் கிழவன் நீலு...ஓடிப் போய் கொஞ்ச நாள்ளே அவர்களுக்குள்ளே ஏதோ சண்டை வந்து பிரிஞ்சு போய்ட்டாளாம். இப்போ இத்தனை வயசுக்குப் பிறகு மீண்டும் ...சந்திப்பு...'' சிரித்தாள் ரதி.

''இல்லே! நீ சொல்றது தப்பு. இவன் தேடிண்டு இங்கே வந்தப்போ நாம்தான் பிச்சைக்காரன்னு விரட்டிட்டோமே?''

''நம் ஆன்டி, ஒரு ரிலிஜியஸ் டூர் போனாளே—அங்கே இவனைச் சந்திச்சாளாம். அழைச்சிண்டு வந்திருக்கா.''

''சீதா ஆன்டியைப் பார்த்தா இந்த மாதிரி காரியம் செய்கிறவளாட்டமாவே இல்லையே. எத்தனை பதுவிசா இருக்கா?''

''ஆன்டி ஓடிப் போனப்போ அவளுக்கு வயசு அறுபதா? பதினைந்து வயசு. நம்பளைப்போல ஒரு டீன் ஏஜ் வயசு.''

''இந்தக் கிழவிக்கு அந்தச் சின்ன வயசிலே இத்தனை பெரிய ரொமான்சா...மை காட்!...''களுக்கென்று சிரித்தாள் ரதி. ''ஓல்டு லேடி...லேசு பட்டது இல்லை...வாரே வாஹ்! திலீப், இந்தக் கிழவனை சீதா ஆன்டி 'மன்மாட்'ங்கிற இடத்திலே சந்திச்சதா சமையற்கார மாமா கிட்ட சொல்லிண்டு இருந்தா...ஆமாம்! மன்மாட் எங்கே இருக்கு!''

''நான்தான் பூகோளத்திலே பூஜ்யம்னு தெரியுமே. இரு. பார்த்துச் சொல்றேன்'' திலீப் ஓடிச் சென்று புத்தக அலமாரியைத் திறந்து தேச வரைபடத்தைப் பிரித்துப் பார்த்தான். ''மன்மாட்...இது வடமேற்கே...பூனா அருகில் இருக்கு...எனக்கு ஒரு ஐடியா...'' ரதி குதித்தாள்.

''கிழக்கே போகும் ரயில்னு ஒரு படம் வந்தது—

மேற்கே ஒரு குன்றம்னு கதை படிச்சோம். இப்ப நம்ப வீட்டிலே நடக்கிற இந்த நாடகத்துக்கு வடக்கே ஒரு சந்திப்புன்னு பேர் வச்சா...தமாஷா இருக்காது!'' கையைத் தட்டி கலகலவென்று சிரித்தாள்.

''ரொம்பப் பொருத்தமாக இருக்குமே...இத்தனை வயசுக்கு மேலே பழங்காதலர்களின் வடக்கே ஒரு சந்திப்பு...ஓ! ரொம்ப ரொமாண்டிக்...ஹோ...ஹோ!''

இருவரும் விழுந்து விழுந்து சிரித்தனர். பின்னால் லேசான காலடி ஓசையைக் கேட்டு அதிர்ந்து போய் இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

ஒரு கையில் கட்டு ஆபீஸ் பைல்களுடன் சீதா நின்று கொண்டிருந்தாள். அவள் முகமும் கண்களும் கோபத்தில் செவேலென்றிருந்தன.

''இப்பத்தான் வரேளா ஆண்டி''—உளறினான் திலீப்.

''என்னைப் பத்தி நீங்க வம்பு பேச ஆரம்பிச்சப் போதே வந்துட்டேனே'' அழுத்தமாகக் கூறினாள் சீதா.

ரதி அரண்டு போனாள். திலீப் கொட்டக் கொட்ட விழித்தான்.

சீதா அவர்களைச் சினம் பொங்க சில கண நேரம் உறுத்துப் பார்த்தாள். பிறகு சோபாவில் அமர்ந்தாள். ''இப்படி வாங்கோ. உங்ககிட்ட பேசணும்'' அவள் அதட்டினாள். எச்சிலை விழுங்கியபடி இருவரும் எதிரே வந்து நின்றனர். ''அத்தனை மரியாதை தேவையில்லை...உட்காருங்க'' உத்தரவிட்டாள். அவர்கள் சிறிது பயத்துடன் அமர்ந்தனர். ''நீங்க ரெண்டு பேரும் ஸயன்ஸ் ஸ்டுடென்ட்ஸ். உங்களுக்குப் பொதுவா நம் நாட்டுச் சரித்திரத்தைப் பத்தி அதிகமா தெரிஞ்சிருக்க நியாயமில்லை. தெரிஞ்சிக்கனும்கிற விருப்பமும் உங்களுக்குக் கிடை

யாது. சரித்திரத்திலே ரொம்ப தூரம் போக வேண்டாம். ஒரு நூறு வருஷத்துக்கு முன்னாலே நம் சமூகத்திலே இருந்த பழக்க வழக்கங்களைப் பத்தி தெரிஞ்சு கொள்ள நீங்க எப்போதாவது முயற்சி செய்ததுண்டா?'' திலீப் வேகமாக நகத்தைக் கடித்தான். ரதி தன் மாக்ஸியின் மடிப்பை விரலால் நெருடினாள்.

''நீங்க நினைக்க மாட்டீங்க. ஏன்னா உங்களைப் பத்தியேதான் உங்களுக்குச் சிந்தனை...அப்படி வளர்ந்து கொண்டு வரும் சுயநலத்தின் உருவந்தான்...இந்தக் காலத்து டீன் ஏஜ் என்கிற சமுதாயம்!''...இருவரும் மௌனம் சாதித்தனர். சீதா வெறுப்புடன் தொடர்ந்தாள். ''நூறு வருஷங்களுக்கு முன்னால்—பத்துவயசுக் குழந்தையை அம்பது வயசுக்காரனுக்கு அஞ்சாம் கல்யாணம் பண்ணி வைக்கிற ஒரு கொடுமை பழக்கத்தில் இருந்தது. தப்பித் தவறி அந்தக் கணவன் செத்து விட்டால், இந்தப் பிஞ்சு விதவையை அவனோட சிதையில் நெருப்பிலே எரிய விடற ஒரு கொடுமையைப் பத்தி கேள்விப்பட்டிருக்கேளா?''

''ஆமாம்'' என இருவரும் தலையை ஆட்டினர்.

''அந்தக் குழந்தை எவ்வளவு வேதனையில் அலறித் துடிச்சு செத்திருக்கும்னு எப்போதாவது நீங்க நினைச்சுப் பார்த்ததுண்டா...ஊகும்...நினைச்சிருக்க மாட்டீங்க...''

''அதற்குப் பிறகு அந்தக் கொடுமை வழக்கம் அழிஞ்சு வேறு ஒரு வகைக் கொடுமை புலப்பட்டது. பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் அநீதி... ஐந்து—எட்டு வயசில் கல்யாணமாக—பிஞ்சிலே விதவையாயிட்டா ஒரு சில வருஷங்களுக்கு பிறகு அவளுடைய இளமைப் பருவத்தில் அவள் தலையை மழித்து—

அழகை சிதைத்து—வெள்ளைப் புடவையைக் கட்டி முக்காடு போட்டு ஒரு மூலையில் உட்கார வைத்து விடுவார்கள். காலம் முழுவதும் அவள் உடல்—உள்ளம்—உணர்வுகள் எல்லாமே ஊமையாகி விடும். அதைப் பத்திக் கேள்விப்பட்டிருக்கேளா? இப்படிச் சின்ன குழந்தைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை நினைச்சு எப்பவாவது உங்க மனசிலே துளியாவது வருத்தப்பட்டிருப்பேளா?...''

இருவரும் பரிதாபமாக விழித்தனர்.

''வருத்தப்பட்டிருக்க மாட்டீங்க. ஏன்னா அந்தக் காலத்திலே நீங்க இல்லே. தலை வலியும் ஜுரமும் தனக்கு வந்தால்தானே தெரியும்?...''

''ஒரு சினிமாவுக்கு டிக்கெட் கிடைக்கலேன்னா, ரதி உன் மூஞ்சி அறுந்து தொங்கிடறது. ஒரு சின்ன ஏமாற்றத்தைத் தாங்க முடியலை. வாழ்வு முழுவதும் உணர்வுகளை அடக்கி, அலங்கோல உருவத்தில்—யார் முன்னாலேயும் எதிர்ப்படாமல் ஒரு அவல வாழ்வை அனுபவித்தாகனும்னா அந்தக் குழந்தை மனசு என்ன பாடுபட்டிருக்கும்...இப்பவாவது உன்னாலே அதைப் பத்தி யோசிச்சுப் பார்க்க முடிகிறதா?''

கை விரல்களைச் சொடுக்கிக் கொண்டாள் ரதி. திலீப் சட்டைப் பித்தானைத் திருகிக் கொண்டு கீழ உதட்டைக் கடித்தபடி நின்றான்.

''இப்போ காலம் ரொம்ப மாறிட்டுது. ஒப்புக்கறேன். போன வருஷம் உன் அம்மாவோட அப்பா செத்துப் போனார். உன் பாட்டி பொட்டு பூவைத்தான் உதறினாள். பட்டுப் புடவை, கழுத்துச் சங்கிலி, காது வைரக் கம்மல் மூக்குத்திகளை எடுத்து பிறகு எறிஞ்சுட்டாளா? தலை

முடியை சீவி அழகா கொண்டை போட்டுக்கிறா. அதைப் பத்தி யாருமே வித்தியாசமா நினைக்கலியே? சமூகம் அப்படி மாறிட்டதே. இதே கதி இந்தக் காலத்து டீன் ஏஜ் பெண்ணுக்கு ஏற்பட்டிருந்தா, உடனே அவளுக்கு மறுமணம் செய்து வச்சிருப்பா இல்லையா? மாபெரும் சீர் திருத்தம் செய்துட்டதாகப் பெருமையா பேசிப்பார்கள். சமூக முன்னேற்றப் பாதையிலே ஒரு மைல் கல்லுன்னு சிலாகிப்பார்கள். நான் அந்தக் காலத்து குழந்தை விதவை. துணிவோட ஒரு சிறு புரட்சி செய்யாது பெரியவர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தா...டேய் திலீப்! இப்ப நீ இத்தனை பெரிய பங்களாவிலே ஏ.சி. அறையிலே தூங்கி—ஹெரால்ட் ராபின்ஸ் படிச்சுண்டு கத்தை கத்தையா சிகரெட் ஊதிண்டு திரிஞ்சிருக்க முடியாது.''

''ரதி நீ விதத்துக்கு ஒரு அலங்காரத்தில் ஊரைச் சுத்திண்டு காரிலே பவனி வந்திண்டிருக்க முடியாது. தெரிஞ்சுக்கோ. இந்த வாய்ப்பைக் கொடுத்த நீலுவுக்கு நான் கடமைப்பட்டிருக்கேன். அவரை மட்டமா நீங்க பேசறதை இன்னொறு தடவை நான் கேட்டேன், நான் ரொம்பப் பொல்லாதவளா இருப்பேன் ஜாக்கிரதை!'' சீறினாள்.

திலீப் நடுநடுங்கிப் போய் விட்டான். ''ஆன்டி வந்து...''

''ஷட் அப்! போதும். பேசறதும் பேசிட்டுப் பொய் சொல்லத் தேவையில்லே'' மடமடவென்று எழுந்து அவள் தன் அறைக்குள் பைல்களை மேஜை மீது வீசி விட்டு வெளியே வந்தாள்.

மறு நாள் காலை காப்பி டிபன் சாப்பிட அவர்கள் மூவரும் வந்து உட்கார்ந்தனர். மித்திரன் எழுந்து சென்று இடைக் கதவை மூடினான். சீதா கேள்விக் குறியுடன் அவனைப் பார்த்தாள்.

''உங்களோட கொஞ்சம் பேசணும். சமையற்காரர் காதில் பட்டு நம்ம குடும்ப மானம் கப்பலேறுவானேன்னு அவர் கதவைச் சாத்தினார்'' லலிதா விளக்கம் செய்தாள்.

சீதாவிற்கு சிரிப்பு வந்தது.

மித்திரன் துணிவுக்கு மனைவியின் முகத்தைப் பார்த்தான். ''அத்தை! நீங்க நடந்துக்கறது ஒண்ணும் நன்னாவேயில்லை'' என்றான் கோபத்துடன்.

சீதாவிற்கு எரிச்சல் வந்தது. என்ன விஷயம் தெளிவா சொல்லேன்.''

''அப்பா எனக்குச் சொன்னதுதான். மறக்க வேண்டிய பழய சங்கதின்னு நான் பாராட்டினதே கிடையாது; இப்போ இந்த வயசிலே மறந்து போன கதையை அம்பலப்படுத்தற மாதிரி அந்தக் கிழவனைக் கொண்டு வந்து இங்கே நம்ம வீட்டிலேயே வச்சுண்டு...சீ! சீ! இதை நாங்கள்ளாம் பாத்துண்டு சும்மா இருக்கணுமா?'' படபடத்தான்.

''அப்பா உனக்கு என்ன சொல்லி இருக்கார்'' நிதானமாகக் கேட்டாள் சீதா.

''நான் வெட்ட வெளிச்சமா சொல்லணுமோ? உங்களுக்கும் அந்தத் தடிப் பயல் நீலுவுக்கும் ஏற்பட்ட தொடர்பு, நீங்க செய்த தவறு எல்லாமே சொல்லி இருக்கார். இப்போது அதெல்லாம் அவசியமா?'' கடுமையுடன் கேட்டான்.

''உங்கப்பா சொன்ன அந்தத் தவறை அன்னிக்கு நான் செய்யாம இருந்திருந்தா நீ இன்னைக்கு இங்கே உக்கார்ந்திருந்திருப்பியா? நான் எப்படி இருப்பேன்னு உனக்குத் தெரியுமா? யார் வீட்டிலியோ சமையல் ஆளா இட்லிக்கு மாவரைச்சிண்டு உட்கார்ந்திருந்திருப்பேன்.''

''சரி! அந்தத் தவறாலே மகா மேருவைப் பிடிச்சுண்டேன். ஒத்துக்கறேன். அதுக்காக மறுபடியும் திரும்ப இந்த

வயசிலேயும் தவறு செஞ்சு எங்க மானத்தை வாங்கணுமா?'' சீறி விழுந்தான் அவன்.

''அவர் சொல்றதில் என்ன குத்தம்? எங்க குடும்பத்து காதில் இந்தச் சேதி விழுந்தா என் மானம் சிந்திப் போகும்'' கடுகடுத்தாள் லலிதா.

''நீலுவோட நான் புறப்பட்டுப் போன அன்னிக்கே நம்ம குடும்பத்து மானம் சிந்திப் போச்சே. இப்பத் திடீர்னு புதுசா அதுக்கு எங்கேயிருந்து மானம் வந்தது?''

''ரொம்பப் பேருக்கு உங்க கடந்த காலத்தைப் பத்தித் தெரியாது.''

''அப்படியா? உங்கப்பாவுக்குத் தெரியும். அவர் மூலமாக உனக்குத் தெரியும். அப்படியிருந்தும் நீங்கள் எல்லோரும் வலிய வந்து என்கிட்டே வந்து ஒட்டிண்டேள். ஏன்? என் காசு பணத்துக்கு முன்னால் உங்க மானம் சின்னதா போயிட்டுது இல்லியா?'' சீதாவின் குரல் உயர்ந்தது.

''அத்தே! நீங்க ரொம்ப துண்டரீகமாகப் பேசறேள். முடிவாக் கேட்கிறேன். அந்தக் கிழவனை என்ன செய்யறதா உத்தேசம்?''

''ஊறுகாயா போடுவேன்? நீலு இனிமே இங்கேயே என்னோடதான் இருப்பான். ஏன் கேட்கிறே?''

''இந்த வீட்ல இருப்பான்னா, இந்த வயசிலே நீங்க அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறதா முடிவு செஞ்சிட்டேளா?'' கேலி பொங்கியது மித்திரன் குரலில்.

''அப்படித்தான் வச்சுக்கோயேன்!'' சீதா பிடிவாதம் பிடித்தாள்.

''சிரிப்புத்தான் வருது.''

''ஏன் சிரிக்கணும்? கிழவியைக் குமரன் காதலிச்சால் தவறில்லை. எத்தனையோ இந்தக் காலத்துல நடக்கிற தில்லையான்னு வக்கிரமா விவாதிப்பியே, அதை ஏத்துக் கற நீ, கிழவன், கிழவி காதலித்துக் கல்யாணம் பண் றதைக் கண்டு ஏன் வெறுக்கணும்? வெட்கப்படணும்?''

''உங்களோட பேச முடியாது. உங்க புத்தி ஸ்வா தீனத்தில் இல்லைன்னு நினைக்கிறேன். இல்லாட்டா இப்படி கோணலா நினைக்க மாட்டேள். ஒண்ணு மட்டும் சொல்றேன்...இன்னும் இருபத்து நாலு மணி நேரத்துக் குள்ளே, அந்தக் கிழவன் இடத்தைக் காலி பண்ணனும். இல்லே நாங்க இங்கே இருக்க மாட்டோம். அடுத்த நாளே என் வேலையை ராஜினாமா பண்ணிட்டு நான் போறேன்.''

''என்னடா பயமுறுத்தறியா? நான் பனங்காட்டு நரி. அதுக்கெல்லாம் அசந்துட மாட்டேன். நீலு இந்த வீட்டை விட்டுப் போக மாட்டான். நீயும் உன் குடும்ப மும் இப்பவே கிளம்பினாலும் நான் தடுக்கப் போற தில்லை. ஏன்னா இங்கே என் கூட இருந்து நீங்க சாதிக்கப் போறது எதுவுமில்லே. அதனால நீங்க போனா தனிமை யில் செத்துப் போய்ட மாட்டேன். தொழிற்சாலையி லிருந்து நீ ராஜினாமா செய்துட்டா அதுக்காகவும் கவலைப் பட மாட்டேன். இனிமே நான் யாருக்காக கஷ்டப்பட்டு சம்பாதிக்கணும்? எல்லாத்தையும் வித்து வந்த பணத்தைப் பாங்க்ல போட்டு வர்ற வட்டியில் ஹாய்யா மிச்ச காலத் தில் நிம்மதியா இருப்பேன். கடைசில ஒண்ணு சொல் றேன். மகாத்மா காந்தி சொல்லி இருக்கார். நீ படிச்சிருக் கியோ என்னவோ, ஒரு ஆணுக்குக் கல்வி கத்துக் குடுத்தா அது அவனுக்கு மட்டும்தான் உதவுறதாம். அதுவே, ஒரு பெண்ணுக்குக் கத்துக் குடுத்தா ஒரு குடும்பமே கல்வி கத்துகறதுன்னு. அப்படி என் கல்வி நம்ப குடும்பத்தை

முன்னுக்குக் கொண்டு வந்தது. அதுக்குக் காரணம் நீலு. அப்படிப்பட்டவனை எதுக்காக வீட்டை விட்டு நான் போகச் சொல்லணும்? மாட்டேன். நீ போகறதும் இருக் கிறதும் உன் இஷ்டம்'' மூச்சு விடாமல் பேசி விட்டு அவள் வேகமாக எழுந்து சென்று விட்டாள்.

சிறிது பொழுதில் ஆளுக்கு ஒரு பெட்டி சகிதம் மித்திரன் குடும்பம் கிளம்பி விட்டது. சீதா ஒன்றும் பேசா மல் பெருமூச்சுடன் உட்கார்ந்திருந்தாள். வளர்த்து ஆளாக்கி மனிதனாக்கி மணம் செய்வித்து வாழ்வும் கொடுத்ததற்கு மித்திரன் அளிக்கும் பரிசு இதுதானா? அவளுக்கு அதிர்ச்சி யாக இருந்தது. வெகு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாள்.

பிற்பகல் மணி பன்னிரண்டு அடித்ததைக் கண்டு துணுக்குற்று எழுந்தாள். நீலுவுக்கு ஆகாரம், மருந்து தர வேண்டும். மறந்து விட்டாளே.

பரபரப்புடன் படிகளில் இறங்கினாள். சமையற்கார சங்கரன் கஞ்சிப் பாத்திரத்துடன் வந்து கொண்டிருந்தார்.

அறைக் கதவைத் திறந்து கொண்டே, ''பசிக்கிறதா நீலு? இதோ சாப்பாடு வந்து விட்டது'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் திடுக்கிட்டு பேச்சிழந்து நின்றாள்.

நீலுவின் படுக்கை காலியாக இருந்தது. வேகமாக குளியலறையைத் திறந்து உள்ளே பார்வையிட்டாள். முன்னறைக்குள் தேடினாள். நீலுவைக் காணோம்; அதற்குப் பதில் காற்றில் படபடத்த காகிதத் துண்டு, கண்ணாடி பேப்பர் வெயிட்டின் அடியில் இருந்ததைக் கண்டாள். அவசரமாகப் படித்தாள்—

''அன்புள்ள சீதா!

உன் உதவிக்கு மிக்க நன்றி. என் வரவால் அமைதியான உன் வாழ்வு சீர் குலைவதை என்னால்

சகித்துக் கொள்ள முடியவில்லை. உன் அண்ணனின் குடும்பம் உன்னைத் தரக் குறைவாகப் பேசியதைக் கேட்டு மனம் நொந்து போய் விட்டேன். இத்தனை காலம் ஒன்றாக வாழ்ந்த நீங்கள் ஏன் பிரிய வேண்டும்? அதனால் நான் போகிறேன். ஆசிகள்.

என்றும்
உன் நண்பன்
நீலு.''

''நம்ப வீட்ல விருந்தாளியா இருந்த ஐயா உலாவப் போறதைப் பார்த்தியா?'' ஓட்டமும் நடையுமாகச் சென்று வாயில் காப்போனை விசாரித்தாள்.

''பார்த்தேன். அரை மணிக்கு முன்னால்தான் அவர் இந்தப் பக்கமா போனார்'' பதில் வந்தது.

சீதாவின் நெஞ்சைத் துன்பம் அடைத்தது. கண்களில் நீர் துளிர்த்தது. சமாளித்தபடி டிரைவரைக் கூப்பிட்டுக் காரை எடுக்கச் சொன்னாள். காரில் ஏறியவள் ஒரு மணி நேரம் சாலையில் இரு பக்கமும், இங்குமங்குமாகத் தேடினாள். முடிவில் பார்த்து விட்டாள். பஸ் நிலையத்தில் கூட்டத்தில் முகத்திலே வீசிய வெய்யிலில் கழியை ஊன்றிக் கொண்டு மூட்டையுடன் அவளது நீலு...! கதவைத் திறந்து இறங்கினாள் அவசரமாக.

''நீலு! காரில் ஏறி உட்கார், எல்லோருமா சேர்ந்து பழி வாங்கறேளா என்னை?'' மெதுவாகக் கேட்டாள்.

சுற்றிலும் நின்றவர்கள் அவர்களைப் பார்ப்பதைத் தவிர்க்க விரும்புகிறவன் போல அவன் தட்டுத் தடுமாறி காரினுள் ஏறிக் கொண்டான்.

வழி நெடுகிலும் அவர்கள் ஏதும் பேசவில்லை. பங்களாவிற்குள் நுழைந்து கார் வாசலில் நின்றதும்

இறங்கி கதவைத் திறந்து கையை நீட்டி அவனை இறங்க உபசரித்தபோதுதான் அவன் முகத்தைப் பார்த்தாள். சாம்பல் பூத்தது போன்று வெளிறி, முத்து முத்தாக வியர்வை பூத்துக் கொண்டிருந்தது. கண்களில் தாங்கொணாத வேதனை.

''நீலு! என்ன உனக்கு? ஏன் இப்படி இருக்கே!'' பதறினாள் சீதா.

''கார்த்தாலே பிடிச்ச நெஞ்சு வலி. நீ கோபமாக அவாளோட பேசிண்டு இருந்தே. நான் வேறே இதைச் சொல்லி உன்னைக் கலவரப்படுத்தக் கூடாதுன்னு அவசரமா ஒரு துண்டுக் கடுதாசி எழுதி வச்சிட்டுப் புறப்பட்டுட்டேன். பஸ் பிடிக்க நடந்த போதே வயிறு வலிச்சது. இப்ப ரொம்ப ஜாஸ்தியாயிடுத்து!''

சீதா அவனைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொணர்ந்து கட்டிலின் மீது படுக்க வைத்தாள். உடனடியாக தோழி டாக்டர் ரேவதிக்குப் போன் செய்தாள்.

அருகே கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். ''நீலு உண்மையைச் சொல்லு, உனக்கு உடம்பை என்ன பண்றது? என்ன வேணும்னு சொல்லு, சாப்பிடக் கொண்டு வரச் சொல்றேன்.''

இதயத்தின் மீது கையை வைத்துக் கொண்டு திணறிய நீலு அவளை இரக்கமாகப் பார்த்தான்.

''ஒண்ணே ஒண்ணு செய்வியா சீதா! அப்பவே நான் சொல்லி இருக்கேன். நீ பூவும் பொட்டுமா இருக்கணும்னு. நீ ஏன் அதையெல்லாம் விட்டுட்டே, போ. போய், பொட்டு வச்சிண்டு வா...'' மூச்சு தடுமாறியது.

சீதா கண் கலங்கினாள். விருக்கென எழுந்து பக்கத்து பூஜை அறையிலிருந்து குங்குமச் சிமிழிலிருந்து குங்கு

மத்தை விரலால் தோய்த்து நெற்றியில் வைத்தாள். அம்பாள் படத்தில் சாத்தியிருந்த பூவைத் தலையில் சூடிக் கொண்டு வேகமாக வந்தாள்.

நீலுவின் உதட்டில் அந்தக் கோணல் சிரிப்பு மலர்ந்தது. கண்கள் பளபளத்தன.

''இப்ப நீ எப்படி இருக்கே தெரியுமா சீதா! உங்கப்பா நம்ப ஊர் கோவில் அம்மனுக்கு வெள்ளிக் கிழமையில் பூப்பாவாடை சாத்தி விசேஷ அலங்காரம் பண்ணுவாரே. அப்ப அம்பாள் அலங்காரமாக இருக்காப்ல இருக்கே. அப்படியே நீ இரு!'' அவன் கண்கள் செருகத் துவங்கின.

சீதா பதறிப் போய், ''நீலு! அவா என்னவோ பேசி உன் மனதைத் துன்பப்படுத்திட்டாடா நீலு. அதான் நெஞ்சில் வலி உனக்கு.''

''மூக்தைலாக் புராச்சாஹே—தோசியா ஹோத்தா
வஹீ ஹோக்தா மன்ஸுக்குநா ஹோத்தா''

நீலு சிரமப்பட்டுக் கண்களைத் திறந்து அவளைப் பார்த்து முறுவலித்தான். மெதுவாக முனகினான்.

''நீலு...நீ எத்தனை பெரியவன், எனக்கும் ஆண்டவனுக்கும் தெரியும் நீலு!'' அரற்றியபடியே சீதா தன் கண்ணீரில் அவன் பாதங்களைக் கழுவினாள். நீலு எனும் நல்லவனின் உயிர் மெல்ல அடங்கியது.

நிறைந்தது